# உதயன்

பக்கங்கள்

விலை ரூபா 30.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 090 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 12 ஞாயிற்றுக்கிழமை (24/02/2013) UTHAYAN - A Lively National Tamil Daily



பக்கம் 22
பொன் அணிகள் போர்: சமநிலை





பக்கம் 7
கேள்விகளுக்கு பதிலில்லை





பக்கம் 1 சூரியகாந்தி
பிருந்தாவனமும் நந்தகுமாரனும்





பக்கம் 6 சூரியகாந்தி
எல்லோரும் ஈனர்கள் அல்லர்




## சிங்கள நடுவரை வெளியேற்றுமாறு சென்னையில் மைதானம் முற்றுகை

சென்னை,பெப்.24

சென்னையில் நடைபெறும் கிரிக்கெட் போட்டியில் நடுவராக இருக்கும் இலங்கையைச் சேர்ந்த சிங்களவரான தர்மசேனாவை வெளியேற்ற வலியுறுத்தி தந்தை பெரியார் திராவிடர் கழகத்தினர் நேற்று சென்னை சேப்பாக்கம் மைதானத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர்.

அண்மையில் விடுதலைப் புலி

பார்க்க பக்கம் 04

### கூட்டமைப்பின் குழுவினர் 28ஆம் திகதி ஜெனிவாவுக்கு

TNA Tamil National Alliance தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.24

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரின் 22 ஆவது அமர்வில் பங்குபற்றுவதற்காக எதிர்வரும் 28 ஆம் திகதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 4 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜெனிவா பயணமாகவுள்ளனர்.

இந்தத் தகவலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் உறுதிப்படுத்தினார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 22 ஆவது கூட்டத்தொடர் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. நான்கு

பார்க்க பக்கம் 04

# ஐ.நாவுக்கு இலங்கை ரகசியமான அறிக்கை

## பான் கீ–மூனிடம் நேரில் வழங்கினார் பாலித



நியூயோர்க், பெப்ரவரி 24

இலங்கை மீதான மனித உரிமை மீறல்கள்,போர்க் குற்றச்சாட்டுகள் ஆகியவற்றை நிராகரிக்கும் இரகசிய அறிக்கை ஒன்றை ஐ.நா பொதுச் செயலர் பான் கீ–மூனிடம் இலங்கை அரசு கையளித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வு நாளை திங்

பார்க்க பக்கம் 04

### சென்னை காங்கிரஸ் அலுவலகம் முன் ஈழ ஆதரவாளர்கள் போராட்டம்

சென்னை, பெப்.24

ஈழத்தமிழர்களை அழிக்க இலங்கைக்கு உதவியதாகக் குற்றஞ்சாட்டி, சென்னையில் உள்ள தமிழக காங்கிரஸ் அலுவலகமான சத்தியமூர்த்தி பவனை மே 17 இயக்கத்தினர் நேற்று முற்றுகையிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற முள்ளிவாய்க்கால் இறுதிக்கட்ட போரின்போது, ஈழத்தமிழர்களை கொன்றொழிக்க உதவியதாக மத்திய காங்கிரஸ் அரசை கண்டித்து, சென்னை அண்ணா சாலையில் உள்ள தமிழக காங்கிரஸ் அலுவலகமான சத்தியமூர்த்தி பவனை, மே 17 இயக்கத்தினர் நேற்று முற்றுகையிட்டனர்.

அப்போது, காங்கிரஸ் மற்றும் பிரதமர் மன்மோகன் சிங், அப்போதைய அமைச்சரான பிரணாப்

பார்க்க பக்கம் 04

### எரிபொருள் விலைகள் நேற்று எகிறின

கொழும்பு, பெப்.24

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அரசு எரிபொருள்களின் விலையை அதிகரித்துள்ளது. இந்த விலை அதிகரிப்பு நேற்று முதல் நடை

பார்க்க பக்கம் 04

## 13 ஆவது திருத்தம் தொடர்பில் வாக்கெடுப்பு நடத்த வேண்டும்

### கோருகிறார் கோத்தபாய



கொழும்பு, பெப்.24

இலங்கை- இந்திய அரசின் ஒப்பந்தத்தின்படி கொண்டுவரப்பட்ட அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தச் சட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டுமா?, இல்லையா? என்பது தொடர்பில் மக்களிடையே வாக்கெடுப்பு நடத்த வேண்டும்- என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனநாயக ஆட்சி நடைபெறும் நாட்டில் பெரும்பான்மை

பார்க்க பக்கம் 04

### 13 ஆவது அரசியல் திருத்தம்

## விட்டுக் கொடுப்பு கிடையாது

### அடித்துக் கூறுகிறார் மன்மோகன் சிங்



புதுடில்லி,பெப் 24

தமிழர் பகுதிகளுக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கும் அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக இலங்கை அரசு அளித்த வாக்குறுதி விடயத்தில், எந்த விட்டுக் கொடுப்புக்கும் இடமில்லை என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

பார்க்க பக்கம் 04

## கச்சதீவுத் திருவிழாவை அரசியலாக்கும் டக்ளஸ்

### வட மாகாண மீனவர் அமைப்புகள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,பெப்.24

கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அரசியல் மயப்படுத்த முனைகிறார். இவர் தனது சுயநல அரசியல் தேவைக்காக இந்தியா- இலங்கை மீனவர்களிடையே நிரந்தர விரிசலை ஏற்படுத்த முனைகிறார் என வடமாகாண மீனவர் அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

பார்க்க பக்கம் 04

## மக்களை குறிகாட்டுவானில் அந்தரிக்கவிட்டு தனிப்படகில் கச்சதீவுக்குச் சென்றார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், பெப்.24

கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் பங்கு பற்றுவதற்காக நேற்றுச் சனிக்கிழமை காலை குறிகாட்டுவான் துறைமுகத்தைச் சென்றடைந்த மக்கள் நீண்டநேரமாக கால் கடுக்க வெயிலில் காத்திருந்தனர். அந்தவேளையில் அங்குவந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினர் அங்கு கூடியிருந்த மக்களையும் கவனிக்காமல் வடதாரகை படகில் ஏறி கச்சதீவுக்குச் சென்றனர்.

அதன் பின்னர் குறிகாட்டுவானுக்கு வந்த யாழ். மாவட்டத்தின்

பார்க்க பக்கம் 04






## உதயனுக்கு அழைப்பில்லை

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவினால் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்புக்கு 'உதயனுக்கு' அழைப்பு விடுக்கப்படவில்லை.

யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவினால் பலாலி இராணுவத் தலைமையகத்தினுள் நேற்றுக் காலை ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று நடத்தப்பட்டது.

ஊடகவியலாளர் சந்திப்புக்குரிய ஒழுங்குகள் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏனைய ஊடகங்களுக்கு நேற்றுமுன்தினம் மாலையே மேற்படி ஊடகவியலாளர் சந்திப்புக்குரிய அழைப்பு விடுக்கப்பட்டது.

ஆனால் 'உதயனுக்கு' மேற்படி ஊடகவியலாளர் சந்திப்புக்குரிய அழைப்பு விடுக்கப்படவில்லை. யாழ்.நகர சிவில் பாதுகாப்பு அலுவலகத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் 'உதயனை', யாழ். மாவட்ட இராணுவத் தளபதி கடுமையாக விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(த-1)

## வடமாகாணத்துக்கும் தென்னிந்தியாவுக்கும் நீண்ட காலமாக கலாசார ஒற்றுமை

### இந்தியத் தூதுவர் அசோக் காந்த்

யாழ்ப்பாணம்,பெப்,24

வடக்கு மாகாணத்துக்கும், இந்தியாவின் தென் பகுதிக்கும் இடையே கலாசார ஒற்றுமை இருக்கின்றது. இந்த இணைப்பின் காரணமாகவே யாழ்ப்பாணத்தில் புதிய இந்திய கலாசார நிலையத்தை திறந்து வைத்திருக்கின்றோம். இதனை விட விசாலமான இந்திய கலாசார மையம் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படும்.

இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக். கே.காந்த் தெரிவித்தார்.

யாழ். நகரிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தியன் கோணர் இந்தியக் கலாசார மையத்தை நேற்றுக்காலை இந்தியத் தூதுவர் அசோக்.கே. காந்த் மற்றும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

இதன் பின்னர் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே இந்தியத் தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:-

இந்திய அரசினால் பல்வேறுபட்ட உதவிகள் இந்தப் பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டுவருகின்றன. இந்தப் பகுதிகளின் புனரமைப்பு - மீள் கட்டுமானம்- என்பவற்றுக்கு கலாசார முன்னேற்றம் முக்கியமானது.

புதுடில்லி கலாசார மையத்தினாலேயே 'இந்தியன் கோணர்' திறந்து வைக்கப்படுகின்றது. தற்போது 27 மாணவர்கள் வரையில் ஹிந்தி,கர்நாடகம், வயலின் இங்கு பயின்று வருகின்றனர். எனவே இந்த இடத்தைவிட விசாலமான இடத்தில் விரைவில் இந்திய கலாசார மையம் அமைக்கப்படும்.

வட மாகாணத்திலுள்ள தமிழர்களுக்கும் தென்னிந்திய தமிழர்களுக்கும் இடையில் கலாசார ஒற்றுமையிருக்கின்றது. இந்த இணைப்பின் காரணமாகவே இந்த கலாசார நிலையத்தைத் திறந்து வைக்கின்றோம்.

இந்தியப்புலமைப்பரிசில் திட்டங்களையும் இந்தவருடம் இந்தியா அதிகரித்துள்ளது. இதற்குப் பல வட பகுதி மாணவர்களும் விண்ணப்பித்திருக்கின்றனர். எதிர்வரும் மார்ச் 5 ஆம் திகதி இந்தியத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் இந்தியக் கல்விச் சந்தை நடத்தப்படவுள்ளது - என்றார். (த-5)

## இந்தியாவினால் இப்போது ஒன்றும் செய்ய முடியாத நிலை

### மனோ கணேசன் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,பெப்.24

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை முழுமையாக அழித்துவிட வேண்டுமென்ற இலக்கு இந்திய மத்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் இருந்தது. அதனாலேயே பொதுமக்கள் இழப்புக்களைப் பற்றிய எந்தவிதமான அக்கறையுமில்லாமல் போர் நடத்தப்பட்டது. அன்று இலங்கையைப் பாதுகாத்த இந்தியா, இன்று ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றது. மத்திய அரசு உதவிசெய்ய விரும்பினாலும் அதைச் செய்ய முடியாத ஒரு சூழல் ஏற்பட்டுள்ளது. இதற்கான முழுப்பொறுப்பையும், வழங்கிய உறுதிமொழிகளை காப்பாற்றத் தவறிய இலங்கை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :-

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை முழுமையாக அழித்துவிட வேண்டுமென்று பொதுவான இலக்கு, இறுதிக்கட்டப் போரின் போது இந்திய மத்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் இருந்தது. அதனாலேயே பொதுமக்கள் இழப்புகளைப் பற்றிய எந்தவித அக்கறையும் இல்லாமல் போர் நடத்தப்பட்டது.

பொதுமக்கள் இழப்புக்களைப் பற்றி, மேற்குலக நாடுகள் அந்த வேளையில் குரல் எழுப்பிய போதெல்லாம் இந்திய அரசு, இலங்கை அரசின் பெரியண்ணனாக இருந்து, சின்னத்தம்பியைக் காப்பாற்றியது.

இலங்கையில் போருக்கும், சமாதான அரசியல் தீர்வுக்கும் இடையில் தடையாக இருப்பது விடுதலைப் புலிகள் தான் என்றும், அந்த இயக்கம் அழிக்கப்பட்டால் இலங்கையில் சமாதானம் ஏற்படும் என்றும், போர் முடிந்தவுடன் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி அதை மேலும் முன்கொண்டு செல்ல இலங்கை அரசு தயாராக இருப்பதாகவும், இந்திய அரசியல் தலைவர்கள் எங்களுக்குச் சொன்னார்கள்.

போர் முடிந்து 4 வருடங்கள் கடந்து செல்கிறது. இலங்கை அரசு எந்த அரசியல் தீர்வையும் முன்வைக்கவில்லை. மேலும் இந்தியாவின் குழந்தை 13 ஆவது திருத்தம் முதல் பல உரிமைகளை இலங்கை அரசு வெட்டிக் குறைத்து இந்தியாவின் கன்னத்தில் பலமுறை அறைந்துவிட்டது.

எனவே இந்திய அரசால், இலங்கையை இனியும் காப்பாற்ற முடியாது. இந்த அரசை நம்பி வாழுங்கள் என்று எமக்கு ஆலோசனை செய்யும் நிலையிலும் இந்திய மத்திய அரசு இல்லை. இன்று தமிழகம் உட்பட இந்தியா முழுவதிலும் வாழும் மக்கள் மத்தியில் உறுதியாக ஏற்பட்டுள்ள அபிப்பிராயம் இதனையே வெளிப்படுத்துகின்றது.

இந்த அபிப்பிராயத்தை இந்திய மத்திய அரசு மீற முடியாது. இதற்கான முழுமையான பொறுப்பையும், இந்தியாவுக்கும் உலகத்துக்கும் அளித்த அனைத்து உறுதிமொழிகளையும் காற்றில் பறக்கவிட்ட இலங்கை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும் - என்றார். (த-5)

## சங்கரியின் கருத்து தனிப்பட்டது

இலங்கைக்கு எதிரான ஜெனிவாத் தீர்மானத்தில் இந்தியா நடுவு நிலைமை வகிக்க வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்திருக்கும் கருத்தாகும். அவரின் தனிப்பட்ட கருத்தோடு அது இலங்கைத் தமிழரசுக் கட்சியினதோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடையதோ அல்ல.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் அதன் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் கொழும்பில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

இலங்கைக்கு எதிராக, அமெரிக்காவினால் கொண்டு வரப்படுகின்ற பிரேரணையை, இந்தியா எதிர்க்கவோ, ஆதரிக்கவோ கூடாது. நடுவு நிலைமை வகிக்க வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்த சங்கரி தெரிவித்திருந்தார். இந்தக் கருத்து அவரது தனிப்பட்ட கருத்து என்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியினதோ அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்பினதோ அல்ல என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்றும் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.(த-5)

## கூட்டமைப்பின் பதிவுக்காக உயர் குழுவை அமைக்க முடிவு

யாழ்ப்பாணம்,பெப்.24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள ஐந்து கட்சிகளும் ஒன்றாகச் செயற்படுவதென்றும், கட்சிப் பதிவு உட்பட சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக ஐந்து கட்சிகளையும் உள்ளடக்கியதாக உயர்குழு அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கின்ற ஐந்து கட்சிகளுக்குமிடையிலான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக்கூட்டணி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர். எல்.எவ். ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவு செய்வதா? இல்லையா? என்பது தொடர்பாக ஆராய்வதற்காக ஐந்து கட்சிகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாகக் கட்சி உயர்குழுவை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐந்து கட்சிகளும் ஒற்றுமையாக இயங்குவதென்றும், மத்திய, மாவட்டத்தில் சகல கட்சிப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய சபையை அமைப்பது என்றும் இதில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஒவ்வொரு கட்சிகளும் தங்களின் நிலைப்பாட்டை விளக்கிப் பிரேரணையைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் 20ஆம் திகதி கட்சி மீண்டும் கூடும்போது உயர் குழு தொடர்பிலும், கட்சிப் பதிவு தொடர்பிலும் கலந்துரையாடப்படும்- என்றார். (த-5)

## காணிகளைப் படையினர் சுவீகரிப்பர்

### ஹத்துருசிங்க திட்டவட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ்.மாவட்டத்தில் படைத்தரப்பின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகள் சுவீகரிக்கப்படும். இதனால் பாதிக்கப்படும் மக்களுக்கு நஷ்ட ஈடுகள் வழங்கப்படும். யாழ். மாவட்ட இராணுவத் தளபதி இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

யாழ்மாவட்டத்தின்பொறுப்பு வாய்ந்த அரச அதிகாரியான யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் எவையும் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்துள்ள நிலையில், ஹத்துருசிங்க இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்.மாவட்டத்தில் படையினரின் கட்டுப்பாட்டில் 11 ஆயிரத்து 284 ஏக்கர் காணி இருந்தது. இதில் 5ஆயிரத்து 282 ஏக்கர் காணி மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 6ஆயிரத்து இரண்டு ஏக்கர் காணிகளும் மக்களிடம் கட்டம் கட்டமாகக் கையளிக்கப்படும்.

ஆனால் இந்த 6 ஆயிரத்து இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் 80 சதவீதமானவை அரச காணிகள். படையினர் படைமுகாம்கள் அமைப்பதற்கு காணிகள் தேவை. இதற்காகச் சில தனியார் காணிகளைச் சுவீகரிக்க வேண்டி ஏற்படலாம்.

இதற்கு யாழ்ப்பாணத்தின் தற்போதைய காணி பெறுமதிக்கே நஷ்டஈடு வழங்கப்படும். மேலும் சில இடங்களில் கண்ணிவெடி அகற்றப்படவில்லை. அந்தப் பகுதிகளில் கண்ணிவெடி அகற்றல் முடிந்ததும் மக்கள் குடியமர்த்தப்படுவார்கள் -என்றார். (த-1)

## இந்தியப் படையினருக்கு பலாலியில் நினைவுத் தூபி

### இந்தியத் தூதுவர் அஞ்சலி

யாழ்ப்பாணம்.பெப்.24

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சூழலில் 1987 ஆம் ஆண்டு சுட்டுக்கொல்லப்பட்ட இந்தியப் படையினருக்கு, பலாலியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிக்கு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் மற்றும் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி இணைந்து அஞ்சலி செலுத்தினர்.

1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்திய அமைதிப்படையினர் யாழ்ப்பாணத்துக்கு அமைதியை நிலைநிறுத்தவென வந்தனர். அவ்வேளையில் யாழ். மாவட்டத்தை கட்டுப்பாட்டில் வைத்திருந்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்துக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. யாழ்.பல்கலைக்கழக சூழலில் பரசூட் மூலமாகத் தரையிறங்க முயன்ற இந்திய இராணுவத்தினரை தமிழீழ விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றனர். அதனால் 32 இராணுவத்தினர் சாவடைந்தனர்.

இவர்களுக்கான நினைவுத் தூபி பலாலி இராணுவ நிலையத்துக்கு அண்மித்ததாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதற்கு யாழ்.மாவட்டத்துக்கு நேற்று வருகைதந்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா, துணைத் தூதுவர் வி.மகாலிங்கம், இந்திய விமானப்படைத் தளபதி, யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

அதன்பின்னர் கருத்துத் தெரிவித்த யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, இந்திய இராணுவ வீரர்களை தரையிறங்குவதற்கு முன்னர் வானில் வைத்தே விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றது சர்வதேச போர்க் குற்றமெனத் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை அரசு இறுதிக்கட்டப் போரில் சர்வதேசப் போர் விதிமுறைகளை மீறியதாகத் தெரிவித்து அமெரிக்காவினால் ஜெனிவாவில் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணையை இந்தியா ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-1)

## பஸ் கட்டணம் அதிகரிக்கும்

பெற்றோல் மற்றும் டீசலின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், தனியார் பஸ்கட்டணங்களும் அதிகரிக்கும் என்று அகில இலங்கை தனியார் போக்குவரத்து சங்கம் அறிவித்துள்ளது. எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கலந்துரையாடப்படுவதாகவும் இது தொடர்பில் கூட்டறிக்கையொன்று வெளியிடப்படும் என்றும் அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். (த)


ஆடைகளில் அச்சுக்கலை பயிற்சி யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக

FABRIC PRINTING TRAINING

Since1989 Archanah ACADEMY
TEXTILE PRINTING INSTITUTION
Branches in India:- CHENNAI, TIRUVANANTHAPURAM, MUMBAI, HYDERABAD, BANGALORE, COCHIN & CALICUT, COIMBATORE, TRICHY.

இந்தியாவில் புகழ்பெற்ற ஆடைகளில் அச்சுக்கலை நிபுணர், விஜய் டிவி மற்றும் பொதிகை டிவி புகழ் Dr. R.பரதராஜா அவர்களின் நேரடி பயிற்சி யாழ்ப்பாணத்தில் முதல்முறையாக... பயிற்சியில் பங்கு பெறுங்கள், பயனடையுங்கள்.



நாள்: பெப்ரவரி 25, 26 (திங்கள், செவ்வாய்)

நேரம்: காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை

இடம் : Park View Hotel 107, Kandy Road Opp. Old Park

பயிற்சி கட்டணம் : ரூ.3,500/-

E-mail : artsnframes@gmail.com Web : www.archanahacademy.com

பதிவுகளுக்கு : 21 22 9900 , 077 77 22 181, 077 77 22 818, 075 61 52 434

# வாழ்வின் எழுச்சிக்கு இந்த ஆண்டு 160 மில். ரூபா இந்த செலவிடத் திட்டம்

## யாழ். செயலக அறிக்கையில் தகவல்

*யாழ்ப்பாணம், பெப்ரவரி 24*

*வாழ்வின் எழுச்சி வேலைத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு 14 வேலைத் திட்டங்களுக்கு 160 மில்லியன் ரூபா செலவு செய்யப்படவுள்ளது என்று மாவட்ட செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் ஊடாக 5 லட்சம் பேர் வரையில் பயனடைவார்கள் என்றும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.*

தென்னங்கன்று விநியோகத்திற்கு 20.01 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனூடாக ஒரு லட்சத்து 60 ஆயிரத்து 80 பேர் பயனடைவார்கள். பழமரக்கன்று விநியோகத்துக்கு 37.95 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனூடாக ஒரு லட்சத்து 79 ஆயிரத்து 500 பேர் பயனடைவர்.

ஆடு மற்றும் கோழி வளர்ப்புக்கு 62.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனூடாக 2 ஆயிரத்து 500 பேர் பயனடைவார்கள். நண்டு வளர்ப்புக்கு 1.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனூடாக 30 பேர் பயனடைவார்கள்.

மீன் உணவு உற்பத்திக்கு 0.19 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனூடாக 5 பேர் பயனடையவுள்ளனர். கடல் தாவர உற்பத்திக்கு 0.72 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனூடாக 20 பேர் பயனடையவுள்ளனர். மீன் பெட்டியுடன் கூடிய சைக்கிள் கொள்வனவுக்கு 6.33 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 275 பேர் பயன்பெறவுள்ளனர்.

ஊதுபத்தி உற்பத்திக்கு 0.40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 40 பேர் பயனடையவுள்ளனர். மெழுகுவர்த்தி உற்பத்திக்கு 1.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது. 100 பேர் பயனடையவுள்ளனர்.

காகிதாதி உற்பத்திக்கு 1.25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன். 25 பேர் பயனடையவுள்ளனர். கற்பூர உற்பத்திக்கு 1.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 150 பேர் பயனடையவுள்ளனர்.

சிற்பி உற்பத்திக்கு 1.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 40 பேர் பயனடையவுள்ளனர். குடிசை கைத்தொழில் உற்பத்திக்கு 8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 658 பேர் பயனடையவுள்ளனர். உபகரணங்கள் வழங்குவதற்கு 16.99 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆயிரத்து 699 பேர் பயனடையவுள்ளனர்.- என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

### காலங்கடந்த திருமணப் பதிவு

வடமராட்சி, பெப்.24

துன்னாலைப் பகுதியில் திருமணப் பதிவு செய்யாத 50 குடும்பங்களுக்கு காலங்கடந்த திருமணப் பதிவு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கலிகை கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் சி.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டிப் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக அந்தப் பகுதியைச் சேர்ந்த கிராம சேவையாளர் எஸ்.ஸ்ரீரங்கநாதன், வி.லவித் ஆகியோர் பங்குபற்றுவர்.

துன்னாலை கிழக்கு, துன்னாலை மேற்கு , துன்னாலை தெற்கு ஆகிய கிராமங்களில் வசித்துவரும் திருமணப் பதிவு செய்யாத குடும்பங்களுக்கே திருமணப் பதிவு செய்து வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

### நிகழ்வுகள் இன்று

கலாசாரப் பேரவைப் பொதுக் கூட்டம்

தெல்லிப்பழைப் பிரதேச செயலக கலாசார பேரவையின் பொதுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலாளர் தலைமையில் தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலகத்துக்குட்பட்ட கலைஞர்கள், கலை ஆர்வலர்கள், கலைமன்ற பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம)

மருத்துவ முகாம்

மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாலய பழைய மாணவ மருத்துவர்கள் அடங்கிய மருத்துவக் குழுவினர் நடத்தும் இலவச மருத்துவ முகாம் காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மருத்துவர் எம்.கே.முருகானந்தன் தலைமையில் இடம்பெறும் இந்த மருத்துவ முகாமில் பற்சிகிச்சையும் உள்ளக்கப்பட்டுள்ளது என்று பழைய மாணவர் ஒன்றிய இணைச் செயலாளர் சி.சு.சண்முகசுந்தரம் தெரிவித்தார்.

பழைய மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள மருத்துவ முகாமில் உரிய சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.(ம-8)

பசுமை அமைதி விருது வழங்கும் நிகழ்வு

பசுமை அமைதி விருதுகள் வழங்கும் நிகழ்வும் நங்கூரம் சமூக அறிவியல் ஏட்டின் நடப்பு ஆண்டின் தொடக்க இதழ் வெளியீடும் வீரசிங்கம் மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா தலைமையில் நிகழ்வு நடைபெவுள்ளன.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விவசாயபீட பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனும், தொழிலதிபர் இ.ச.பே. நாகரத்தினமும் கலந்துகொள்வர். (3)

### வீதிப் பணியாளரை மோதிய மோ. சைக்கிள்

தென்மராட்சி, பெப்.24

ஏ-9 வீதியிலிருந்து பிரிந்து செல்லும் வீதிகளுக்கு 'காப்பெற்' போடும் பணி நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் வாகனங்களை ஒரு வழியாகச் செலுத்துமாறு நெறிப்படுத்துவதில் ஈடுபட்டிருந்த மாகா கம்பனி பணியாளரை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மோதியது.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் சாவகச்சேரி சங்கத்தானையில் இடம்பெற்றது.

சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞரும் பணியாளரும் காயமடைந்தனர்.

பணியாளரான தங்கவேல் மனோகரன் (வயது-18), மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த மந்துவில் கிழக்கைச் சேர்ந்த சிவகுரு தனுஷன் ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-9)

### சாவகச்சேரி நகரில் வேகக் கட்டுப்பாட்டு குறியீடுகள்

சாவகச்சேரி நகர்ப் பகுதி ஏ-9 வீதியில் வேகக் கட்டுப்பாட்டு குறியீடுகள் அமைப்பதற்கான வேலையை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் ஆரம்பித்துள்ளனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி தொடக்கம் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் வரையிலான இரண்டு கிலோ மீற்றர் தூரத்துக்கு வேகக் கட்டுப்பாட்டு குறியீடுகள் பொருத்துவதற்கான கம்பங்கள் நடப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் பொதுமக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதனால் ஏ-9 வீதி அகலிப்பு செய்யப்பட்ட பின்னர் வாகனங்கள் வேகக் கட்டுப்பாடின்றிச் செல்வதால் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் குறியீடுகளை அமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி 50 இலட்சம் ரூபா பணம் மோசடி

யாழ்ப்பாணம்,பெப்.23

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி 50 இலட்சம் ரூபாவைப் பெற்று மோசடி செய்தமை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுழிபுரத்தைச் சேர்ந்த ஒருவரே இந்த முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். இத்தாலி நாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறியே பிரஸ்தாப நபரிடம் சந்தேக நபர் 50 இலட்சம் ரூபாவைப் பெற்றுள்ளார்.

எனினும் பல மாதங்களாகிவிட்ட போதும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் அது தொடர்பில் பாதிக்கப்பட்டவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ம-4-86)

## இரவில் சைக்கிள்களில் செல்வோர் வெளிச்சத்துடன் பயணிக்க அறிவுறுத்து

### யாழ் . மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்

யாழ்ப்பாணம், பெப்.24

யாழ். குடாநாட்டில் இரவில் சைக்கிளில் பயணிப்பவர்கள் வெளிச் சத்துடனேயே பயணிக்க வேண்டும். அது தொடர்பில் பொது மக்களுக்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு மாதத்தின் பின்னரும் வெளிச்சம் இன்றி சைக்கிளில் இரவில் எவராவது பயணித்தால் அவர்களுக்கும் எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் யாழ் . மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரத்ன.

யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ். குடாநாட்டில் இரவில் சைக்கிளில் பயணிப்பவர்கள் வெளிச்சத்துடனேயே பயணித்தல் வேண்டும்.

சைக்கிளில் டைனமோ பூட்டியோ அல்லது டோச் லைற் மூலமாகவோ வெளிச்சத்தை ஏற்படுத்தி பயணித்தல் வேண்டும்.

வெளிச்சம் இல்லாது பயணிப்பதாலும் விபத்துகள் அதிகம் ஏற்படுகின்றன.

அதிகமான விபத்துக்கள் இரவில் வெளிச்சம் இல்லாமல் பயணிப்பதாலேயே இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது.

இரவில் பயணிப்பவர்கள் இயன்றவரை வெள்ளை நிறமுடைய ஆடைகளை அணிந்து செல்வது பயனளிக்கும்.

பொதுவாக மோட்டார் சைக்கிளில் பயணிப்பவர்கள், கோயிலுக்குச் செல்லும் பெண்கள் ஒரு பக்கமாக இருந்து பயணிக்கிறார்கள்.

யாழ்ப்பாண மக்களின் பண்பாட்டைக் கருத்தில் கொண்டு அது தொடர்பில் கடுமையாக நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் அவர்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும்.

நீங்கள் செல்லும் வழிகளில் எங்காவது போக்குவரத்துக்கு இடையூறாக மரங்கள் விழுந்து கிடக்கின்றமை மற்றும் ஏனைய இடையூறுகள் காணப்படின் பொலிஸாருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

எமது நகரை நாமே சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். அதற்கு ஒவ்வொருவரும் புரிந்துணர்வுடன் செயற்படு தல் வேண்டும்.- என்று தெரிவித்தார். (ம-4-86)

## 4,832 ரூபா சில்லறை நாணயமே திருடப்பட்டது அனலைதீவு ஆலயத்தில்

### ஏனையவை தாளும், பவுண்ஸுமே எனக் கூறியிருந்தனர் ஆலயத்தினர்

யாழ்ப்பாணம், பெப்.24

அனலைதீவு ஐயனார் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற திருட்டு நடவடிக்கையின் போது, சில்லறைப் பணம் மாத்திரம் 4 ஆயிரத்து 832 ரூபா திருடப்பட்டுள்ளது.

அவற்றுடன் சேர்த்து 61 ஆயிரம் ரூபா இலங்கைப் பணமும், 200 பவுண்ஸ் வெளிநாட்டுப் பணமும் திருடப்பட்டுள்ளது.

இந்தப் பணம் ஆலயத்தின் அலுவலகத்தில் இருந்தே திருடப்பட்டுள்ளது என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

''உண்டியல்களில் சில்லறைகள் முடக்கம், மக்கள் விசனம்'' என்ற தலைப்பில் கடந்த 12 ஆம் திகதி உதயனில் செய்தி வெளியாகியிருந்தது. அது தொடர்பில் அந்த ஆலய நிர்வாகத்தினர் தெளிவுபடுத்தி அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக அதில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கடந்த 8ஆம் திகதி குறித்த ஆலயம் திறக்கப்பட்ட போது அலுவலகம் உடைக்கப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்த வரவு செலவுக்குரிய பணம் திருடப்பட்டிருந்தது.

ஆலய உண்டியல்கள் உடைக்கப்படவில்லை. திருடப்பட்ட பணத்தில் சில்லறை நாணயக் குற்றிகள் 4 ஆயிரத்து 832 ரூபா இருந்துள்ளது. - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-4)

## உளநல தொழிற்பயிற்சியாளரின் ஆக்கப்பொருள்கள் கண்காட்சி

தென்மராட்சி, பெப்.24

யாழ்.மாவட்ட உளநல தொழிற் பயிற்சியாளர்களால் தயாரிக்கப்பட்ட ஆக்கப் பொருள் கண்காட்சி நேற்று சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது.



மாவட்டத்தைச் சேர்ந்த உளநல பயிற்சி பெற்றோர் மற்றும் மாற்று வலுவுடையோரால் உருவாக்கப்பட்ட பல்வேறு ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

தென்மராட்சி கல்வி வலய உளநல ஆசிரிய ஆலோசகர் சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், யாழ். போதனா வைத்தியசாலை உளநல வைத்திய நிபுணர் சிவயோகன், வடமாகாண சமூக சேவைகள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் திருமதி ந.இன்பராஜ், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், யாழ். மாவட்ட பற்சிகிச்சை நிபுணர் ச.பாலகுமார், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கண்காட்சியில் யாழ். சாந்தியக நிறுவனம், யாழ். மாவட்ட சிறுவர் பெண்கள் உரிமைகள் திணைக்களம், பால் நிலை சார் வன்முறைப் பிரிவு, மாவட்ட மட்ட உளநல சேவைகள் பிரிவு, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சுய உதவிக் குழு, வடமராட்சி மற்றும் யாழ்ப்பாணம் விழிப்புலனற்றோர் சங்கங்களின் தொழிற் கூடங்கள், யாழ். மாவட்ட செவிப்புலனற்றோர் சங்கத்தின் ஆக்கப் பொருள்கள், பனம் பொருள், தைத்த ஆடைகள், பற்றிக் உற்பத்தி, கைப்பணிப் பொருள்கள், உணவுப் பொருள்கள், வீட்டுத் தோட்டப் பயிர்கள் போன்றவை காட்சிப் படுத்தப்பட்டிருந்தன.

பெரும் எண்ணிக்கையான மக்கள் கண்காட்சியைப் பார்வையிட்டனர். (ம-9)

## 13ஆவது...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யான மக்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்நிலையில், அரசமைப்புக்கான 13ஆவது திருத்தச் சட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமா அல்லது அதிகாரங்களைக் குறைக்க வேண்டுமா அல்லது அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமா என்பது குறித்து தீர்மானிக்கும் அதிகாரத்தை மக்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

இவ்வாறு மக்கள் மத்தியில் கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டால், அரசியல் கட்சிகள், அமைப்புகள் தமது நிலைப்பாடுகளை மக்கள் மத்தியில் முன்வைத்து, மக்களின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்கும்-என்றார். (த)

## சென்னை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

முகர்ஜி, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கே.நாராயணன், வெளியுறவுத் துறை செயலர் சிவசங்கர் மேனன் உள்ளிட்டோரை கண்டித்து அவர்கள் முழக்கங்களை எழுப்பினர்.

அண்ணா சாலையிலிருந்து, சத்தியமூர்த்தி பவனை நோக்கி சென்ற அவர்களைப் பொலிஸார் தடுத்து நிறுத்தி, கைது செய்தனர். முன்னதாகச் சத்தியமூர்த்திபவனிலிருந்த காங்கிரஸாரும் பதிலுக்குக் கோஷம் எழுப்பியதோடு, வீதியில் அமர்ந்து போராட்டம் நடத்த முயன்றனர். ஆனால் அவர்களைப் பொலிஸார் தடுத்து நிறுத்தி உள்ளே அனுப் பினர்.

(த)

## சிங்கள...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

களின் தலைவர் பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரன் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட புகைப்படங்கள் வெளியாகித் தமிழகத்தை உலுக்கி உள்ளன.

இந்தப் புகைப்படம் வெளியானதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் ஆசியத் தடகளப் போட்டிகளை நடத்த முடியாது என்று தமிழக அரசும் அறிவித்திருந்தது.

இந்நிலையில் சென்னையில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெறும் டெஸ்ட் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த சிங்களவரான தர்மசேன என்பவர் நடுவராக நியமிக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது.

இதையடுத்து நேற்றுக் காலை தந்தை பெரியார் திராவிடர் கழகத்தினர் சேப்பாக்கம் மைதானத்தை முற்றுகையிட முயன்றனர். அவர்களைப் பொலிஸார் தடுத்து நிறுத்தி கைது செய்தனர்.

(த)

## ஐ.நாவுக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கட்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் இலங்கை அரசு மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிராகரிக்கும் வகையிலும் அமெரிக்கா இலங்கை மீது கொண்டுவரவுள்ள தீர்மானம் தொடர்பான இலங்கை அரசின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் வகையிலுமே இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளதாக அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டித் தகவல்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் காலை இந்த அறிக்கை ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூனிடம், ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹன்னவினால் கையளிக்கப்பட்டுள்ளது.

பாலித கொஹன்னவுடன் இணைந்து ஜப்பானிய நிரந்தர விதிவிடப் பிரதிநிதி சுனேயோ நிசிடா, பங்களாதேஷின் நிரந்தரப் பிரதிநிதி அபுல் கலாம் அப்துல் முமேன், ருமேனியாவின் நிரந்தரப் பிரதிநிதி சிமோனா மிரேலா மிகுலெஸ்கு, நைஜீரியாவின் பிரதி நிரந்தரப் பிரதிநிதி உஸ்மான் சர்க்கா ஆகியோரும் ஐ.நா. பொதுச்செயலருடனான இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பில், பான் கீ-மூனுடன் ஐ.நாவின் அரசியல் விவகாரத் திணைக்கள அதிகாரிகள் ஒஸ்கார் பெர்னான்டஸ் தரங்கோ, ஹிரோகி டென் ஆகியோரும் உடனிருந்தனர்.

மூடப்பட்ட அறையில் நடந்த இந்த இரகசியச் சந்திப்புத் தொடர்பான விவரங்கள் ஏதும் பான் கீ மூனின் அதிகாரபூர்வ சந்திப்பு நிகழ்ச்சி நிரலில் பட்டியலிடப்புட்டிருக்கவில்லை.

சந்திப்புக்கு முன்னதாக, இன்னர்சிற்றி பிரசிடம் கருத்து வெளியிட்ட ஜப்பானியப் பிரதிநிதி சுனேயோ நிசிடா, இலங்கை முக்கியமான நாடு என்றும், பான் கீ மூனிடம் தமது அறிக்கையைக் கையளிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

அதேவேளை, பான் கீ மூனிடம் இலங்கையின் சார்பில் பாலித கொஹன்ன மற்றும் ஜப்பான், பங்களாதேஷ், ருமேனியா, நைஜீரியா நாடுகளின் பிரதிநிதிகள் கையளித்த அறிக்கையின் உள்ளடக்கங்கள் தொடர்பாக தகவல் எதையும் வெளியிட இலங்கை வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம மறுத்துள்ளார்.

அதேவேளை, இலங்கை தொடர்பான அறிக்கைகளை, அந்தந்த நாட்டு அரசுகளிடம் வழங்குமாறு வெளிநாடுகளில் உள்ள இலங்கையின் தூதுவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

(த)

## விட்டுக்கொடுப்பு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இந்திய நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தம்மைச் சந்தித்த காங்கிரஸ் கட்சியின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமே அவர் இந்த வாக்குறுதியை வழங்கியுள்ளார்.

தமிழர்களுக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கும் வகையில், 13ஆவது திருத்தத்துக்கும் அப்பாற்பட்ட தீர்வை தமது நாடு நடைமுறைப்படுத்தும் என்று இலங்கை ஜனாதிபதி வாக்குறுதி அளித்துள்ளார் என்றும், அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் விடயத்தில் இந்தியா விட்டுக் கொடுக்காது என்றும் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவலை மன்மோகன்சிங்குடனான சந்திப்பில் பங்கேற்ற காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் அழகிரி வெளியிட்டுள்ளார்.

1987ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட ராஜீவ்- ஜே.ஆர் உடன்பாட்டுக்கு அமைய கொண்டு வரப்பட்ட 13ஆவது திருத்தத்தில் வடக்கு,கிழக்கு மாகாணங்களுக்கு 37 அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வழிசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த)

## எரிபொருள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

முறைக்கு வந்தது.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதன்படி 90 ஒக்ரைன் பெற்றோல் ஒரு லீற்றர் 159 ரூபா 60 சதத்தில் இருந்து 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 162ரூபா 60 சதமாகும்.

95 ஒக்ரைன் பெற்றோல் ஒரு லீற்றர் 167 ரூபாவில் இருந்து 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 170 ரூபாவாகும்.

ஓட்டோ டீசல் ஒரு லீற்றர் 115 ரூபா 60 சதத்தில் இருந்து 6 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 121ரூபா 60 சதமாகும்.

சுப்பர் டீசல் ஒரு லீற்றர் 142 ரூபாவில் இருந்து 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 145 ரூபாவாகும்.

மேலும் மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 111 ரூபாவில் இருந்து 115 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (த-5-8-9-17)

## கூட்டமைப்பின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கட்ட அமர்வுகளாக இடம்பெறும் இந்தக் கூட்டத் தொடர் எதிர்வரும் மார்ச் 25 ஆம் திகதிவரை நடைபெறும்.

அந்தக் கூட்டத் தொடரின் போது இலங்கை அரசுக்கு எதிராக, அமெரிக்காவினால் பிரேரணை ஒன்று கொண்டுவரப்படவுள்ளது. அந்தப் பிரேரணைக்கு ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா உள்ளிட்ட நாடுகள் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன.

இந்த நிலையில், இலங்கைத் தமிழர் தொடர்பான நிலையை சர்வதேச சமுகத்துக்கு தெளிவுபடுத்தும் நோக்குடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜெனிவா செல்லவுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சி.சிறீதரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரே ஜெனிவாவுக்கு 28 ஆம் திகதி செல்லவுள்ளனர். (த-5)

## கச்சதீவு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பை எதிர்த்து 5 ஆயிரம் படகுகளுடன் போராடச் செல்லப் போவதாகக் கடந்த ஒரு வருடமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்து வருகின்றார். இருப்பினும் இந்தியாவில் தேடப்படும் குற்றவாளியாகவுள்ள அவர் இதுவரையில் இந்தப் போராட்டத்தை நடத்தவில்லை.

இந்த நிலையில் கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழாவுக்குச் சென்றுள்ள அமைச்சர் அங்கு வைத்து இந்தப் போரட்டத்தை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரின் இந்த நடவடிக்கை தொடர்பில் வடக்கு மாகாணத்திலுள்ள மீனவர் அமைப்புக்களிடம் கேட்ட போது,

ஆலயத் திருவிழாவில் வைத்து அரசியல் செய்யக் கூடாது. இருநாடுகளுக்கும் பொதுவான திருவிழா கச்சதீவு அந்தோனியார் உற்சவம். இங்கு வைத்து இப்படியான போராட்டங்களை முன்னெடுப்பது பிழையான நடவடிக்கை.

தனது அரசியல் சுயலாபத்துக்காக இந்திய- இலங்கை மீனவர் பிரச்சினையைக் கையிலெடுத்துக் கொண்டு இவ்வாறான செயற்பாடுகளை அவர் மேற்கொள்ளக் கூடாது. இதனால் இந்திய- இலங்கை மீனவர் உறவில் விரிசல் ஏற்படும். எமக்கு இந்திய மீனவர்களின் அத்துமீறலால் பிரச்சினை உள்ளது தான். அது தீர்க்கப்படவேண்டும். அதற்காக இவ்வாறு புனித இடத்தின் மதிப்பைக் கெடுக்கும் வகையில் செயற்படக்கூடாது.

எனவே அரசியல் நோக்குடன் எமது பிரச்சினை கையாளப்படுவதையும், புனித தலத்தின் மகிமையை கெடுக்கும் வகையிலும் போராட்டத்தை முன்னெடுக்கக் கூடாது- என்றனர்.

(த-5)

## மக்களை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பொறுப்பு வாய்ந்த அரச அதிகாரியான யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும் மக்களைப்பற்றி கவனத்தில் எடுக்காமல் தன்பாட்டில் புறப்பட்டுச் சென்றார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினதும் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தினதும் பொறுப்பற்ற செயலினால் குறிகாட்டுவானில் கச்சதீவு செல்வதற்காக திரண்டிருந்த நுற்றுக்கணக்கான பொதுமக்கள் பாதிக்கப்பட்டதுடன் அவர்கள் இவர்களின் பொறுப்பற்ற செயலை ஆத்திர மேலீட்டால் வாய்க்கு வந்தபடி திட்டித்தீர்த்தனர்.

கச்சதீவு அந்தோனியார் உற்சவத்துக்குச் செல்வதற்காக குறிகாட்டுவான் துறைமுகத்துக்கு நேற்றுக்காலையிலிருந்தே அதிக எண்ணிக்கையான பொதுமக்கள் சென்றனர். காலை 9.30 மணிக்குப் பின்னர் நூற்றுக் கணக்கான பொதுமக்கள் திரண்டபோதும் படகுகள் எவையும் வராத காரணத்தினால் அவர்கள் வெயிலில் காத்திருந்தனர். அந்தச் சமயத்தில் துறைமுகத்தில் வடதாரகைப் படகு நிறுத்தப்பட்டிருந்தது.

மதியவேளை தனியார் படகு ஒன்று வந்து மக்களை ஏற்றிய போதும் பயணிகள் போதாது எனத்தெரிவித்து ஏற்றிய பயணிகளை படகின் உரிமையாளர் இறக்கிவிட்டார். கூடுதலான பணம் தருகிறோம் ஏற்றிச் செல்லுங்கள் எனப் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்தபோதும் படகு உரிமையாளர் அதனைக் கணக்கிலெடுக்காமல் சென்றுவிட்டார்.

பிற்பகல் ஒரு மணியளவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினர் அங்கு வந்தனர். இதன் போது அங்கு கால் கடுக்க காத்திருந்த மக்கள், அமைச்சர் தலைமையிலான குழுவினரை சுற்றிவளைத்தனர். தங்களையும் வடதாரகைப் படகில் ஏற்றிச் செல்லுமாறும் அல்லது வேறுபடகை ஏற்பாடுசெய்து தருமாறும் கெஞ்சிக் கேட்டனர்.

இதனைப் பொருட்படுத்தாத அமைச்சர் நில்லுங்கள் படகு வரும் உங்களுக்கு நிற்க விருப்பம் இல்லாவிட்டால் திரும்பிப் போங்கள் என்று பதிலளித்துவிட்டு, வடதாரகைப் படகில் புறப்பட்டு சென்று விட்டார் .

காலையிலிருந்து காத்திருந்த மக்கள் வெயிலில் அத்தரித்துக் கொண்டுநிற்க அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவும் அவரது குழுவினரும் வடதாரகையில் ஏறி கச்சதீவு நோக்கிப்பயணமாகினர்.


இதன் பின்னர் குறிகட்டுவானுக்கு யாழ்.மாவட்ட அரச அதிபர் வருகை தந்தார். அவரைச்சுற்றி வளைத்த மக்கள் தமக்குப் படகு ஒழுங்கு செய்து தருமாறும் தாங்கள் கட்டாயம் கச்சதீவு சென்று தமது நேர்த்திக் கடனை நிறைவேற்ற வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

காலையில் சென்ற படகு திரும்பி வந்து கொண்டிருக்கின்றது, இன்னும் ஒரு மணிநேரத்துக்குள் படகு வரும் . நீங்கள் அதில் செல்லலாம் எனத் தெரிவித்து விட்டு அரச அதிபரும் அங்கிருந்து சென்றார்.

மணிக்கணக்காக மக்கள் காத்திருந்த போதும் நேற்று மாலை 5 மணிவரையில் படகுகள் எவையும் வராததால் அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லத் தொடங்கினர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினதும், அரச அதிபரதும் பொறுப்பற்ற நடவடிக்கையை மக்கள் திட்டித் தீர்த்தனர்.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட அரச அதிபரை அவரது கைத் தொலைபேசி இலக்கத்தினூடாகப் பலமுறை தொடர்பு கொண்ட போதும் எமது அழைப்புக்களுக்கு அவர் பதிலளிக்கவில்லை. (த-5-14)





தேவை

2 பேர் உள்ள சிறிய குடும்பத்தில் நிரந்தரமாக தங்கிநின்று சமையல் உட்பட சகல வேலைகளையும்பொறுமையோடும், திறமையோடும் செய்யக்கூடிய எந்தவிதமான பொறுப்பும் அற்ற நடுத்தர வயதுடைய பணிப்பெண் உடன் தேவை. வந்து,வந்து போபவர்கள் தேவையில்லை. தொடர்பு-0775167472

# புறநகர்ப் பகுதிகளிலும் அரச நிறுவன சேவைகள்

## ஜனாதிபதி மஹிந்த கூறுகிறார்

கொழும்பு,பெப் 24

அரச நிறுவனங்களின் சேவைகளையும் புறநகர்ப் பகுதிகளுக்கு விஸ்தரிக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இலங்கையில் பிரதேச பாகுபாடின்றி அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதனடிப்படையில் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் அரச திணைக்களங்கள், அரச நிறுவனங்கள் ஆகியவற்றில் சேவைகள் வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கண்டி, பள்ளேகலையில் சுமார் 92 கோடி ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மத்திய மாகாண சபைக்கான புதிய கட்டடத் தொகுதியைச் சம்பிரதாயபூர்வமாக நேற்று சனிக்கிழமை திறந்துவைத்து உரையாற்றியபோதே ஜனாதிபதி இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொது மக்கள் தங்களது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்காக மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் அரச நிறுவனங்களை நாடுவதாக குறிப்பிட்டார்.

மக்களின் பிரச்சினைகளை உரிய வகையில் அடையாளம் கண்டு அவற்றுக்குச் சிறந்த தீர்வினை வழங்கி, முகமலர்ச்சியுடன் அவர்கள் திரும்பிச் செல்லக்கூடிய நிலைமையை அரச ஊழியர்கள் உருவாக்கவேண்டும் என இதன்போது ஜனாதிபதி வலியுறுத்தினார்.

30 வருடகாலப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், நாட்டில் பலவேறு அபிவிருத்திப் பணிகளை பாரபட்சமின்றியும், பிரதேச வேறுபாடின்றியும் அரசு மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

# விடுதலைப் புலிகளை தோற்கடித்தது எப்படி? அமெ.படைக்கு சவேந்திர சில்வா விளக்கம்

நியூயோர்க்,பெப் 24

போர்க்குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள, இலங்கை இராணுவ அதிகாரியும், ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதித் தூதுவருமான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை, அமெரிக்கப் பாதுகாப்புக் கல்லூரி ஒன்றில் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த அனுபவங்கள் குறித்த உரை ஒன்றை நிகழ்த்தியுள்ளார்.

நியூயோர்க்கில் உள்ள, தெற்கு சென்.குவான்டிகோ ஐக்கிய அமெரிக்க மரைன் படைப்பிரிவு பல்கலைக் கழகத்திலேயே மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, 'தீவிரவாதத்தை தோற்கடித்தது எப்படி?' என்ற தலைப்பில் உரையாற்றியுள்ளார்.

இந்த உரையின் போது, போரில் வெற்றி பெறுவது என்பது எதிரிகளை அழிப்பதுடன் மட்டும் முடிந்து போவதில்லை என்றும், போருக்குப் பிந்திய நிலைமை களையும் வெற்றிகரமாகக் கையாள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

53ஆவது படைப்பிரிவின் தளபதியாக இருந்தவர் என்பதால், மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க அமெரிக்காவில் பயிற்சி பெற அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்குப் பொறுப்பானவர் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகி யிருக்கும், மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை அமெரிக்கப் பாதுகாப்புக் கல்லூரி இந்த விரிவுரைக்கு அழைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

(த)

**போரில் வெற்றி பெறுவதற்கு எதிரிகளை அழிப்பது மட்டும் முக்கியமானதல்ல போருக்குப் பிந்திய நிலைமை களையும் வெற்றிகரமாகக் கையளவேண்டுமாம்**

## மரண அறிவித்தல்

### சீனிவாசகம் சிவசுந்தரம்
(சுந்தரம் சாத்திரியார்)

(ஓய்வுபெற்ற பணியாளர், யாழ்ப்பாணம் நீதிமன்றம்)



தோப்பு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், நல்லூர் செட்டித்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட சீனிவாசகம் சிவசுந்தரம் நேற்று (23.02.2013) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம்-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், பராசக்தியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சின்னத்துரை மற்றும் செல்வரத்தினம், காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் முத்துக்குமாரசாமி ஆகியோரின் அருமைச் சகோதரனும், பிரேம்குமாரின் (வருமான பரிசோதகர், நல்லூர் பிரதேசசபை) பாசமிகு தந்தையும், யசோதாவின் (ஆசிரியை, யா/திருக்குடும்ப கன்னியர் மடம்) அன்பு மாமனும், சானுஜென், தர்மிதன், கிஷோபிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.58, செட்டித்தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (33759) (10,6,7)

தகவல்:
சி.பிரேம்குமார் (மகன்),
தொ.இல. 0779080354

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்பு திணைக்களத்தின் முன்னாள்

பிரதம அதிகாரி

### மயில்வாகனம் புத்திரசிகாமணி

அவர்கள் 23.02.2013 காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
பாதுகாப்புத் திணைக்களம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி அதிபர் திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கம் அவர்களின் சகோதரி கிருஷ்ணகுமாரியின்(சித்தா) அன்புக் கணவர் மயில்வாகனம் புத்திரசிகாமணி (ஓய்வு பெற்ற பிரதம பாதுகாப்பு அதிகாரி யாழ்.பல்கலைக்கழகம்)

அவர்களின் மரண செய்தி கேட்டு துயருறுகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமதுஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி,
மானிப்பாய். பாடசாலைச் சமூகம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 25 * 02 * 1932



மறைவு 25 * 01 * 2013

### சிவசுப்பிரமணியம் இராசம்மா

கடந்த 25.01.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி சிவசுப்பிரமணியம் இராசம்மா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (22.02.2013)வெள்ளிக்கிழமை கீரிமலை தீர்த்தக் கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (24.02. 2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்

ஆஸ்பத்திரியடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய். குடும்பத்தினர்.

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு—

advt@uthayan.com
0215671111

## வீடு வாடகைக்கு

கோண்டாவில் மேற்கு, நவரட்ணராஜா வீதியில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு- 0717159925

## வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு

190 ஆம் கட்டையடி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி எனும் முகவரியில் (கண்டி வீதிக்கு அண்மையில்)
4 ½ பரப்புக் காணியுடன் வீடு உடன் விற்பனைக்குண்டு.
விற்பனைப் பெறுமதி 2700000/= (இருபத்தேழு இலட்சம் மட்டும்).
தொடர்பு :0774443556 (33778)(3.ச)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1979 மகம் செவ்வாய் குற்றமற்ற 55 பாவம் உடைய அமெரிக்காவில் பொறியியலாளராகக் கடமையாற்றும் விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு நிறமான பட்டதாரி மணமகள் தேவை.

tmsk1979@hotmail.com
#6479323871
தொடர்பு கொள்ளவும்.

## மணமக்கள் தேவை UK

UK Citizen இந்து கௌரவ குடும்பம் 23.02.1982 பரணி கி.பா.35 B.sc(Gov.Job) 12.3.1982 சித்திரை பா-28 B.sc ஆகியோர் படித்த மணமகனையும் 14.7.1976 கேட்டை பா-40 Food City வைத்துள்ளார். படித்த மணமகளை எதிர்பார்க்கிறார். (வரதட்சனை தேவை இல்லை.
T.P.no. 00447833819736 (Miss கோல் போடவும்)
Fax:00442085488847 chihra004@yahoo.co.uk.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆருயிர் நண்பன்

### தேவதாசன் பானுஜன்

அவர்கள் கடந்த 20.02.2013 இறைபதம் அடைந்ததையிட்டு துயருறும் அவரது குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

2009 கலைப்பிரிவு பாடசாலை நண்பர்கள்,
வயாவிளான் ம.ம.வி.

## கண்ணீர் அஞ்சலி



இந்துவின் மைந்தனும், முன்னாள் சாரணிய துருப்புத் தலைவனுமான

### ராஜ்குமார் ரவிராஜ்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, கண்ணீரால் காணிக்கை செய்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யாழ். இந்துக் கல்லூரி.

## Diploma in Nursing - 3Years
## Holy Cross School of Health Science

| | |
|---|---|
| விண்ணப்ப இறுதித்திகதி | : 05.03.2013 |
| கற்கைநெறிக் கட்டணம் | : 1500/= |
| முற்பணம் | : 3500/= |

கா.பொ.த உயர்தரத்தில் 3பாடங்கள் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பங்களை திருச்சிலுவை சுகநல நிலையம் 767/4, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்துக்கு சுயவிலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடிதஉறையுடன் அனுப்பி வைக்கவும்.

பணிப்பாளர் தொ. பே. இல. 0213001102 or 0774270120

விடுமுறை நாளான இன்றும் நாளையும்

மாபெரும் மலிவு விலையில்



Office Wear Sarees
Office Wear Shalwar

* கொட்டன் சாறி
* சில்க் சாறி
* கொட்டன் பஞ்சாபி துணி
* சில்க் பஞ்சாபி துணி
* பெண்களுக்கான ரொப் வகைகள்



நல்லூர் சரவணாஸ் ரெக்ஸ் (களஞ்சியசாலை)

சிவப்பிரகாசம் வீதி (வண்ணார் பண்ணை) யாழ்ப்பாணம்.

(e6655) (10,6,7)


# மரண அறிவித்தல்

## தேவதாசன் பானுஜன்



தெல்லிப்பழை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட தேவதாசன் பானுஜன் 20.02.2013 அன்று அகால மரணமானார்.

அன்னார் சுகந்தினியின் அன்புக் கணவரும் தேவதாசன்(ஓய்வுநிலை கூட்டுறவுப் பரிசோதகர்) -சீத்தாதேவி (ஆசிரியர்,கொழும்பு, தாருசலாம் மகாவித்தியாலயம்) தம்பதியரின் அன்பு மகனும், சிந்துயா,(ஆசிரியர்,மன்/விளாத்துக்குளம் அ.த.க.பாடசாலை) அவர்களின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2013)ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரின் மருதனார் மடம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மருதனார் மடம்,பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கே.கே.எஸ். வீதி, மருதனார்மடம்,
சுன்னாகம். (33768)(5-6-7)

தகவல்:
குடும்பத்தினர். (தொ.பே.: 021 373 5411)

# கண்ணீர் அஞ்சலி

## தேவதாசன் பானுஜன்



அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ராணி அன்ரி குடும்பம் (ஜேர்மனி), ஜிந்தி அன்ரி குடும்பம் (சுவிஸ்),
போகம் அன்ரி குடும்பம் (சுவிஸ்), ரவி மாமா குடும்பம் (சுவிஸ்).

(33769)(5-6-7)

### அகத்தியர் தேவாரத்திரட்டு

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பூரணைத் தினத்தில் நடத்திவரும் ''அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்'' பன்னிரு திருமுறைப் பாராயணம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 7 மணி முதல் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை , காங்கேசன்துறை வீதி, மதவடி ஒழுங்கை அருள்மிகு ஸ்ரீ வாலையம்மன் ஆலயத்தில் ஆலய பரிபாலனசபைப் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடத்த இருப்பதால் அனைவரும் பங்குபற்றி பயன் பெறுமாறு மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்திருக்கின்றார்.

### சமய நிகழ்வுகள்

கெருடாவில் தொட்டில் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை புதிய தேரில் முருகப்பெருமான் தெய்வானை, வள்ளி அம்மன் சமேதரராக வீதி உலா வந்து பக்தர்களின் துன்பம் துயர்களை அழிப்பார்.

அதில் பக்தர்கள் முருகப் பெருமானின் அருளைப் பெறலாம். மறுநாளாகிய முருகப் பெருமான் ஆலய தீர்த்தக் கேணியில் தீர்த்தமாடுவார்.

(36)

★ ★ ★

கட்டுவன் மேற்கு அருள்மிகு நாச்சிமார் ஆலயத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி மாசி மகப் பெருநாளில் மணிக் கோபுர அடிக்கல் நாட்டும் விழா விசேட பூசைகளுடன் ஆரம்பமாகி காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

(36)

★ ★ ★

அளவெட்டி, கும்பழாவளை விநாயகர் ஆலய நடேஸ்வரர் பூசை இன்று காலை 9.30 மணிக்கு விசேட பூசைகள் ஆராதனைகளுடன் இடம்பெறும். நாளை திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு ஸ்ரீ சக்கரபூசை விசேட ஆராதனைகள் என்பன. புவனேஸ்வரி அம்பாளுக்கு நடைபெற்று உள்வீதி- வெளி வீதி உலா இடம் பெறவுள்ளது.

(36)


எமது சிகிச்சைகள்

* இருதய நோய்
* புற்றுநோய் தணிப்பு
* ஈரல் பிரச்சினை
* மூட்டுவலி, இடுப்புவலி
* புரோட்ஸ்டிரேட் பிரச்சினை
* ஒற்றைத்தலைவலி
* மன அழுத்தம்
* இருமல், சளி
* படுக்கைப்புண்
* நீரிழிவுப்புண்
* விஷ வைரஸ் பாதிப்பு

Hotline : 0777708310
0777708434
Tel : 011 5517897
5551879
5558442
Fax : 11 5517756

வளமான வாழ்வுக்கு நலமான இதயம் தேவை

இதய நோயினால் அவதிப்படுபவர்கள் சுகம் பெறமுடியும். விரும்பும் பலனை ஆயுர்வேத மருந்தினால் அடைய முடியும். அது இருதயத்திற்கான இரத்தோட்டத்தை சீர்படுத்தும். நெஞ்சு வலியை நீக்கும் சிக்கலான சிகிச்சை இன்றி நலமடைவீர்கள்.



இருதய அடைப்புகள் அறிகுறி

* இருதயம் எரியும் உணர்வு
* குறைவான சுவாசம்
* நெஞ்சு வலி

இந் நோய்களால் துன்பப்படுகிறீர்களா...?

மூட்டுவலி, மூட்டுகளில் வீக்கம், மூட்டுகளில் இறுக்கம், நடமாடுவது கஷ்டம், முதுகு வலி, கழுத்து வலி உடனே எங்கள் மருத்தவரை சந்தியுங்கள்



சீனி, இரத்தஅழுத்தம், உயரம் - இலவச பரிசோதனை

Free Consultation
Daily @ World Trade Centre
Monthly Clinics are conducted inlandwide

FAIR PHARMA (PVT) LTD
Kerala Ayurvedic Medicine

Level 5, East Tower, 1C,
World Trade Centre,
Colombo 01, Sri Lanka.
E : fairpharmasrilanka@yahoo.com
W : www. ayurveda.lk

Approved by Department of Ayurveda, BOI, an ISO 9001 : 2008 QMS Certified Company



லண்டனில் கற்கலாம்

Study in LONDON

Spot admission on March 2013 at BIBM

by

University of Sunderland London on 05th March 2013
Glyndwr University London on 09th March 2013
University of Ulster London on 23rd March 2013

Courses from £4950

Book your on-the-spot Admission for April / May 2013 Intake
Please contact BIBM & register with your qualification

Courses:

* Diploma in Foundation English
* BA (Hons) -Business Management/Marketing/Accounting Tourism Management & Broadcasting, Journalism & Media Communication
* BSc Applied Computing
* BA (Hons) Accounting and Financial (Top-Up)
* BA (Hons) Business Management (Top Up)
* BSc (Hons) International Tourism and Hospitality Management (Top-Up)
* BSc (Hons) Nursing (Top-Up)
* MBA-Finance/Marketing/HR/Supply Chain Management
* MSc-International Business/Tourism and Hospitality



BIBM BRITISH INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES
81,1/1, W.A. De Silva Mawatha, Colombo 06.
Tel. 011 258 6894 / 011 258 6895

Hotline : 077 155 3323

email : info@bibm.lk


# மரண அறிவித்தல்

## மயில்வாகனம் புத்திரசிகாமணி

(ஓய்வு பெற்ற யா/பல்கலைக்கழக, பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர் )

Retired Chief Security Officer (CSO)
University of Jaffna



காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகவும், சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் புத்திரசிகாமணி நேற்று (23.02.2013) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு மயில்வாகனம்-சௌந்தரம் தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான உத்தமபுத்திரி, புவனேஸ்வரி-மகாலிங்கம் மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான செல்லையா-யோகரட்ணம் தம்பதிகளின் மூத்த மருமகனும், கிருஷ்ணகுமாரி (சீத்தா) அவர்களின் பாசமிகு கணவரும், ஷஞ்ஜிதாவின் (முகாமைத்துவ உதவியாளர், மாவட்ட செயலகம்-யாழ்ப்பாணம்) அன்புத் தந்தையும், கோணேஸ்வரன் (Australiya), திருக்கேதீஸ்வரம், ஜெகதீஸ்வரன், முனீஸ்வரன் (Canada), இந்திரகுமாரி (வவுனியா), சூரியகுமாரி (அதிபர், மானிப்பாய் மகளிர் கல்லூரி), சந்திரகுமாரி (மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அற்புதராஜா, ஜெயவீரசிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோரின் சகலனும், கலாச்சந்திரன் (நோர்வே), பத்மகலா (மக்கள் வங்கி பிராந்திய தலைமையகம், யாழ்ப்பாணம்), விமலசந்திரிக்கா ஆகியோரின் அன்பு மாமனும், பிரியங்கா, அம்பிகைதரன், காயத்ரி, பிரகாஷ், மாதங்கி, அபிராமி, தர்ஷன், காந்தரூபன், தாரணி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (24.02.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை மத்தி,
மானிப்பாய். (33763) (10,6,7)

தகவல்:
மனைவி.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# காலத்தின் கோலம் அறிந்து செயற்பட வேண்டிய வேளை இது...

தமிழ் மக்களினதும், முஸ்லிம் மக்களினதும் உரிமைகளை வென்றெடுப்பதற்கு, இரண்டு சிறுபான்மை இனங்களும் ஒன்றிணைந்து செயற்படுவதே உகந்த வழி. அவ்வாறு இணைந்து உழைப்பதன் மூலமே, செயற்படுவதன் ஊடாகவே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வழி பிறக்கும்.-

இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசரும் தமிழ் பற்றாளருமான சி.வே.விக்னேஸ்வரன்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் மூதவை உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் அன்றைய இடிமுழக்கப் பேச்சாளருமான மசூர் மௌலானாவின் எண்பதாவது அகவை நிறைவு விழாவில் பேசுகையிலேயே, முன்னாள் நீதியரசர் மேற்கண்ட கருத்தை முன்வைத்தார்.

முன்னர் எப்போதும் இல்லாதவாறு, தமிழ்த் தேசியமும் முஸ்லிம் தேசியமும் ஒன்றிணைந்து செயற்படுவதன் அவசியம் இப்போது அவசரத் தேவையாகி உள்ளது. இன்றைய காலகட்டத்தில் அது தவிர்க்க முடியாத ஒன்றாகும் என்றும் அவர் இடித்து உரைத்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி இற்றைக்குச் சுமார் 60,65 வருடங்களுக்கு முன்னர், நாட்டின் இரண்டு சிறுபான்மை இனங்களான தமிழர்களும், முஸ்லிம் மக்களும் தமது உரிமைக் குரல்களை கூட்டாக ஒலிக்கும் பொது மேடையாக விளங்கியது.

ஐம்பதுகளின் பின்னர் தமிழரசுக் கட்சியின் மேடைகளில் கொஞ்சு தமிழில் வீச்சுடன் பேசி தமிழ், முஸ்லிம் மக்களைக் கவர்ந்தவர் மசூர் மௌலானா. வடக்கிலும், கிழக்கிலும் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளை தனது பேச்சுத் திறனால் ஊன்றி குறுகிய காலத்தில் அதன்பால் மக்கள் ஆதரவைக் காந்தமாக இழுத்த தகுதிக்கும் பெருமைக்கும் உரியவர் மசூர் மௌலானா.

அவரது எண்பதாவது அகவை நிறைவு விழாவில் வைத்து, முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் இன்றைய காலத்துக்கு அவசியமான, இன்றியமையாத கருத்தை வெளியிட்டிருப்பது சாலவும் பொருத்தமானதே.

நாட்டின் இன்றைய நலிந்து போயுள்ள அரசியல் சூழ்நிலையில் தமிழ் பேசும் மக்கள்-தமிழர்களும் முஸ்லிம்களும்-தமக்குரிய அரசியல் உரிமைகளுடன் சுதந்திரமான பிரசைகளாக வாழ்வதற்கான கூட்டு முயற்சிகள் இன்றியமையாதன.

அதில் இரண்டு பேச்சுக்கு இடமில்லை. அத்தகைய பின்னமைவு உருவாகினால் மட்டுமே இரண்டு இனத்தவர்களும் - ஒரு மொழி பேசும் மக்கள் கூட்டத்தினர்களும்- தமக்குரிய ஜனநாயக உரிமைகளைப் பெறுவதற்கு, ஒப்பீட்டளவில் தகுந்த பாதையைத் திறக்க இயலும்.

முன்னாள் நீதியரசர் மிகச் சரியாகச் சுட்டிக்காட்டியது போன்று தமிழ்த் தேசியமும், முஸ்லிம் தேசியமும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது இன்றைய நிலையில் இன்றியமையாத ஒன்றாகும்.

பல்லின மக்கள் வாழும் இலங்கையில், பெரும்பான்மை இனம் சார்ந்த அரசுகள், அங்கு வாழும் சிறுபான்மை இனத்தவர்கள் ஒன்று சேராமல் தடுக்கும் உத்திகளைக் கட்டவிழ்த்து, அவர்கள் மத்தியில் பிரிவுகளை உண்டாக்குவதே கடந்த சுமார் ஐந்து தசாப்தங்களாக "வெற்றிகரமாக" நிகழ்ந்தேறி வருகின்றன.

சிறுபான்மை இனங்களைப் பிரித்து ஆளும் தந்திரத்தைத் தடுப்பது இந்த நாட்டின் முதல் தேவையாக உள்ளதனை தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் தமது மனங்களில் ஊன்றி உணர வேண்டும்; ஆழமாகப் பதிய வேண்டும்- பதிய வைக்க வேண்டும்.

காலத்துக்குக் காலம், சிறுபான்மை இனங்கள் இரண்டிற்கும் இடையில், காணப்பட்ட சிறுசிறு பிணக்குகளை ஊதிப் பெருப்பிப்பதிலும், கருத்து வேறுபாடுகளுக்கு களமமைத்து விரிசலைத் தோற்றுவிப்பதிலும், பெரும்பான்மை இன அரசியல் தலைவர்கள் வெற்றி கண்டுள்ளார்கள் என்பது அசல் உண்மை.

இதனை சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல், சமூக, சமயத் தலைவர்கள் உள்வாங்கிச் சீரணித்துக் கொள்ள வேண்டியது காலத்தினால் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பின்னணியில் அல்லது சூழமைவில்-தமிழ் பேசும் மக்கள் போட்டி அரசியல் நடத்துவதற்கு இது உரிய காலமல்ல. முஸ்லிம் மக்களின் அபிலாசைகளைத் தமிழ்த் தலைவர்கள் உள்வாங்க வேண்டும். அதற்கு ஏற்ப செயற்பட வேண்டும். ஒரே தமிழ், முஸ்லிம் தலைமையின் கீழ் ஒன்றுபடுவது அவசியம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் (ஏனைய) கட்சிகள் இதனைக் கவனத்தில் கொள்வது இன்றி அமையாதது. சோரம் போகும் தமிழ்த் தலைமைத்துவத்தை உண்மையுள்ள முஸ்லிம்கள் வரவேற்க மாட்டார்கள். நேர்மையுள்ள தமிழ்த் தலைமைத்துவத்தை (உதாரணமாக தந்தை செல்வா காலத்தில்) முஸ்லிம்கள் வரவேற்றார்கள், நம்பினார்கள்.

அத்தகைய நிலைமை இப்போது மீள்விக்கப்பட வேண்டும். மேலும் தமிழ் மக்கள் இன்றுள்ள நிலையில் எமது பக்கத்தில் "தகிடுதத்த" அரசியல் தவிர்க்கப்பட வேண்டியதும் மிகமிக அவசியம். அத்தகைய குறும் போக்குகளை முஸ்லிம் மக்களும் (தலைவர்களும்) ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

தமிழ் மக்கள் தனித்து நின்று தமது உரிமைகளை வென்றெடுக்க முடியாது என்பதனை கடந்த 65 வருட காலம் செயலளவில் போதித்துக் காட்டியுள்ளது. எமது மக்களின் நலன்களுக்கு முதன்மைத்துவம் வழங்கி செயலாற்றுவது மட்டுமன்றி, மற்றொரு சிறுபான்மை இனத்தவரான முஸ்லிம் மக்களையும் சேர்த்துக் கொண்டு செயற்பட வேண்டிய வேளை நெருங்கிவிட்டது. இதுவே இன்றைய யதார்த்தம். உள்மனதில் உணர்வுபூர்வமாக அவர்களுடன் ஒன்றிப்போய் அவர்களின் பிரச்சினைகளை உள்வாங்குவதற்கு (Assimilation) எமது தமிழ் அரசியல் தலைவர்கள் முன்வர வேண்டும். தனித்து நின்று போராடிக் கிடைக்கப் போவது எதுவுமில்லை என்ற நிலையே மேலோங்கி வரும் காலம் இது. அதனை உணர்ந்து செயற்பட வேண்டிய காலமும் இது. இல்லையேல் கரணம் தப்பினால் மரணம் என்றாகிவிடும்...

# தென்மராட்சி வலயத்தில் 25 ஆசிரியர்கள் உடனடி நடைமுறையில் உள்ளக இடமாற்றம்

தென்மராட்சி, பெப்.24

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் 25 ஆசிரியர்கள் உள்ளக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 20 ஆம் திகதி நடைபெற்ற இடமாற்றச் சபையின் தீர்மானத்துக்கமைய உடனடியாக செயற்படும் வண்ணம் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களின் விவரமும் தற்போது கடமையாற்றும் மற்றும் இடமாற்றம் செய்யப்பட்ட பாடசாலைகளின் விவரமும் வருமாறு:-

சி.தர்மசீலன்-கரம்பைக்குறிச்சி அ.த.க.பாட-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, திருமதி க.ரகுவரன்-கரம்பைக்குறிச்சி அ.த.க.பாட-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, செல்வி ஐ.கமலாம்பிகை-கரம்பைக்குறிச்சி அ.த.க.பாட-வரணி ம.வி, ப.அங்கசன்-கரம்பைக்குறிச்சி அ.த.க.பாட-கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி, திருமதி வ.சிவனேஸ்வரன்-கரம்பைக்குறிச்சி அ.த.க.பாட-இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி, திருமதி வ.இராஜதேவன்-இயற்றாலை அ.மி.த.க.பாட-மறவன்புலோ சகலகலாவல்லி வித்தி, செல்வி பி.இராசரத்தினம்-இயற்றாலை அ.மி.த.க.பாட-கைதடி சேதுகாவலர் வித்தி, செல்வி பொ.தங்கேஸ்வரி-இயற்றாலை அ.மி.த.க.பாட-கொடிகாமம் அ.த.க.பாட, திருமதி தீ.சத்தியேந்திரம்பிள்ளை-மட்டுவில் சாந்தநாயகி வித்தி-கச்சாய் அ.த.க.பாட, திருமதி ஜெ.தரணீஸ்வரன்-கச்சாய் அ.த.க.பாட (3 நாள்), அல்வாய் அ.த.க.பாட (2 நாள்)-அல்லாரை அ.த.க.பாட, திருமதி றொபேட் டெய்ஸி-மிருசுவில் அ.த.க.பாட-எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தி, திருமதி ச.நிமலரங்கன்-நுணாவில் மேற்கு அ.த.க.பாட-கைதடி நுணாவில் அ.த.க.பாட, வ.கிருஷ்ணமூர்த்தி-கைதடி நுணாவில் அ.த.க.பாட-மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய ம.வி, திருமதி ஜெ.சிவகுமார்-மீசாலை வீரசிங்கம் ஆ.பா-மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாட, திருமதி க.கேதீஸ்-உசன் இராமநாதன் ம.வி- கைதடி நாவற்குழி அ.த.க.பாட, திருமதி ஜெ.முகில்வண்ணன்-மட்டுவில் கமலாசனி வித்தி-மட்டுவில் கமலாசனி வித்தி (3 நாள்) மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாட (2 நாள்), திருமதி உ.துளசிதாசன்-மட்டுவில் கமலாசனி வித்தி-மட்டுவில் கமலாசனி வித்தி (3 நாள்), மட்டுவில் சந்திரமௌலீஸ வித்தி (2 நாள்), திருமதி வி.பாலகிருஷ்ணன்-மந்துவில் ஸ்ரீபாரதி வித்தி (3 நாள்) மந்துவில் றோ.க.த.க.பாட (2 நாள்)-வரணி ம.வி, பொ.சசிலன்-முத்துக்குமாரசாமி ம.வி-கைதடி முத்துக்குமாரசாமி ம.வி (3 நாள்) நாவற்குழி ம.வி (2 நாள்), செல்வி க.சியாமளா-மட்டுவில் சந்திரமௌலீஸ வித்தி-மட்டுவில் சரஸ்வதி வித்தி, திருமதி ந.தவராசா-மட்டுவில் சரஸ்வதி வித்தி (3 நாள்), கைதடி நுணாவில் அ.த.க.பாட (2 நாள்)-கைதடி நுணாவில் அ.த.க.பாட, திருமதி வி.கேதீஸ்வரன்-இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தி-உசன் இராமநாதன் ம.வி (3 நாள்), கச்சாய் அ.த.க.பாட (2 நாள்), க.இந்திரராசா-நாவற்குழி ம.வி-கைதடி குருசாமி வித்தி, சி.சாயிபாபா-வரணி ம.வி-நாவற்குழி ம.வி, ஐ.தெய்வேந்திரம்-மந்துவில் றோ.க.த.க.பாட-மந்துவில் றோ.க.த.க.பாட (3 நாள்), நாவற்குழி ம.வி (2 நாள்). (ம-9)

# உதவித் தொகை பெறுவோர் பிரதேச ரீதியாக அதிகரிப்பு

## சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் தகவல்

தென்மராட்சி, பெப்.24

மாற்று ஆற்றல் உடையவர்களுக்கு மாதாந்த உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் இந்த வருடம் தொடக்கம் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் உதவித் தொகை பெறுவோரின் எண்ணிக்கை 50 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் இருந்து 7, 15, 37 என்று வருடாவருடம் அதிகரிக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை இந்த வருடம் 50 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பயனாளிக்கும் மாதாந்தம் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படுவதால் பிரதேச செயலர்கள் தமது பிரிவில் உள்ள மாற்று ஆற்றல் உடையவர்களில் வறுமை நிலையில் உள்ளவர்களை இனங்கண்டு தேர்ந்தெடுத்து அவர்களின் விவரங்களை உடனடியாக சமூக சேவைகள் அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுள்ளார்.

தெரிவின் போது உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களைக் கட்டாயமாக கவனத்தில் எடுக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

நேற்று சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலய பிரமோற்சவம்

திருகோணமலை,பெப்.24

தட்சண கைலாசம் என்று அழைக்கப்படும் திருகோணமலையில் அருளாட்சி புரியும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய பிரமோற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 28 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு கொடியேற்றமும் மாலை 6 மணிக்கு காமதேனு வாகனத்தில் எழுந்தருளலும் இடம்பெறும்.

17 ஆம் திகதி மாலை 6 மணி மகர வாகனத்தில் எழுந்தருளல், 18 ஆம் திகதி மாலை 6 மணி சர்ப்ப வாகனத்தில் எழுந்தருளல், அன்றைய தினம் கற்பூரத்தீபத் திருவிழா இடம்பெறும்.

20 ஆம்திகதி மாலை 6 மணிக்குமஞ்சம் 21 ஆம்திகதி மாலை 6 மணிக்கு கைலாச வாகனம், 22 ஆம் திகதி மாலை 6 மணிக்கு சிம்ம வாகனம், 23 ஆம் திகதி மாலை 6 மணி குதிரை வாகனத்தில் எழுந்தருளி வேட்டை ஆடுதல், 24 ஆம் திகதி மாலை 6 மணிக்கு சப்பறம் என்பன இடம்பெறும்.

25 ஆம் திகதி 10 ஆம் திருவிழா. காலை 5 மணிக்கு மூலஸ்தான பூசை, 6.30 மணிக்கு தம்பபூசை என்பன இடம்பெற்றுத் தொடர்ந்து வசந்தமண்டபப் பூசை இடம்பெறும். காலை 8 மணிக்கு அம்பாள் தேரில் எழுந்தருளி விநாயகரும் முருகனும் முன் செல்ல வீதியுலா வருவார். மாலை 6 மணிக்கு ரிஷப வாகனத் திருவிழா நடைபெறும்.

26ஆம் திகதி தீர்த்தத்திருவிழா. அதிகாலை 3 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி காலை 5 மணிக்கு அம்பாள் சமுத்திரக் கரைக்கு எழுந்தருளி தீர்த்தத் திருவிழா இடம்பெறும். பிற்பகல் 3 மணிக்கு கொடியிறக்கமும் அதைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலா வருதலும் இடம்பெறும்.

27 ஆம் திகதி மாலை 5 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் 28 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு அபிஷேகமும் இடம்பெறும்.

சைவசமயக் கோட்பாடுகளுக்கு அமைய திருவிழாக் காலங்களில் நடந்து கொள்ளுமாறு பக்தர்களிடம் கேட்கப்பட்டுள்ளது. (ம-7)

# நூல் வெளியீடும் நினைவஞ்சலியும்

யாழ்ப்பாணம், பெப்.24

அமரர் கலாபூஷணம் சுழிபுரம் நடேசன் சிவசண்முகமூர்த்தியின் 90 ஆவது நினைவஞ்சலி நிகழ்வும் 'கதாப்பிரசங்க கலையும் நானும்' எனும் நூல் வெளியீடும் பண்பாட்டின் குரல் எனும் இறுவட்டு வெளியீடும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெற உள்ளன. சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

நூல், இறுவட்டு ஆகியவற்றை யாழ்.பல்கலைக்கழக சமூகவியற் துறை பேராசிரியரும் முன்னாள் துணை வேந்தருமான பேராசிரியர் என்.சண்முகலிங்கன் வெளியிட்டு வைப்பார். நூலின் நயப்புரையை யாழ்பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் நிகழ்த்துவார். இறுவட்டின் நயப்புரையை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் பா.தனபாலன் நிகழ்த்துவார்.

ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.கணபதிப்பிள்ளை, வட மாகாண கல்வித் திணைக்கள முறைசாரா உதவிக் கல்விப் பணிப் பாளர் ச.கைலாசநாதன், சட்டத்தரணி நா.அரியபுத்திரன் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்துவர். (ம-13)

# அனுமதி இல்லாத படகுகளும் இந்த முறை கச்சதீவுக்கு

பயணிகளை ஏற்றுவதற்குரிய அனுமதி இல்லாத படகுகளும் கச்சதீவுக்கு இந்த முறை பயணிகளை ஏற்ற அதிகாரிகள் அனுமதித்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்கு சுமார் ஆறு மைல்கள் தூரத்துக்கு மக்கள் போக்குவரத்து வசதியின்றி துறைமுகங்களில் காத்திருக்கும் வேளையிலும் பயணிகளை ஏற்ற அனுமதிப்பத்திரம் இல்லை எனக் கூறி அவை சேவையில் ஈடுபட மறுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் அதிகாரிகள் சுமார் 20 மைல்கள் தொலைவில் உள்ள கச்சதீவுக்கு எவ்வாறு பயணிகளை ஏற்ற அனுமதியில்லாத படகுகள் சேவைக்கு விட்டனர் என்று பலதரப்பினரும் கேள்வி எழுப்பியுள்ளனர். (ம)

# பஸ் சேவைகள் எதுவுமே இல்லை புத்துவெட்டுவான் மக்கள் அவலம்

## அதிகாரிகள் பாராமுகம் எனக் குற்றச்சாட்டு

துணுக்காய், பெப்.24

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான் பகுதிக்கு பஸ் சேவைகள் இல்லாமையால் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துணுக்காய் பிரதேசத்தின் ஒரு பகுதியான ஐயன்கன்குளம் ஊடாக புத்துவெட்டுவானுக்குச் செல்லும் வீதி இன்னும் திருத்தப்படாத நிலையில் குன்றும் குழியுமாகக் காட்சி அளிக்கிறது. இதனால் இந்த வீதியூடாகப் பயணங்களை மேற்கொள்ள முடியாது 300 குடும்பங்கள் அவலத்துக்கு உள்ளாகியுள்ளன.

இந்த வீதியூடாகப் பயணங்களை மேற்கொள்ள முடியாதவாறு 300 குடும்பங்கள் மிகவும் அவலத்துக்கு உள்ளாகியுள்ளன. துணுக்காயில் இருந்து வடக்குப் பக்கமாக சுமார் 20 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் இந்தக் கிராமங்கள் அமைந்துள்ளன.

துணுக்காயில் இருந்து வடக்குப் பக்கமாக சுமார் 20 கிலோ மீற்றர் தூரத்தில் இந்தக் கிராமங்கள் அமைந்துள்ளன. இந்த வீதியூடான அரச பஸ் சேவை ஒன்றை ஏற்படுத்தித் தருவதாக துணுக்காய் பிரதேச செயலர் அப்பகுதி மக்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளபோதும், இதுவரை அரச பஸ் சேவையோ அல்லது தனியார் பஸ் சேவையோ ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் இந்தப் பகுதி மக்களின் இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது இவற்றில் கணிசமான குடும்பங்களுக்கு இந்திய வீட்டுத்திட்டம் கிடைத்துள்ளபோதும் சீரான முறையில் வீட்டுக்கான மூலப் பொருள்களை மல்லாவியில் இருந்து கொண்டு செல்ல முடியாத நிலை காணப்படுவதாக அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஐயன்கன்குளம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலை இருந்தும் அதற்கான வைத்தியர் மல்லாவியில் இருந்து அம்புலன்ஸ் மூலம் இந்த வீதியால் சிரமத்தின் மத்தியில் பயணத்தை மேற்கொண்டு தனது சேவையை மக்களுக்கு வழங்குகிறார்.

எனவே இது குறித்து அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-415)

## குற்றச்செயல்களை தடுக்க விழிப்புணர்வுக் கருத்தரங்கு



மன்னார், பெப்.24

சர்வோதய நீதிச் சேவை இயக்கத்தின் ஏற்பாட்டில் கிராமங்களில் குற்றச்செயல்களைத் தடுக்க கிராம மட்டங்களில் மக்கள் ஒன்று சேர்ந்து மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடும் செயலமர்வுகள் கடந்த வியாழன், வெள்ளி ஆகிய இரு தினங்களும் மன்னார் ஹொலிடே விடுதியில் மன்னார் சர்வோதய அமைப்பின் இணைப்பாளர் எஸ்.யுகேந்திரன் தலைமையில் இடம்பெற்றன.

இதன் போது வட கிழக்கு சர்வோதய நீதிச் சேவை இயக்கத்தின் நிகழ்ச்சித் திட்ட அதிகாரி என்.எம்.குணதிலக்க, சர்வோதய அமைப்பின் சமூக வேலைத்திட்ட இணைப்பாளர் எஸ்.கணேஸ் மற்றும் கிராம மட்டங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கிராம மட்டங்களில் குற்றச் செயல்கள் இடம்பெறுவதைத் தடுக்கும் முகமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. (த-12)

## சிறப்பாக இடம்பெற்ற 125 ஆவது ஆண்டு விழா

நெளுக்குளம், பெப்.24

வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு விழா அண்மையில் அதிபர் சு.அமிர்தலிங்கத்தின் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சிறிரங்கா, வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கல்லூரியின் புதிய நுழைவாயில் அமெரிக்க நாசா நிறுவனத்தில் பொறியியலாளராக பணிபுரிபவரும் கல்லூரியின் பழைய மாணவருமாகிய எஸ். இராஜேந்திராவினால் திறந்து வைக்கப்பட்டது. கல்லூரியில் புதிதாகக் கட்டப்பட்ட திறந்த வெளி அரங்கை நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சிறிரங்கா திறந்து வைத்தார்.

கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நினைவு மலரை ஆளுநர் வெளியிட்டு வைத்தார்.

இந்த நிகழ்வில் பாடசாலையின் முன்னாள் அதிபர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். மேலும் மாகாண, தேசிய மட்டங்களில் சாதனை படைத்த மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர். (க-402)



வவுனியா தமிழ்ச் சங்கம் வைரவப்புளியங்குளம் ஆதி விநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் நடத்திய கேள்வியால் ஒரு வேள்வி நிகழ்வின் போது தொழிலதிபர் சுரேந்திரன் செந்தாமலர் தர்மினி மங்கலவிளக்கேற்றுவதைக் காணலாம். (த-402)

## ஆபத்தை ஏற்படுத்தக் காத்திருக்கும் முல்லைத்தீவு பேராற்றுப் பாலம்

முல்லைத்தீவு, பெப்.24

பேராற்றுக்கு குறுக்கே அமைந்துள்ள பாலம் சேதமடைந்து ஆபத்தான நிலையில் காட்சியளிப்பதாக அப்பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு- ஒட்டுசுட்டான் வீதியிலிருந்து 3 ஆம் கண்டம் ஊடாக கனகரத்தினபுரத்தைச் சென்றடையும் வீதியில் இந்தப் பேராற்றுப் பாலம் அமைந்துள்ளது. மக்கள் பேராற்றைக் கடப்பதற்காகவே இந்தப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்தப் பாலம் மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது. அத்துடன் பாலத்தின் மத்திய பகுதியில் சிதைவுகள் ஏற்பட்டு பெரிய குழிகளும் ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.

இந்தப் பாலத்தை கனகரத்தினபுரம் 3 ஆம் கண்டம், மன்னா கண்டம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தினமும் பயன்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் அதிகளவில் தினமும் இந்தப் பாலத்தினூடாகவே சென்று வருகின்றனர். ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் இந்தப் பாலம் காணப்படுவதால் தமது பிள்ளைகளுக்கு என்ன ஆபத்து நேருமோ என்று பெற்றோர்கள் அஞ்சுகின்றனர்.

இந்தப் பாலத்தை உடனடியாகப் புனரமைத்துத் தருவதன் மூலம் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ள உதவுமாறு அப்பகுதி மக்கள் உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தப் பாலம் மோசமாகச் சேதமடைந்து போக்குவரத்துக்கள் தடைப்படுமாயின் மக்கள் மாற்றுவழிகளால் சுமார் 10 தொடக்கம் 15 கிலோ மீற்றர் தூரம் வரை பயணிக்க வேண்டியிருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-500)

## வவுனியாவில் நாளை பக்தி உற்சவம்

வவுனியா, பெப்.24

ஸ்ரீ அம்மா பகவானினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஆந்திரா ஏகத்துவப் பல்கலைக் கழகத்தினால் ஒழுங்கமைத்து நடத்தப்படும் பக்தி உற்சவம் நிகழ்வு நாளை திங்கட்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளது.

ரயில் நிலைய வீதியிலுள்ள முத்தையா மண்டபத்தில், உமாதாஷாஜி தலைமையில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இந்த பக்தி உற்சவம் நடைபெறும்.

செய்மதி மூலம் தியானம், சாதனா, யோகம், ஜெபம், ஞானம், வைராக்கியம் என்னும் தலைப்பில் செயல்நிலை விளக்கம் வழங்கப்படும்.

இதில் கலந்து கொள்வதற்காக முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு போக்குவரத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று வவுனியா மாவட்ட ஏகத்துவக் கழகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

## சேவா லங்காவினால் அமைக்கப்பட்ட பாடசாலைக் கட்டடம் திறப்பு

மன்னார், பெப்.24

மன்னார் சேவாலங்கா நிறுவனத்தினால், ஜேர்மன் நாட்டில் இயங்கும் தோமஸ்குக் மற்றும் வெல்த் கங்கர் கில்பி ஆகிய இரு அமைப்புக்களின் நிதி உதவியுடன் மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வேப்பங்குளம் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் அமைக்கப்பட்ட புதிய பாடசாலைக் கட்டடம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது.

குறித்த புதிய கட்டடத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் நிதி வழங்குநர்களான தோமஸ் குக் ஜேர்மன் அமைப்பின் பிரதி நிதி யூலியன் கிலமன்ஸ் மற்றும் வெல்த் கங்கர் கில்பி அமைப்பின் பிரதிநிதிகளான செசாரி, பாலு, வீரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

சேவாலங்கா அமைப்பின் விசேட திட்டப் பணிப்பாளர் அனற் றொய்ஸ், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சியான், முசலிப் பிரதேச சபை உறுப்பினர், மன்னார் சேவாலங்கா அமைப்பின் பணியாளர்கள் உட்படப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (த-12)

## முன்பள்ளி மாணவருக்கு பாடசாலை உபகரணங்கள்



மன்னார், பெப்.24

மன்னார் மாவட்டத்தில் உள்ள வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக மன்னார் சர்வோதய அமைப்பு மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களை தொடர்ந்து வழங்கி வருகின்றது. அந்த வரிசையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நண்பகல் புதுக்குடியிருப்பு அல்- ஹனிப் முன்பள்ளி சிறார்களுக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

முன்பள்ளியில் கல்வி கற்கும் 46 சிறார்களுக்கு இவ்வாறு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

குறித்த பொருள்களில் புத்தகப்பை, பென்சில், கொப்பி உட்பட பல பொருள்கள் அடங்கியுள்ளன.

குறித்த பொருள்களை மன்னார் மாவட்ட சர்வோதய அமைப்பின் இணைப்பாளர் எஸ்.யுகேந்திரன், சர்வோதய அமைப்பின் சமூக வேலைத்திட்ட இணைப்பாளர் எஸ்.கணேஸ், மன்னார் பிரதேச சபை உறுப்பினர் எச்.எம். காமீம் ஆகியோர் இணைந்து வழங்கினர். (த-12)

## சிறைச்சாலை ஊழியர் போதாமையால் நெருக்கடி

கெழும்பு, பெப். 24
சிறைச்சாலைகளில் உள்ள 27 ஆயிரம் சிறைக் கைதிகளையும் நிர்வகிப்பது தொடர்பாக ஊழியர்களின் எண்ணிக்கை போதிய அளவில் இல்லை. தற்போது 4 ஆயிரம் ஊழியர்களே இருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில சிறைச்சாலைகளில் நிலவும் இந்த ஊழியர் பற்றாக்குறை காரணமாக சிறைக் கைதிகள் கூட சிறைச்சாலைகளின் வாயில் காப்போராக பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

1988 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அங்கீகரிக்கப்பட்டுள்ள பணியாளர் குழு இன்றைய தேவைக்கு அமைய மாற்றமுறாது உள்ளது.

சிறைக் கைதிகளை நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லல், வைத்திய சாலைகளுக்கு அனுப்புதல், குழுக்களாக வெளி வேலைகளுக்கு அமர்த்துதல் உள்ளிட்ட நாளாந்தப் பணிகள் பலவற்றுக்கும் உத்தியோகத்தர்களைப் பொறுப்பாக அனுப்பி வைத்ததன் பின்னர் சிறைச்சாலைகளின் அரச கருமங்கள் தொடர்பாக ஒருவர் அல்லது இருவர் என்றவாறே எஞ்சியிருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (ம-22)

# மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் 6 ஆயிரத்து 400 மில்லியன் ரூபா மோசடி

## போக்குவரத்துத்துறை அமைச்சர் குமார வெல்கம ஒத்துக்கொண்டார்



கொழும்பு, பெப்.24
மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் 6 ஆயிரத்து 400 மில்லியன் ரூபா மோசடி இடம்பெற்றுள்ளது. இந்த மோசடி தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும்படி இரகசிய பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் போக்குவரத்து துறை அமைச்சர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும் போதே இதனை போக்குவரத்து துறை அமைச்சர் குமார வெல்கம சபையில் கூறினார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு கணக்காய்வாளர் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட வருடாந்த அறிக்கையில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் 6400 மில்லியன் ரூபா மோசடி இடம்பெற்றுள்ளது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தனித்தனியாக இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் உதிரிப் பாகங்களை இணைத்து புதிய வாகனங்களை உருவாக்கி அதற்கான இலக்கங்களையும் வழங்கியுள்ளனர்.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் இந்த மோசடியால் அரசுக்கும் பல கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இந்த மோசடி தொடர்பாக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது. சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று புத்திக பத்திரண கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விக்கு போக்குவரத்து துறைகள் அமைச்சர் குமார வெல்கம பதில் அளித்தார். உறுப்பினரால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் உண்மையானவை.

திணைக்களத்தில் மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். எங்களது ஆட்சிக் காலத்திலேயே இடம் பெற்றுள்ளது. அதை மூடி மறைக்க விரும்பவில்லை.

இந்த விடயம் தொடர்பாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் மற்றும் சுங்கத் திணைக்கள ஆணையாளர் ஆகியோரிடம் விளக்க அறிக்கை கோரப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டில் சுனாமி பாதிப்பின் போது 2000 வாகன அடிச் சட்டங்களை இறக்குமதி செய்வதற்கான பேமிட்டுக்கள் வழங்கப்பட்டன.

இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட உதிரிப்பாகங்களைக் கொண்டு வாகனங்களை உருவாக்கி அவற்றைப் பதிவு செய்ய முயன்றுள்ளனர்.

சட்டப்படி இறக்குமதி செய்யப்படாத வாகனங்களை பதிவு செய்யவும் அவற்றுக்கான இலக்கங்களை வழங்கவும் முடியாது.

இதனால் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் உதவியுடன் பொலிஸ் மற்றும் முப்படையினரால் ஓரம் கட்டப்பட்ட பழைய வாகனங்களின் பதிவுப் புத்தகங்களில் மாற்றம் செய்யப்பட்டு சட்ட விரோதமாக உருவாக்கப்பட்ட வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இப்பொழுது போலன்றி முன்பு மோட்டார் சைக்கிள்கள், கார்கள், லொறிகள், பஸ்கள் என்று தனித்தனியாக இலக்கங்கள் வழங்கப் படுவதில்லை.

மோட்டார் சைக்கிள் இலக்கத்தில் கூட கார்களைப் பதிவு செய்துள்ளனர். இந்த மோசடிகளை நான் மூடி மறைக்க விரும்பவில்லை.

இந்த விடயத்தில் தனிப்பட்ட முறையில் மோட்டார் திணைக்களம் மட்டுமன்றி சுங்கத் திணைக்களம் பாதுகாப்பு படைகள் என்பனவும் சம்பந்தப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட திணைக்கள ஆணையாளர்களிடம் விரிவான அறிக்கைகளைக் கோரியுள்ளோம். அதேவேளை, இந்த விடயம் தொடர்பாகத் துரித விசாரணைகளை மேற்கொள்ளும்படி பணித்துள்ளோம் என்று அமைச்சர் மேலும் பதிலளித்தார். (ம-2)

## கொழும்புத்துறை வீதிகளுக்கு பெயர்ப் பலகைகள் இல்லை

யாழ்ப்பாணம், பெப்.24
கொழும்புத்துறை பிரதேசத்தில் அநேகமான வீதிகளுக்கு பெயர் பலகைகள் போடப்படாமையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக சுவாமியார் வீதி, விபுலானந்த வீதி, விதானையார் வீதி, இலந்தைக் குளம் வீதி, வில்வந்தெரு வீதி, வளன்புரம் வீதி மற்றும் கிழக்கு பிரதேசத்தின் அநேகமான வீதிகளுக்கும் இவ்வாறு பெயர் குறிப்பிடாத நிலைமையே காணப்படுகிறது.

இது குறித்து யாழ்.மாநகர உறுப்பினர் ஒருவர் கூறுகையில்:-

**பெயர் பலகைகளை நடுமாறு கடந்த ஒரு வருடத்துக்கு முன்பாகவே மாநகர சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.**

சம்பந்தப்பட்ட வீதிகளுக்கான பெயர் பலகைகளை நடுமாறு கடந்த ஒரு வருடத்துக்கு முன்பாகவே மாநகர சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதுவரைக்கும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

எனினும் இந்த வீதிகளின் பெயர் பலகைகளை விரைவில் நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.- என்று தெரிவித்தார். (ம-17)

# நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதில் எதுவும் இல்லை

## கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது குறித்து பரிசீலிக்கப்படும் என்றார் சபாநாயகர்



கொழும்பு, பெப்24
நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு அமைச்சர்களிடம் இருந்து பதில் கிடைக்காமை தொடர்பாக கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டு முடிவு எடுக்கப்படும் என்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐ.தே.க. உறுப்பினர் தயாநிதி ஜயசேகரவால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்தே சபாநாயகர் இதனைச் சபையில் தெரிவித்தார்.

தயாசிறி ஜயசேகர வெளிவிவகார அமைச்சிடம் வாய் மூல விடைக்கான கேள்வி ஒன்றை எழுப்பினார்.

பதில் அளிக்க வேண்டிய அமைச்சரோ அல்லது பிரதி அமைச்சரோ சபையில் இருக்கவில்லை.

இதனால் வழமை போல் ஆளும் கட்சிப் பிரதம கொரடாவான தினேஸ் குணவர்தன, இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க மூன்று வார கால அவகாசம் தேவை என்று தெரிவித்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தயாசிறி ஜயசேகர, சபாநாயகரிடம் முறைப்பாடு ஒன்றை முன்வைத்தார்.

நாடாளுமன்றத்தில் இந்த வார அமர்வுகளில் 11 கேள்விகளைக் கேட்டுள்ளேன்.

ஆனால் என்னுடைய கேள்விகளில் ஒன்றுக்காவது பதில் அளிக்கப்படவில்லை. பதில் அளிக்க வேண்டிய அமைச்சர்களும் சபையில் இல்லை. சபாநாயகர் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று அந்த முறைப்பாட்டில் தெரிவித்தார்.

இதனை ஏற்றுக் கொண்ட சபாநாயகர் இந்த விடயம் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பரிசீலிக்கப்படும் எனக் கூறினார். (ம-2)

# நகர அபிவிருத்திக்குத் தேவையான காணிகளை அரசு சுவீகரிக்கும்

## நாடாளுமன்றில் அமைச்சர் தினேஸ் குணவர்த்தன

கொழும்பு, பெப்.24
நகர அபிவிருத்தித் திட்டத்தை சிறப்பான வகையில் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான காணிகள் அரசால் சுவீகரிக்கப்படும்.

கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தை ஜனாதிபதியும் , பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாயவும் இணைந்து தயாரித்துள்ளனர்.

இவ்வாறு அமைச்சர் தினேஸ் குணவர்த்தன நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தகவல் தெரிவித்தார்.

ஐ.தே.க. உறுப்பினர் ரோஸி சேனாநாயக்க பிரதமரிடம் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பிரதமரின் சார்பில் பதில் அளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து சங்கராஜா மாவத்தையில் அமைந்தள்ள பீ.சி.சி. நிறுவனத்துக்கு உரித்தான காணி நகர அபிவிருத்தி அதிகார சபையால் சுவீகரிக்கப்பட்டுள்ளது.

சுவீகரிக்கப்பட்ட இந்தக் காணியில் மேற்கொள்ளப் படவுள்ள வேலைத்திட்டங்கள் என்ன. அந்தக் காணியின் பெறுமதி எவ்வளவு என்று கேட்டார் ரோஸி சேனநாயக்கா.

இந்தக் கேள்விக்கு, மதிப்பிடப்பட்ட காணி நகர அபிவிருத்தி அதிகார சபையால் சுவீகரிக்கப்படவில்லை என அமைச்சர் ஒரே வார்த்தையில் பதில் கூறிவிட்டார்.

இதுவரை சுவீகரிக்கப் படாவிட்டால் இனிமேல் சுவீகரிக்கும் திட்டம் உண்டா என்று இடைக் கேள்வி ஒன்றை எழுப்பினார் ரோஸி சேனாநாயக்கா.

கொழும்பு நகர அபிவிருத்தி திட்டம், ஜனாதிபதியாலும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாயவாலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இது குறித்து இப்போது பதில் எதுவும் கூறமுடியாது. நகர அபிவிருத்திக்குத் தேவையான காணியை அரசு சுவீகரிக்கும்.- என்றார். (ம-2)

# தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தில் 30 ஆண்டுகளுக்குப் பின்னர் களப் பயிற்சிகள்

வடமராட்சி,பெப்.24
தொண்டமானாறு வெளிக்கள ஆய்வு நிலையத்தில் சுமார் 30 ஆண்டுகால இடைவெளிக்குப் பின்னர் களப் பயிற்சிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகின்றன.

கடந்த போர் சூழ்நிலையைத் தொடர்ந்து தொண்டமானாறில் இருந்து இடம்பெயர்ந்து இருபாலை மற்றும் யாழ். கல்வித் திணைக்களம் ஆகியவற்றில் இயங்கி வந்த வெளிக்கள ஆய்வு நிலையம் சந்நிதி கோவில் சூழலில் சிலவாரங்களுக்கு முன்னர் இயங்கத் தொடங்கியது.

இதில் இருந்து களப் பயிற்சிகள், ஆய்வுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுகின்றன என்று தொண்டமானாறு வெளிக்கள ஆய்வு நிலையத்தின் உபதலைவர் ந.அனந்தராஜ் தெரிவித்தார்.

**இன்று களப் பயிற்சியில் நாடெங்கும் இருந்து 60 தமிழ், முஸ்லிம், சிங்கள விஞ்ஞான ஆசிரியர்கள் பங்குபற்றுகின்றனர்.**

இதன் அடிப்படையில் இன்று காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை இடம்பெறும் முதலாவது களப் பயிற்சியில் நாடெங்கும் இருந்து 60 தமிழ், முஸ்லிம், சிங்கள விஞ்ஞான ஆசிரியர்கள் பங்குபற்றுகின்றனர்.

இக்களப் பயிற்சிச் செயலமர்வில் இயற்கைப் பறவைகளின் வாழ்க்கை முறைகள், கடல் நீரேரி ஆய்வுகள் என்பன தொடர்பாக ஆய்வுகள் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பறவைகள் கண்காணிப்பு தொடர்பாக நிறுவனத்தின் விரிவுரையாளர்கள் இந்தக் களப் பயிற்சிக்கு வளவாளர்களாகப் பணியாற்றுவர்.

இந்தக் களப் பயிற்சியைத் தொடர்ந்து விஞ்ஞான ஆய்வுகள் சம்பந்தமான செயலமர்வுகள் காலத்துக்குக் காலம் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-8)

## 24 மணி நேரமும் செயற்படும் மருதங்கேணி வைத்தியசாலை

மருதங்கேணி அரசினர் பிரதேச வைத்தியசாலை 24 மணி நேரமும் இயங்கி வருகிறது. இதனைத் தொடர்ந்து பருத்தித்துறை, சாவகச்சேரி அரசினர் ஆதார வைத்தியசாலைகள், பளை பிரதேச வைத்திய சாலை ஆகியவற்றுக்குச் சிகிச்சை பெறவரும் நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

போதிய வைத்தியர்கள் இன்றி கிரமமாக இயங்க முடியாத நிலையில் மருதங்கேணி அரசினர் பிரதேச வைத்தியசாலை சில மாதங்களாக இருந்தது.

இந்த வேளை வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த நோயாளர்கள் வெளியிடங்களில் உள்ள வைத்திய சாலைகளிலேயே சிகிச்சை பெற்று வந்தனர்.

குறிப்பாகப் பருத்தித்துறை, சாவகச்சேரி அரசினர் ஆதார வைத்தியசாலைகள், பளை பிரதேச அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றிலேயே வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த நோயாளர்கள் சிகிச்சை பெற்று வந்தனர்.

மருதங்கேணி வைத்தியசாலை இயங்கத் தொடங்கியதை அடுத்து இந்த வைத்திய சாலைகளில் நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து நெருக்கடி நிலை நீங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.(ம-8)

## பாம்பு தீண்டியது

வயலில் வெட்டி அடுக்கப்பட்டிருந்த நெற்கதிர்களை அள்ளும் பணியில் ஈடுபட்ட குடும்பப் பெண் புடையன் பாம்பால் கடியுண்டார்.

இந்தச் சம்பவம் புதன்கிழமை மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயத்துக்கு அருகில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சண்முகரத்தினம் விஜயகீதா (வயது 38) என்பவர் பாம்பால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றார். (ம-9)





UK Engineering Courses

யாருக்காக...
- A/L இன் பின்னர் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை தவற விட்ட மாணவர்களுக்கானது!
- NCT, NCIT, HND NDT பூர்த்தி செய்த மாணவர்களுக்கானது.
- Bsc Degree படித்துக் கொண்டிருக்கும், படித்து முடித்த மாணவர்களுக்கானது.
- உயர்கல்வியை வெளிநாட்டில் மேற்கொள்ள இருப்பவர்களும், வெளிநாட்டில் உயர் சம்பளத்துடனான வேலைவாய்ப்பை எதிர்நோக்கி இருப்பவர்களுக்கானது.

Benefits
- Uk யை தலைமையகமாக கொண்டு 100 க்கு மேற்பட்ட நாடுகளின் பல்கலைக்கழகங்கள், அரச நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்.
- தவணை முறையில் பாடநெறிக்கட்டணத்தை செலுத்தும் வசதி.
- பொறியியல் படிப்புக்களின் இறுதி வருடத்தை Uk பல்கலைக்கழகங்களில் தொடரும் வாய்ப்பு.
- குறித்த துறையில் Diploma பாடநெறியை முடிப்பவர்களுக்கு பிரபல பொறியியல் கம்பனிகளில் வேலைவாய்ப்புக்கள் பெற்றுத் தரப்படும்.
- கடந்த ஜூன், டிசம்பர் Civil Diploma பரீட்சையில் 97% சித்திகள்

Civil Engineering / Quantity surveying
உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாட்டில் கூட உயர் சம்பளத்துடனான வேலை வாய்ப்புக்களை அள்ளி வழங்கும் கட்டிட நிர்மாணத்துறையில் வேலை வாய்ப்புக்களை எதிர்நோக்குவோரும், இத்துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்ள இருக்கும் மாணவர்களுக்கானது.

Electrical & Electronics Engineering
குடிசார் எந்திரவியலுடன் நெருங்கிய தொடர்புடைய மின்னியல், மின்னணுவியல் துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்ளவும், தொழில்வாய்ப்பை எதிர்நோக்கி இருக்கும் மாணவர்களுக்கானது..

Motor Vehicle Engineering
மோட்டார் வாகன பொறியியல் துறையில் வேலை வாய்ப்புக்களை எதிர்நோக்கி இருப்போரும், இத்துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்ள விரும்பும் மாணவர்களுக்கானது.

Electrical & Electronics மற்றும் Motor Vehicle
கற்கைநெறிகள் வரும் மார்ச் 2ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதால்...
உங்கள் பதிவுகளுக்கு அழையுங்கள்

0214 666 699
0771 067 394

City & Guilds APPROVED CENTRE

SKILLS COLLEGE OF TECHNOLOGY
Jaffna Campus
No. 207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Email : kajan@skillsinternational.lk
Website : www.skillsinternational.lk
Like us on Face book
www.facebook.com/scot.jaffna

SMS மூலம் விபரங்களைப் பெற ..
உங்கள் (Name) (Address) (Course) போன்ற விபரங்களை Type செய்து 0777 762 283 க்கு SMS செய்யுங்கள்.



வெளிநாட்டில் உயர்கல்வியுடன் பகுதிநேர தொழில்வாய்ப்பு STUDY & WORK

USA - TOFEL + Cost Rs 2 lacks + work
CANADA - No IELTS + Pay after visa + work
FRANCE - No IELTS + Pay after visa + work
POLAND | CYPRUS - No IELTS + Pay after visa + work
SWITZERLAND - IELTS 4.5 + Pay after visa + work
RUSSIA - No IELTS + No Sponsor + Lower tuition fee + work

ITALY- குறைந்த கட்டணம்|பகுதி நேர தொழில்வாய்ப்பு|PR|விசாவுக்கு பின் பணம் செலுத்துதல்
UK - குறைந்த கட்டணம்| 20மணித்தியால பகுதிநேர தொழில்வாய்ப்பு

அஸ்வின் - 0774848888 மஹேஷ் - 077 2702628

EUROPE ACADEMY
இல: 207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



காணி விற்பனை

தலையாளி வளவு பிரம்படி லேன் கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் (வைரவர் கோவிலடி) 2 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0777 279052
0776 875764



STUDY IN CANADA, LONDON, FRANCE, ITALY, NEWZLAND &MALAYSIA

- GCE O/L பொதுவான தகைமை
- IELTS தேவையில்லை
- பகுதிநேர தொழிலுக்கு உத்தரவாதம்
- குறைந்த விலையில் தங்குமிட வசதி
Visit Visa வுக்கான ஒழுங்குகள் செய்து தரப்படும்

COURSES (Diploma, Degree&Masters)
Marketing
Banking & Finance
Accounting
Nursing
Computing
Beauty Culture
Hotel Management
Travel & Tourism

CANADIAN STUDY CENTER
19-1/1,Galle Road,Dehiwela
Tel: 0770261447, 0776503622,

**உதயன் விளம்பரத் தொடர்புக்கு**
advt@uthayan.com
0215671111


**JOIN WITH US WE CAN HELP YOU**

உங்களுக்கு விருப்பமா? மாதமொன்றிற்கு ரூபா 45000 இற்கு மேல் உழைக்க அப்படியானால் எமது புதிய கிளைகளுக்கான பயிற்சியுடன் கூடிய பதவி வெற்றிடங்கள்
* Trainee managers
* Supervisors
* Administrator

வயது 19- 28
தகைமை O/L, 6 Pass
தொடர்பு: 0779297992
(33674)(7.11)

## வரலட்சுமி பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்

சகல விதமான மோட்டார் வாகனங்களுக்கும் பிளாஸ்ரிக் உடைவுகள் ஒட்டுதல், ஸ்பிறே பெயின்ரிங் செய்தல், பைவர் மோல்டிங், பிளேற்றிங் மொப்பிங், கண்ணாடி பொலிசிங் செய்தல் என்பன சிறந்த முறையில் சீர்செய்து கொடுக்கப் படும். (நல்லூர் பின் வீதி)
இல.286/2, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: கி.கேதீஸ்வரன் 077351 2591

## காணி விற்பனைக்கு

மல்லாகம் கே.கே.எஸ்.வீதியில் (சோடாக்கம்பனி ஒழுங்கை) 05 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:0777532994
(28970)(3.6.7)

உ
சிவமயம்



## வன்னிப் பெருநிலப்பரப்பு சைவக்குருமார் ஒன்றியம்

பதிவு இல:- HA/4/V/22

வன்னிப் பெருநிலப்பரப்பிலே பூசை செய்யும் இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத சைவக் குருமார்கள் அனைவரும் தங்களது விவரங்களைக் கீழ்க்காணும் முகவரிகளில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

01. சிவஸ்ரீ ஆ.ஸ்ரீகாந்தன் குருக்கள் (செயலாளர்)
இல. 44, ஆனந்தபுரம், கிளிநொச்சி.
02. சிவஸ்ரீ க.சிவராசக்குருக்கள் (தலைவர்)
இல. 9/1, கோயில் வீதி, குருமன்காடு, வவுனியா.
03. சிவஸ்ரீ.சசாங்கன் குருக்கள் (போசகர்)
2 ஆம் வட்டாரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பு.

- சைவக்குருமார் ஒன்றியம்.

(33703)(2.7)

## டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் வாகனங்களின் உடைந்த பிளாஸ்ரிக் உதிரிப்பாகங்கள் அனைத்தும் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும்.
இல. 06, ..., கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
கிளை: இல. 30/27, ..., நல்லூர்.
Tel: 021 222 8680, 0775925088, 0750407430

## வேலை வாய்ப்பு

யாழ்.மண்ணில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மத்திய கிழக்கு அலுவலகமொன்றில் பலதரப்பட்ட பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன...
* Supervisors/மேற்பார்வையாளர்கள்
* Sales Executives/விற்பனை நிறைவேற்று அதிகாரிகள்
* Sales Managers/விற்பனை முகாமையாளர்கள்
* Marketing Officers/சந்தைப்படுத்தல் அலுவலர்கள்

பயிற்சியின் போது மாதாந்த வருமானம் 25000/= பயிற்சியின் பின் வருமான அதிகரிப்பு
* கல்வித்தகமை - குறைந்தபட்சம் க.பொ.த. சா/தரம்-சித்தி
* வயதெல்லை -18-30

தொடர்புகளுக்கு :
இல 275,1/3 மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்(ஆஸ்பத்திரிக்கு பின்பக்கம்)
T.P.0212219995
(33597)(3.7)

## பன்னிரண்டாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் கோபாலபிள்ளை
**தினகரதாஸ்**



மலர்வு 08.05.1984
உதிர்வு 08.03.2001

உதய சூரியனாய் எம் உறவில் உதித்தவனே
ஆண்டுகள் ஆயிரம் ஆனாலும் – உன்
நினைவுகள் நெஞ்சை விட்டு அகலாதடா
தினகரனே நீ வாழ்ந்த சில காலம் – பல
யுகமாய் தோன்றுதடா.....

கிளான், துன்னாலை தெற்கு, கரவெட்டி.
என்றும் உன் நினைவுகளுடன் குடும்பத்தினர்.
(C9210)(6.7.10)

## மணமகள் தேவை

5' 4" உயரமுடைய பட்டதாரி பணிபுரியும் 30 வயதுடைய R.C. மணமகனுக்கு பெற்றோர் நல்ல வரனை தேடுகின்றனர். வெளிநாடும் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 2369 976
(33748)(6.7.10)

## வேலையாள்கள் தேவை

25,000/ சம்பளத்திற்கு எங்களுடைய க்ளவுஸ் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு 16-55 வயது வரையான ஆண்கள், பெண்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு. குழுக்களாகவும் வரலாம். வரும் அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.
அழையுங்கள்: 077 303 2004, அனுராதபுரம்.

## கார் விற்பனைக்கு

model: FB-15 என்ற NISSAN SUNNY கார் இயந்திரக் கொள்ளவு 1.5CC உற்பத்தி 2002 பதிவு 2005
Manual வசதியுடைய NissaSunny கார் விற்பனைக்கு. தொடர்பு: 077 360 5841
(33737)(5.6.7)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். புறொயிலர் சுத்தம் செய்தது-500/=மட்டும்
நந்தினி பாம்,
இராசபாதை றோட், கல்வியங்காடு.
T.P 0779683028 (33582)(3.7)

## IELTS

A1 B1 B2
Quick Preparation Class Av. Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
K.U Education, No 75, Temple Road, Jaffna. IELTS Centre

## நெற்காணி விற்பனைக்குண்டு

கண்டாவளை மகாவித்தியாலயத்தின் முன் ஒழுங்கையிலிருந்து ½KM தூரத்திலுள்ள நுணாவில் கமம் 01 புதுக்காடுவயல் 12 ஏக்கர் விற்பனைக்கு உண்டு. சிறுபோகமும் செய்யக்கூடியது முழுமையாகவோ பிரித்தோ கொடுக்கப்படும்.
தொடர்பு:0779883583
0214901053

## விற்பனைக்கு

சொகுசு பஸ்ஸின் பின் வீல் ப்ரேக் ரம் பின் வீல் செற்றாக விற்பனைக்குண்டு. சாப் (Sharp) போட்டோக் கொப்பி மிசின் மலிவு விலையில் உண்டு.
தொடர்பு: இல.44, மார்டின் லேன், யாழ்ப்பாணம்.
(33707)(7.11)

## காணி விற்பனைக்கு

நீர்வேலி, கரந்தன்றோட்டில் இருந்து 100 யார் தூரத்தில் ராமுப்பிள்ளை பாடசாலைக்கு அருகில் 10 பரப்புத் தோட்டக்காணி கிணற்றுடன் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776511682, 0217903917
(33669)(7.11)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், சுண்டுக்குளியில் சகல வசதிகளுடன் பெரியவீடு வாடகைக்குண்டு. நிறுவனங்களுக்கும் உகந்தது. தொடர்பு:
077 113 2011, 077 188 7626
(33746)(5.6.7)

## விற்பனைக்கு

மிருசுவிலில் சகல வசதிகளுடன் கூடிய மர அரிவு ஆலை விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 255 7761
(27851)(5.7.25)

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளும் கொண்ட வீடு யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையாகவும் யாழ் நகரத்தில் வீடு வாடகைக்கு உண்டு. பார்வையிடும் நாள் (24.02.2013) ஞாயிற்றுக் கிழமை மட்டும்.
தொடர்பு: 077 286 6429
(33737)(5.6.7)

## லொறி விற்பனைக்கு

Lanka Ashok Layland Gold comet, 1612 கெண்டெயினர் பெட்டி பொருத்தப்பட்ட 5000km மாத்திரம் ஓடியநிலையிலுள்ள LNxxxx இலக்க புத்தம் புதிய லொறி விற்பனைக்குண்டு. விலை 40 இலட்சம் பேசித்தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 0718452548

## வீடு விற்பனைக்கு

பழைய பூங்கா வீதியில் 2½ பரப்புக் காணி வீட்டுடன் 70 இலட்சத்திற்கு விற்பனைக்குண்டு
தொடர்பு: 0776184704
(33679)(6.7.11)

## வெற்றி நிச்சயம்

**PHYSICS**
25.02.2013 MONDAY

| | |
|---|---|
| 2013 BATCH | -1.00PM -3.00 PM |
| DAY BATCH | -3.00PM -5.00PM |

NEW SCIENCE HALL, JAFFNA
(C/6669)(3.6.7)

## கண்ணீர்க் காணிக்கை



## இராஜ்குமார் ரவிராஜ்

வார்த்தைகளில் வலுவில்லை பேச்சுக்களும் இங்கே பேச்சிழக்கின்றன– மூச்சை நிறுத்தியவனே
மூச்சிழக்கும் நேரமெல்லாம்– ரவி உந்தன் பொன் முகமே
எம் சோகம் தவிர்க்க சொந்தமாய் பழகியவனே! சாரணியச் சோதரனே
உதவி என்னும் வார்த்தையெல்லாம் உன்னிடம் உதவி கேட்டு நின்றனவே
இனி எமக்கு ஒன்றெனில் யாரிடம் போவோம்? அதையும் நீயே சொல்லி விடு
அழைப்பெடுத்தால் போதும் அரைநொடியில் அங்கு நிற்பாய்
உதவியென்றால் ஏதோ உனக்குரிய வேலை போல் உதவிக்குத்தான் பிறந்தது போல்
எமக்குணர்த்தி நின்றாயே! எம் கைகளிற்குத் தெரியவில்லை–
உன் கைத்தொலைபேசி அணைந்த கதை–சும்மாவா?
அழைத்துப் பழகிய கை சோகமெனில் உனை அழைக்கத்தானே செய்யும்
இறைஞ்சிக் கேட்கிறோம் எம் கைகளிற்குச் சொல்லிவிடு–இனி
இவன் மீளாத்துயில் கொள்கிறான் என்று

நண்பர்கள்
(C/6040)(6.7.11)

## கண்ணீர்அஞ்சலி

யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர் வ. சிவகணேசன் அவர்களின் தாயார்
**வயிரவப்பிள்ளை தெய்வநாயகி**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஊழியர் நலன்புரி சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
(C6841)(6.7.11)

## மரண அறிவித்தல்

திருமதி
**மனோன்மணி சிவசுப்பிரமணியம்**



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், மாகியப்பிட்டி, சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி சிவசுப்பிர மணியம் 22.02.2013 வெள்ளிக் கிழமை சிவபதமடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான டாக்டர் பொ.மயில்வாகனம் (மலாயன் பென்சனியர்) - தங்கம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காங்கேசன்துறையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான குமாரசாமி–பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், கு.சிவசுப்பிரமணியம் (ஓய்வு, நீர்ப்பாசன திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும் விஜயகுமார் (லண்டன்), பாமினி (நோர்வே), றவிக்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயக்குமாரி, ஜெயக் குமார், கயல்விழி ஆகியோரின் அன்பு மாமியும், அபிஷன், ஹருணி, வர்ஷா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், மகேஸ்வரி (கனடா), மனோறஞ்சிதம், தருமராசா (கனடா), டாக்டர். கனகராஜா (கனடா), டாக்டர் ஞானபவன் (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரியும், திருமதி வி.பொன்னம்மா, திருமதி மு.இராசமணி, கு.சிவகுருநாதபிள்ளை திருமதி பா.அன்னலட்சுமி, திரு.கு.கிருஸ்ணமூர்த்தி ஆகியோரின் அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் அளவெட்டி கொட்டுபனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.
தகவல்:
குடும்பத்தினர்.
(33688)(1.19.6.7)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
1970.05.27

உதிர்வு
2008.02.19

## சோமசுந்தரம் சதானந்தன்

நித்தமும் உங்கள் நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இல.13B,
ஐயனார் கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (33673)(2.7) மனைவி, பிள்ளைகள்.

---

புங்குடுதீவு இறுப்பிட்டி 6ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள

## நாகபுவனேஸ்வரி அம்பாள்

(நாச்சிமார் கோயில்) ஆலய திருப்பணி தொடர்பான

## அறிவித்தல்

நாகபுவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் புதிய நிர்வாகக்குழு தெரிவு செய்யப்பட்டு ஆலயத்தின் திருப்பணி வேலைகளுக்காக அம்பாள் அடியார்களிடமிருந்து அன்பளிப்புக்களை பெறும் பொருட்டு பொருளாளர் நாகலிங்கம் தங்கராஜா அவர்களும் செயலாளர் நல்லதம்பி சபாரெட்ண சிங்கம் அவர்களும் இணைந்து ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள வர்த்தக வங்கியில் தனித்து ஒருவர் மட்டுமல்லாது இருவரும் சேர்ந்து பணம் மீளப் பெறும் வகையில் கணக்குப் புத்தகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கணக்கு இலக்கம் : 8060097480. எனவே அம்பாள் அடியார்கள் தங்களால் இயன்ற உதவியை மேற்குறிப்பிட்டுள்ள இலக்கம் கொண்ட வங்கிக் கணக்குக்கு அனுப்பிவைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஆலய திருப்பணிக்குழு

நா.சபாரெட்ணசிங்கம்
செயலாளர்:

கொமர்ஷல்வங்கி
(8060097480)

ந.தங்கராஜா
பொருளாளர்:

(33653)(45. 3.6.7)

---

# மரண அறிவித்தல்

## திருமதி கணபதிப்பிள்ளை ருக்மணி



தமிழ் நாட்டைப் பிறப்பிடமாகவும் (இந்தியா), ஆவரங்கால் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை ருக்மணி நேற்று (23.02.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியபிள்ளை- சீதாலச்சுமி தம்பதியரின் அன்பு மகளும், செல்லத்துரை - நீலாயதாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரை - கணபதிப்பிள்ளையின் (வைத்தியர்) அன்பு மனைவியும், சிவகுமாரன் (இளைப்பாறிய தலைமை மேற்பார்வையாளர் யா/ போதனா வைத்தியசாலை), செல்வத்துரை, சுந்தரேசன் (கனடா), சோமசேகரம், காலஞ்சென்ற முரளிதரன் மற்றும் அமிர்தவல்லி (இந்தியா), சுந்தரவல்லி, சௌந்தரவல்லி (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தாயும், கமலநாதசத்தியேஸ்வரன் (பிரான்ஸ்), கமலேஸ்வரி, புஸ்பமலர், சந்திரா (கனடா), நந்தினி ஆகியோரின் அன்பு மாமியும், சசிகரன் (பாறின்), கபில்ராஜ் (கனடா), விஷ்ணுவன், அனுசா, தர்சிகா, கௌசிகா, நிருஜா, கம்சாயினி, ஜெயசுதா, ஜெயதேவி, கவிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், லாவண்யா, சௌமியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2013) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆவரங்கால் கருதடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்தை வீதி,
ஆவரங்கால் மேற்கு. (33747) (45.6.7)

தகவல்:
குடும்பத்தினர்

தொலைபேசி: 021 3735 126, 077 9779 782,
இந்தியா: 0091978868891,
பிரான்ஸ்: 0033751396037,
கனடா : 00164 77647218.

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 104

# உங்கள் பிள்ளையின் நிறைகணிப்பு ஏன் அவசியம்



வைத்தியர்:- பிள்ளைக்கு நிறை குறைவு என்று அனுப்பியிருக்கினம்...

தாய்:- ஆம் நிறை குறைவு தான். ஆனால் அவன் நல்ல சுட்டி. நிறை குறைஞ்சாலும் 'அக்டிவ்' என்றபடியால் நான் கவலைப்படவில்லை. ஆண் பிள்ளை உயரம் குறைவாய் இருக்கிறான் என்றபடியால்தான் வந்தனான்.

குழந்தைகளின் வளர்ச்சி வயதுக்கேற்ப இருப்பது பெற்றோர்களின் பெருவிருப்பமாகும். வளர்ச்சியில் ஏற்படும் குறைபாடுகளை ஆரம்பத்திலேயே அடையாளம் காண்பதால் பல விரும்பத்தகாத பின் விளைவுகளைத் தடுக்க முடியும். சில நேரங்களில் நோய் நிலைமைகளின் ஆரம்ப வெளிப்பாடாகவும் வளர்ச்சிக் குறைபாடு அமைகின்றது.

வளர்ச்சிக்குரிய அளவீடுகளைக் கால இடைவெளிகளில் அளந்து குறிப்பதனால் வளர்ச்சி அளவு கணிக்கப்படுகின்றது.

**குழந்தையின் வளர்ச்சியைக் கணிக்க உதவும் அளவீடுகள்**

★நிறை
★நீளம்/ உயரம்
★மேற்புயத்தின் மத்திச் சுற்றளவு
★தோல் மடிப்பின் தடிப்பு
★இடுப்புச் சுற்றளவு

மேற்குறிப்பிட்ட அளவீடுகளில் நிறை வளர்ச்சிப்படியின் தாக்கங்களை குறுகிய காலத்திலும் நீண்ட காலத்திலும் ஒப்பு நோக்க உதவும் இலகுவான அளவீடாகும்.

உங்கள் பிள்ளையின் நிறையைத் திருப்திகரமாகப் பேணுவது ஏன் அவசியமாகிறது?

★நிறை அதிகரிப்பு பிள்ளையின் வளர்ச்சியின் அளவு கோலாகக் கருதப்படுகின்றது.

● நீண்ட நாள்களாக நிறைக்குறைவு ஏற்படும் போது அது பிள்ளை அடைய வேண்டிய உயரத்தைப் பாதிக்கின்றது.

● மூன்று வயதுக்குட்பட்ட பிள்ளைகளில் மூளை வளர்ச்சியும் திறமைகள் விருத்தியடைவதையும் பாதிக்கின்றது.

★ நிறைகுறைவான பிள்ளைகள் அடிக்கடி கிருமித்தொற்றுக்குட்படும் நிலைமையும் நோய்வாய்ப்படும் தன்மையும் காணப்படுகின்றன.

★ நிறை குறைவான பெண் பிள்ளைகள் அவர்கள் தாயாகும் வேளையில் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி இருக்கின்றனர். ஆகவே

★ திருப்திகரமான மூளை வளர்ச்சி, விருத்தி.

★ வயதுக்குரிய உயரத்தை அடைதல்.

★ கிருமித் தொற்றுகளிலிருந்து பாதுகாப்பு.

என்பவற்றுக்கு பிள்ளையின் நிறையைச் சரியாகப் பேணுவது அவசியமானது.



உங்கள் பிள்ளையின் நிறையைத் தீர்மானிக்கும் காரணிகள்

**பிறப்பு நிறையைத் தீர்மானிக்கும் காரணிகள்**

★ தாயின் உயரம்.
★ கர்ப்பகாலத்தில் ஏற்படும் நிறை அதிகரிப்பு.
★ கர்ப்பகாலத்தின் முன்னரும் அதன் போதுமான தாயின் போசனை.
★ தாயின் கர்ப்பகால நோய் நிலைமைகள்.
★ குழந்தையில் ஏற்படும் நோய் நிலைமைகள்.
★ பரம்பரைக் காரணிகள்

**பிறப்பின் பின்னரான வளர்ச்சி பின்வரும் முக்கிய காரணிகளால் நிர்மாணிக்கப்படுகின்றது.**

★ ஒரு வயது வரை- போஷாக்கான உணவினால்
★ 2 முதல் 10 வயது வரை- தைரொக்சின் வளர்ச்சிக்குரிய ஹோர்மோன்கள்
★ பூப்படையும் வயது - பாலியல் ஹோர்மோன்கள்.

**எல்லா வயதுள்ள பிள்ளைகளிலும் பின்வரும் காரணிகள் வளர்ச்சியில் பங்களிக்கின்றன.**

★போஷாக்குள்ள உணவு
★ஆரோக்கியமான உடல்நிலை
★திருப்திகரமான உளநலம்
★ சமநிலையிலுள்ள அகஞ்சுரப்பிகளின் சுரப்புக்கள்.

எனவே நிறைகுறைவு மேற்கூறப்பட்ட காரணிகளில் சமநிலையில்லாத போது ஏற்படுகின்றது. ஆரம்பத்திலேயே நிறைக்குறைவுக்கு உரிய காரணத்தைக் கண்டறிவதும் நிவர்த்தி செய்வதும் மிக அவசியம். இல்லாவிடின் அது பிள்ளையின் உயரம், மூளை வளர்ச்சி- விருத்தி என்பனவற்றையும் பாதிக்கின்றது.

**குமுதினி கலையழகன்**
**குழந்தை நல வைத்தியர்,**
**யாழ். போதனா வைத்தியசாலை**

# கைகளைச் சரியாகக் கழுவுவதன் மூலம் தொற்றுக்களைத் தடுப்போம்

மனிதனது கைகள் மூலமாக அநேகமான நுண்ணங்கிகளின் தொற்று ஏற்படுகிறது. நுண்ணங்கிகள் உடலின் நிர்ப்பீடனசக்தி வலுவாக இருக்கும் போது நோய்களை ஏற்படுத்தா. ஆயினும் நோய் எதிர்ப்பு சக்தி குறையும் போது இவற்றினால், தடிமன், காய்ச்சல் போன்ற பல்வேறு தொற்று நோய்கள் ஏற்படலாம்.


எம்மில் பலர் மலசலகூடம் பாவித்த பின்னரும் மற்றும் தொற்றுள்ள பொருள்களை கையாண்ட பின்பும் கைகழுவத் தவறிவிடுகிறோம்.

பொது விரல் நுனியில் முழங்கைப் பகுதியில் 2 மில்லியன் தொடக்கம் 10 மில்லியன் வரையான பக்றீரியாக்கள் காணப்படுகின்றன. மலசலகூடம் பாவித்த பின்னர் இந்தப் பக்றீரியாக்களின் எண்ணிக்கை இரண்டுமடங்காக அதிகரிக்கின்றன. நுண்ணங்கிகளால் பொது கைகளில் 3 மணித்தியாலம் வரை உயிருடன் வாழமுடியும்.

நீரும் சவர்க்காரமும் கொண்டு சரியான முறையில் கைகழுவுதல் தொற்று நோய்களில் இருந்து உங்களைப் பாதுகாப்பதோடு, உங்கள் குடும்ப உறுப்பினர்களையும் பாதுகாக்கும். தொற்று நோய்கள் ஏற்படாமல் இருக்க மிகவும் இலகுவான முறை இதுவாகும்.

**பிள்ளைகள் கைகழுவுவதன் முக்கியம்**

எல்லாப் பிள்ளைகளிடமும் கைகழுவுவதனால் ஏற்படும் நன்மைகளைப் பற்றி தெளிவாக எடுத்துக் கூற வேண்டும். பொருத்தமான நேரங்களில் பிள்ளைகளின் கைகளைக் கழுவுவதற்கு அவர்களை ஊக்குவிக்க வேண்டும். இதன் மூலம் சிறுவர்களில் ஏற்படும் தடிமன், வயிற்றோட்டம் போன்ற நோய்கள் ஏற்படாமல் தடுக்கலாம். இவ்வாறான பழக்கங்களை இளமையில் ஆரம்பிப்போமாயின் அவர்கள் தங்கள் வாழ்க்கை பூராவும் இதனைக் கடைப்பிடிப்பார்கள்.



**எவ்வாறு உங்கள் கைகளை கழுவ வேண்டும்**

கைகழுவுதல் ஒரு சரியான படிமுறையில் செய்யப்பட வேண்டும். ஆகக்குறைந்தது 15 செக்கன்களுக்கு சரியான முறையில் கைகழுவ வேண்டும். சிறுவர்களுக்கு எவ்வாறு கைகழுவ வேண்டும் என்பதை சரியாகக் காட்டிக் கொடுக்க வேண்டும். இவற்றில் பின்வரும் படிமுறைகள் முக்கியமானவை.

★கைகளை நீரில் நன்றாக நனைக்க வேண்டும்.

★ கையின் மேற்பரப்பில் சவர்க்காரம் அல்லது கைகழுவுவதற்கென தயாரிக்கப்பட்ட கரைசலை நன்றாக பிரட்டவும்

★ உள்ளங்கைகளை நன்றாக உரோஞ்சவும்.

★வலது உள்ளங்கையால் இடது கையின் பின்புறத்தையும் அவ்வாறே இடது உள்ளங்கையால் வலது கையின் பின்புறமாக விரல்களுக்கிடையில் நன்கு சவர்க்காரம் பூசவும்.

★பின்னர் கைவிரல்கள் ஒன்றை ஒன்று பின்னியவாறு உள்ளங் கைகளை நன்றாக உரசித் தேய்க்கவும். பின்னர் விரல்களின் பின் புறத்தை இரு உள்ளங்கைகளையும் ஒன்றுடன் ஒன்று பிணைத்து பிடித்து உரசுவதன் மூலம் சவர்க்காரத்தைப் பூசவும்.

பெருவிரல்கள் ஒவ்வொன்றையும் எதிர்ப்பக்கமாக வட்டமான முறையில் தேய்க்கவும்.

★பின்னர் விரல் நுனிகளில் எதிராக உள்ள உள்ளங்கைகளில் வட்டமான முறையில் உரசவும்.

★மணிக்கட்டுப் பகுதியை எதிர்ப்புறமான கையில் நன்கு உரசவும்.

★நீரில் கைகளை நன்கு கழுவவும். கழுவும் போது விரல் நுனிகளின் ஊடாக நீர் வெளியேற வேண்டும். பின்னர் சுத்தமான துணியினால் கைகளைதுடைக்கவும்.

**கைகள் கழுவுதல் பின்வரும் செயற்பாடுகளுக்கு -பின்னரும் முன்னரும் மேற்கொள்ளப்பட வேண்டும்.**

★உணவு தயாரிக்க முன்னர் அல்லது சாப்பிட முன்னர்

★புண்களை கையாள முன்னர்

★ வைத்தியசாலைகளில் நோயாளிகளைப் பார்வையிட முன்னர்

**பின்வரும் செயற்பாடு களின் பின்னர் கைகழுவ வேண்டும்**

மலசலகூடங்களைப் பாவித்த பின்னர்,


சமைக்காத உணவுகளைக் கையாண்ட பின்னர், முக்கியமாக சமைக்காத இறைச்சி, மீன்கள் போன்றவற்றை கையாண்ட பின்னர், மூக்கை சீறிய பின்னர், இருமிய, தும்மிய பிறகு, விலங்குகள், விலங்குகளின் கழிவுகளை அகற்றிய பின்னர், பிள்ளைகளின் மலம், சலம் அகற்றப்பட்ட பின்னர்

தோட்டத்தில் வேலை செய்த பின், நோயுற்ற அல்லது காயப்பட்ட ஒருவரை பராமரித்த பின்னர் விடுதிக்கு/ வைத்தியசாலைக்கு சென்று வந்த பின்னர்.

கைகழுவுவதன் முக்கியத்துவத்தை உலக மக்களுக்கு உணர்த்தும் முகமாக ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாதம் 15 ஆம் திகதியை சர்வதேச கை கழுவும் தினமாக உலக சுகாதார ஸ்தாபனம் பிரகடனப்படுத்தி பல்வேறு வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. நாமும் சரியான முறையில் கைகழுவுவதன் மூலம் ஆரோக்கியமான வாழ்க்கையை அமைத்து நீடுழி வாழ்வோமாக.

**கோ.நந்தகுமார்,விரிவுரையாளர்**
**தாதியர் பயிற்சிக் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்**





# கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதி, பழைய காளி கோயில் என விளங்கும்

# திருவருள் மிகு ஸ்ரீ சிவமஹா காளி அம்மாள் ஆலய

# தேர்த் திருவிழா சிறப்புமலர் – 24.02.2013

## ஆலய வரலாறு

சிவபூமியென திருமூலரால் சிறப்பிக்கப்பெற்ற யாழ்ப்பாணத்தை அண்மித்ததாகவுள்ள கோண்டாவில் என்னும் கிராமத்தில் பொற்பதிவீதியில் பழைய காளிகோயில் என்ற பழம் பெரும் புகழுடன் புகழ்பூத்து விளங்குகின்றது ஸ்ரீ சிவமகாகாளி அம்மன் ஆலயமாகும். இன்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமைவாய்ந்த இவ்வாலயமானது மிகவும் அரும்பெரும் கொடையாக கிடைத்த பொக்கிஷமாகும்.

முற்பட்ட காலத்தில் தற்போது இவ்வாலயம் இருக்குமிடத்தில் கள்ளிப்பற்றை மூடப்பட்டுக் கிடந்தது. அவ்வாறு கள்ளிப் பற்றை சூழப்பட்ட இடத்தில் அம்மன் சிறுபிள்ளையாக, ஒளி வடிவாக, பாம்பு வடிவாகத் தெரிந்ததாக வாய்மொழிக்கதைகள் கேட்கப்பட்டு அடியவர்களுக்கு கூறப்பட்டிருக்கின்றன. கள்ளிப்பற்றையின் நடுவே அம்மனின் அருள் பெற்ற அடியவர் ஒருவர் வந்து வணங்கிச் செல்வது வழக்கம் அவரது உடலில் முள்கள் குற்றுவது இல்லை. அவ்வாறு அடியவரைக் காக்கும் அன்பு ரூபமாக அன்னையவள் கள்ளி முட்களின் நடுவே கருணைத் தெய்வமாக வீற்றிருந்தாள்.

இப்படியாக கருணை சொரியும் அன்னைக்கு திருக்கோயில் ஒன்று அமைக்கவேண்டும் என்பது அவ்வூர் மக்களதும் அடியவர்களதும் அவாவாகும். அவர்கள் தமது ஆசையை அன்னையின் அருள் பெற்ற பக்தரிடம் கூறி அன்னையின் அருள்வாக்கை பெற்றுத் தரும்படி வேண்டிநின்றனர். அதற்கமைய அடியவர் அன்னையின் அருளிலே மூழ்கி வாக்குக் கேட்டார். அன்னையவள் தான் இருக்கும் கருவறையையும் காட்டிநின்றாள். எலுமிச்சம் பழம்கொண்டு தனது திருமஞ்சக்கிணறு அமைய வேண்டிய இடத்தை அன்னையவள் குறித்து நின்றாள் வற்றாத திருமஞ்சக்கிணறு மிகவும் புண்ணிய தீர்த்தமாகும். நோய்தீர்க்கும் அருமருந்தாகவும் பிணிதீர்க்கும் அருமருந்தாகவும் விளங்குகின்றது. இவ்வாலயமானது அருள்கொண்ட பக்தரொருவரினால் ஒருமண்டல நோன்பு நோற்கப்பட்டு கும்பத்தில் அன்னையை எழுந்தருளச் செய்து அன்னையின் ஆயுதமான திரிசூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இவ்வாறிருக்க மேலும் பல வருடங்களின் பின்னர் ஐம்பொன்னாலான காளி அம்மன் விக்கிரகம் பிரதிஷ்டை செய்து வழிபடப்பட்டது.

அந்தக் கால வழக்கப்படி அம்மன் எழுந்தருளும் ஆலய முன்றிலில் காத்தவராயனுக்கு அடையாளமாக கழுமரம் அமைக்கப்பெற்றிருந்தது. கழுமரத்தின் முன் மிருகபலியும் கொடுக்கப்பட்டது. அம்மன் அந்த மிருகபலியை விரும்பவில்லை. மிருகபலி நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் அடியவர் ஒருவர் தனது கையிலே கத்தியால் கீறி அம்மன் மிருகபலியை வெறுப்பதை உணர்வு ரூபமாக காட்டினார். பின்னர் அவர் கையில் ஏற்படுத்திய காயங்கள் அம்மன் அருளால் இரேகைகளாக மாற்றப்பட்டன என்றும் செவிவழிக்கதைகள் கூறுகின்றன.

ஆரம்ப கால கட்டத்தில் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் நடைபெற்ற பூசையானது பின் தினம் இருவேளைப் பூசையாக மாறியது. மடாலயமாகக் காணப்பட்ட இவ்வாலயமானது சுண்ணாம்புக் கட்டடமாக ஆரம்பத்தில் காணப்பட்டது. பாம்புப் புற்றுகள் சூழ்ந்த இடத்திலே நாகபாம்பின் நடுவினிலே அன்னையவள் மிகவும் ஆனந்தமாக இடமாற்றத்தை விரும்பாதவளாய் மிகவும் எளிமையுடன் வீற்றிருந்தாள்.

அன்னையின் அருள் பெற்ற அடியவர்களோ அன்னைக்கு மிகவும் அழகான ஆலயம் அமைக்க வேண்டுமென்று ஆசை கொண்டார்கள். அம்மனின் அருள்வாக்கையே எதிர்பார்த்து நின்றார்கள். அன்னையவள் மிகவும் அமைதியாகவே இருந்தாள். காரணம் யாதோ என்று பக்தர்கள் மனம் வருந்தி நின்றார்கள்.பின் இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த சிவபாலயோகி மகரிஷியாரால் பெரிய சண்டி ஹோமம் வளர்த்து பூர்ணாகுதி கொடுத்து யாகம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் மகரிஷி கலந்து கொண்டார்கள். அப்பொழுது அடியவர்கள் வினாவிய பொழுது அருகில் இருக்கும் ஆதி மட விநாயகரின் ஆலய திருப்பணிகள் முடியும் வரை தான் காத்திருப்பதாக அன்னையவள் கூறினாள்.

அன்னையவள் விநாயகரின் திருப்பணிகள் நிறைவு பெற்றதும் தனது திருப்பணி வேலைகளை ஆரம்பிக்குமாறு உத்தரவு பணித்தாள். அன்னையவள் எண்ணப்படியே ஆலயம் அமையப் பெற்றது. இலங்கையில் ஏழுநிலை விமானங்கொண்ட சிறப்புறு கோயிலாக அமையப் பெற்றிருக்கின்றது. அது மட்டுமல்லாது சிவமகாகாளியுடன் சரஸ்வதியும் லக்குமியும் சேர்ந்து முப்பெரும் சக்தியும் ஒருங்கே அமையப்பெற்று விளங்கும் எழில் மிகு காட்சியையும் இங்கு காண முடிகின்றது.

ஸ்ரீ சாமுண்டீஸ்வரியின் இராசதானியான மைசூரிலிருந்து அம்மனின் திருவுருவம் வரவழைக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இறையருள் நிறைந்த இக் கோயிலானது காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட சிவலிங்கம் சிவபால யோகி மகரிஷியுடன் இணைத்து கட்டப்பட்டிருக்கின்றது. காசியில் சென்று பூசித்து கிடைக்கும் அருளானது இங்கு கிடைக்கின்றது. சிவராத்திரி தினத்தன்று ஆசி மட விநாயக ஆலயத்தில் இருந்து குடத்தில் நீரெடுத்து தலையில் சுமந்து வந்து காசீஸ்வர அபிடேகம் செய்யபடுகின்றது. அடியவர்கள் இந்த நிகழ் வில் பங்கு பற்றும் காட்சியானது மிகவும் உணர்வு பூர்வமானதாகும்.

தை மாதம் 29 ஆம் நாள் 11.02.2013 திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகி மாசி மகத்தில் தீர்த் தோற்சவத்துடன் நிறைவு பெறும். முதல் ஐந்து நாள்களும் விநாயகர், சுப்பிரமணியருக்கும், மிகுதி பத்து நாள்களும் அம்பாளின் அனுக்கிரகப்படி அம்மனின் மஹோற்சவம் இடம்பெறும். இருபது நாள்களும் இலட்சார்சனை இடம் பெறுவது மிகவும் பக்தி ரூபமான காட்சியாகும்.

தேர்த்திருவிழா பெண்கள் வடம்பிடித்து வருவது மிகவும் சிறப்பானகாட்சியாகும். இந்தியாவில் மருவத்தூர் அம்மன் ஆலயத்தில் எவ்வாறு பெண்கள் பணிசெய்கிறார்களோ, அவ்வாறு இங்கும் பெண் அடியவர்கள் பணிசெய்வது மிகவும் பெருமைக்குரியதாகும். அவ்வாறு தொண்டுசெய்யும் அடியவரை அன்னையவள் கைவிட்டதும் இல்லை. திருமணமாகாத பெண்களுக்கு மாங்கல்ய பாக்கியமும் குழந்தையில்லாதவர்களுக்கு புத்திரப்பாக்கியமும் நோயிலிருந்து காப்பாற்றியும் மிக்க அருள் பொழிந்து கொண்டேயிருப்பாள்.

செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பெண்கள் நெய்விளக்கு ஏற்றி வழிபடுவர். அவ்வாறு அவர்கள் செய்யும் வேண்டுதலுக்கு அன்னையவள் மிகவிரைவில் அருள் கொடுத்ததையும் அடியவர்கள் மூலமாக எல்லோரும் அறிந்த உண்மையாகும்.

ஒருமுறை அடியவர் ஒருவர் முக்கியமான அலுவலொன்றுக்குப் பணம் செலுத்த வேண்டியிருந்து. பணம் இல்லாத காரணத்தினால் என்ன செய்வதென்று தெரியாமல் காளி அன்னையிடம் அவ்வடியவர் வந்து முறையிட்டு வீடுசென்றார். வீடுசென்று 10 நிமிடங்கள் ஆகவில்லை காகமொன்று ஓர் உறையுடன் பணப்பை ஒன்றை தூக்கிக்கொண்டுவந்து சைக்கிள் கூடையினுள் போடப்பட்டதைப் பிரித்துப் பார்த்த பொழுது அவருக்கு எவ்வளவு பணம் தேவைப்பட்டதோ அந்தளவு பணம் அதற்குள் இருந்தது. அன்னையின் அருளை நினைத்து அழுதார். கருணைக்கடலான அன்னை சிவமஹா காளியவள் அவளுடைய விழிக்கு அருளுண்டு இதில் எவ்வித ஐயமில்லை.

ஓர் அடியவர் வழக்குக்கு செல்லவேண்டிய ஒரு கட்டம் வந்துவிட்டது. அன்று காலை அவர் அன்னைக்கு வந்து விளக்கேற்றிச் சென்றார் அன்று அவர் வழக்கு நீக்கப்பட்டிருந்தது. சிறுவன் ஒருவன் நோய் ஏற்பட்டபோது தொடர்ந்து மூன்று வருடங்கள் மருந்து உண்ண வேண்டிய நிலையிலிருந்து அவர்கள் அன்னையிடம் அந்தப் பிரச்சினையை ஒப்படைத் தார்கள். அன்று இரவு அந்தச்சிறுவனின் கனவில் தோன்றி அன்னையவள் உனக்கொரு வருத்தமும் இல்லை, நான்தான் உன்னிடம் இருக்கிறேன் என்று கூறினாள். அன்றிலிருந்து மருந்து நிறுத்தப்பட்டு மிகவும் நல்ல நிலையில் வாழ அன்னை அருள் கொடுத்தாள்.

ஸ்ரீவிநாசித்தம்பி ஐயாவால் மாருதப்புரவீக வல்லி இந்த வழியால் மாட்டுவண்டியில் சென்று கொண்டிருந்தபோது அம்மன் இருக்கும் இடத்தில் ஒளி ஒன்று தெரிந்ததாகவும் அவர் வழிபட்டுச் சென்றதாகவும் எழுதப்பட்டுள்ளது. அன்னையின் மீது திருப்பள்ளி எழுச்சிப் பாடலும் புகழ் மாலையும் எழுதப்பட்டது. அதுவும் அன்னையவள் கனவிலே தோன்றி பாடலின் மெட்டு எவ்வாறு அமையவேண்டுமென்பதை தெரியப்படுத்தினார். பாடல் நிறைவுபெற்ற நாளன்று கனவில் அன்னை தோன்றி அதிலே பங்குபற்றிய அடியவர்களுக்கு காளாஞ்சி கொடுத்துச் சென்று அப்பாடலை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டாள் என்ற கதைகளும் உள்ளன.

அன்னையின் பக்தர்கள் புலம்பெயர்ந்து பிற நாடுகளில் வாழ்ந்தாலும் அன்னையின் மகோற்சவ காலத்தில் இங்கு வந்து அன்னையை வழிபட்டுச் செல்வார்கள். அன்னை அவளின் விருப்பப்படி கண்ணாடி இழையினாலான தேர் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டது. யாழ்ப்பாணத்திலே உள்ள ஒரே ஒரு கண்ணாடி இழைத் தேர் என்ற பெருமையையும் இவ்வாலயம் பெற்றுள்ளது. இங்கு பழைய மரபின்படி காத்தவராயருக்கு சுளகு மடையும் இடம்பெற்று வருகின்றது.

*"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"*
*அனைவரும் வருக அன்னையின் திருவருள் பெறுக.*

**- அம்பாளின் தொண்டில் அறங்காவலர்.**

(33662)(2.7)

# யாழ்ப்பாணம், வண்ணை கன்னாதிட்டிப்பதி காளி அம்பாள்

# தேர்த்திருவிழா சிறப்பிதழ் 24.02.2013



காலை 8.00 மணிக்கு
வசந்த மண்டபபூசையைத் தொடர்ந்து
9.00 மணிக்கு அம்பாள் தேரில் எழுந்தருள்வார்

## நல்லை ஆதீன குரு முதல்வரின் அருளாசிச் செய்தி



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஆதி பராசக்தியான அம்பிகை தம்மை வழிபடும் அடியார் குறை தீர்க்கவென எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலம் தான் கன்னாதிட்டி காளி அம்பாள் கோயிலாம். இங்கே காளித்தாயாக எல்லோருக்கும் அன்னையாக அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அம்பிகைக்கு இன்று தேர்த்திருவிழா. மஹோற்சவத்தில் தேர்த்திருவிழா அழித்தலைக் குறிப்பதாகும். நாம் செய்த பாவங்களையும் பிழைகளையும் அழிதொழிப்பதற்காகவே இன்று காளியம்பாள் ரதத்திலே ஆரோகணிக்கின்றாள். அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகியான ஸ்ரீ காளியம்பாள் இன்று தேரேறி வரும் தேவியாக அழகிய ரதத்திலே காட்சியளிக்கின்றாள்.இன்றைய ரதோற்சவ நாளில் அம்பிகை அடியார்கள் அவர் திருவருளுக்குப் பாத்திரமாகி வாழ்வு சிறக்க அருள்புரிய வேண்டுமென்று நல்லைக் குருமணியின் திருவடி வணங்கி எம்பெருமாட்டியின் பத்ம மலர்பாதம் பணிந்து வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

-நல்லை திருஞானசம்பந்த ஆதீனமுதல்வர்,
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.

## மகோற்சவ குருவின் ஆசியுரை



இறைவனின் ஐந்தொழில்களைக் குறிப்பது மகோற்சவப் பெருவிழா. இதில் கொடியேற்றம் குறிப்பது படைத்தல் தொழிலையாகும். இதற்கு பிரம்மோற்சவம் என்றும் கூறுவர். இதில் வருகின்ற தேர்த்திருவிழா அழித்தலைக் குறிக்கும். அழித்தல் என்பது மும்மலங்களையும் அழித்தல் ஆகும். இறைவன் முப்புரங்களையும் அழிக்கச் செல்கின்ற போது தேரில் ஏறிச் சென்றார். அத் தேரின் வடிவமைப்பைப் பல பாடல்கள் சிறப்பாகக் கூறுகின்றது. அவ் வடிவிலே அமைக்கப்பட்ட தேரினிலே இன்று தன்னை நாடிவரும் அடியார்களின் இன்னல்களைப் போக்கி வண்ணை கன்னாதிட்டியில் கோயில் கொண்டிருக்கும் காளிகாம்பாள் ஆரோகணித்து ஆன்மாக்களின் மும்மலங்களை அழித்து நல்லருள் பாலிக்க வீதி உலா வருகின்றாள். இவ்வேளையில் அனைத்து அடியார்களும் நலமுடன் இருக்கவும் நாட்டில் சாந்தி நிலை பெறவும் எம் பெருமாட்டியின் கமலப் பாதங்களைப் பணிந்து நல்லாசி கூறுகின்றேன்.

வேதசிவாகமஞானபானு
பிரம்மஸ்ரீ.க.மு.சோமசுந்தரக் குருக்கள்

## ஆசிச் செய்தி



ஓங்கார மயமான கூட்டில் கிளி போலவும் உபநிஷதமான நந்தன வனத்தில் குயில் போலவும் ஆகமமான காட்டில் மயில் போலவும் ஞானிகள் மனதில் உள் உணர்வாகவும் விளங்குகின்ற அன்னை காளிகாபரமேஸ்வரி ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் அழித்து எம்மைக் காப்பதற்காக தேரேறி வருகின்றாள். இந்த அரிய காட்சியைக் கண்டு அனைவரும் பேரின்பப் பெருவாழ்வு பெறுவீர்களாக.

"சிவாகமக்கிரியாஜோதி"
பிரம்மஸ்ரீ.சி.ஜோதீந்திரக்குருக்கள்
ஆலய பிரதம குரு.



## கன்னாதிட்டி நகருறை காளி தேரேறி எண்ணியதைத் தர வருகின்றாள்



அண்டத்தையும் பிரபஞ்சத்தையும் கட்டி ஆளுகின்ற அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியுமான அம்பிகையின் வழிபாடு மிகவும் தொன்மையானது. தெய்வத்தைப் பெண்ணாகவும் பெண்ணைத் தெய்வமாகவும் போற்றிய உயர் பண்பு சைவத்தமிழ் மக்களுக்குரியது. தமிழ் மக்கள் தங்களுடைய நாட்டைத் தாய்நாடு என்றும், ஓடும் நதிகளையும் பூமியையும் தெய்வமாக வழிபட்டனர். தாயின் சிறப்புப் பற்றிப் புராணங்கள், இதிகாசங்கள், திருமுறைகள் அழகாக எடுத்து இயம்பியுள்ளன. அம்பிகை அகில உலகிற்கும் தாயாக விளங்குகின்றாள். அத்தகு பெருமையுடைய தெய்வம் இன்று (24.02.2013) யாழ்ப்பாணம் கன்னாதிட்டி நகரில் தேரேறி அருள்பாலிக்கின்றாள். அம்பிகையைச் சரண்புகுந்து அதிக வரம் பெறுவோமாக.

மதுரகவி, காரை எம்.பி. அருளானந்தன்,
பணிப்பாளர், சைவத்தமிழ் பண்பாட்டுக்கழகம்.

## அருள்பாலிக்கும் காளிகா பரமேஸ்வரி

அடியார்க்கு நல்லான் பொய்கைக் கரைதனில் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் அன்னை காளிகா பரமேஸ்வரி ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களை அழித்து, அடியார்க்கு நல்லருள் புரிய தேரேறி வருகின்றாள். அம்பிகை அடியார்கள் அவள் அருளைப் பெற்று இன்புற வேண்டுகின்றோம்.

சி.கிருஸ்ணகுமார் (தலைவர்)

## தேரேறி வருவாய்! திருவருள் தருவாய்!



சித்திரத் தேரேறி வரும் ஸ்ரீ காளி அம்பாளே தாயே!
சீரான வாழ்வு தந்தே வேரோடு வினை களைவாய் அம்மா!
புத்திரப் பேறு தந்தே நலமுடன் புவிமீது நாம் வாழ
பூதலத்தோர் போற்றிட ரதத்திலே ஆரோகணிப்பாய்
இத்தினம் வரை நாம் இணையடி பணிந்தோம் தாயே!
ஈசனது இடப்பாகம் கொண்டவளே சரணம் அம்மா!
முத்தியே தந்தெமக்கு முழுநிலவாய் ஒளி வீசி நின்று
மூதறிஞர் போற்றிடத் தேரேறி வருவாய் தாயே!



கன்னாதிட்டியில் இன்று காளியம்மாள் தேரோட்டம்
கால் பிடித்தோம் அம்மா கருணைபுரிவாய் தாயே!
உன் நாமம் உச்சரிக்க ஊழ்வினை பறந்தோடிடுமே!
ஊர் கூடித் தேரிழுத்தோம் தேரேறி வருவாய்!
இன்னமுதாயினித்திடும் இன்னருளே தந்து நீ
ஈசனின் இடப்பாகம் பெற்றிடவே தவமிருந்தாய்!
என்னே! உன் நற்பதம்! எமக்கருள் புரிந்திட
ஏறி வருவாய் அழகு ரதத்தினிலே தாயே!

- கலாபூஷணம்
சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன்

துர்க்கா நகைப் பூங்கா
THURKKA JEWELLERY PALACE
இல.256, கன்னாதிட்டி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சண்முகம்
சைவ
உணவகம்
கன்னாதிட்டி (சிவன் கோயிலடி)
யாழ்ப்பாணம்.

கஜமுகன் ஹாட்வெயர்
கட்டடப் பொருள்கள், சீமெந்து,
பெயின்ற் வகைகள் என்பவற்றை
மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
இல.147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வேல்முருகன்
வணிக நிலையம்
இல.56 A(378), இல.295 (21),
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். 021 222 9437

பட்டாபி படமாடம்
கண்ணாடி வகைகளின் ஏக விநியோகஸ்தர்
64, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7821
இல.225, 227, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 4351

கிருஷ்ணா நகை மாளிகை
அசல் 22 கரட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.
இல.09.கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: கிருஷ்ணா அடைவு கடை,
370, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

லிப்ரா சைவ உணவகம்
காலை, மதிய உணவுகள் ஓடர்களுக்குப்
பெற்றுக்கொள்ளலாம்
174, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.

TRACTOR SPARES
7, Kannathiddy Road, Jaffna. T.P: 021 2225055
Importers and Dealers in Tractor Spare Parts. Specialist in Massy Ferguson Engineers & Tipping Course Pressure Pipe fitting.
காயத்திரி மோட்டோர்ஸ்
கனகபுரம், கிளிநொச்சி.

சாரங்கா நாணயமாற்று சேவை
Sharanga Money Exchange (Pvt) LTD
(Permit No: Ecd/ In/ Aut/ Mc/ 164)
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 6972
சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
T.P.: 222 6972, Fax. 222 8869
சாரங்கா ஜுவல்லரி
இல.55, செட்டித்தெரு, கொழும்பு - 11.
TEL.: 2434971, Fax. 0112434071
சிவா நகைமாடம்
Venkadeswara Express
217, Central Road, Colombo 12. Tel: 0115234588
Colombo: 0773988776,
Jaffna: 0773929359,
Hot Line: 0777743578,
Tel: 021 222 6972

சரவணா ரெக்ஸ்
நல்லூரில்:
யாழ்ப்பாணத்தில்:
வடமராட்சியில்:
சங்கானையில்:
T.P: 021 222 1723
T.P: 021 222 0421
T.P: 021 226 2992
T.P: 021 2250909

சிறி நதியா
நகை மாளிகை
01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 2709
56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 6744

ரமணன்
கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
சகல விதமான கட்டடப் பொருள்களை
நியாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
இல.84 ஐயனார் கோயிலடி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
தொ.பே: 021 4923417, 021 222 9296

## ஜப்பான் பயணம்



25 ஆவது ஆசிய பசுபிக் சிறுவர் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜப்பான் செல்லும் வாய்ப்பு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் பாலேந்திரன் அபிராமுக்குகிடைத்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ்மொழி மூலம் தோற்றி, 193 புள்ளிகளைப் பெற்ற இந்த மாணவன் ஆசிய பசுபிக் சிறுவர் மாநாட்டில் கலந்துகொள்வதற்கான கல்வி அமைச்சின் நேர்முகத் தேர்வில் தேறி ஜப்பான் செல்லும் சந்தர்ப்பத்தைப் பெற்றுள்ளார். இலங்கையில் இருந்து மாநாட்டுக்காக செல்லும் மாணவர்கள் 6 பேரில் அபிராமும் ஒருவர்என்பது குறிப்பிடத்தக்கது. (3)

## கணினிப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

நவாலி, பெப்.24

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படவிருக்கும் கணினிப் பயிற்சி நெறிக்கு ஜி.சீ.ஈ. உயர்தரம் வரை கற்ற ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆறு மாத காலத்துக்கு நடைபெறவுள்ள பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் செய்ய விரும்புவோர் தமது விண்ணப்பங்களை 28 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ, தபாலிலோ ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.(3-100)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், பெப்.24

நெடுந்தீவு மேற்கு கரமத்தை கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கும், தீர்த்தம், கொடியிறக்கல் உற்சவம் அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கும் நடைபெறும்.

மறுநாள் செவ்வாய்க் கிழமை பூங்காவனத் திருவிழா இடம்பெறும். (3-7)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப்.24

புங்குடுதீவு தல்லையப்பற்று முருகமூர்த்தி கோயில் தேர்த்திருவிழா, இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் தீர்த்தம், கொடியிறக்கல் திருவிழா மறுநாள் திங்கட்கிழமையும் நடைபெறும். (3-7)

★ ★ ★

திருநெல்வேலி பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் ஆலய கொடியேற்றம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும்.

தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திரு விழாவும் நடைபெறவுள்ளது. (3)

## நீர் தினத்தை முன்னிட்டு மாணவரிடையே போட்டி

வடமராட்சி, பெப்.24

மார்ச் மாதம் 22 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவிருக்கும் உலக நீர்த் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே புகைப்பட, சுவரொட்டிப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

நீர் மற்றும் சுகாதாரம், நீர் பாதுகாப்பு, நீர் பற்றாக்குறைக்கு முகம் கொடுப்போம், நீர் மற்றும் ஒற்றுமை ஆகிய தலைப்புகளில் புகைப்பட, சுவரொட்டிப் போட்டிகளுக்கு படைப்புகளைச் சமர்ப்பிக்க முடியும்.

சிரேஷ்ட, கனிஷ்ட ஆகிய இரு பிரிவுகளாக போட்டி இடம்பெறும். 8ஆம் தரம் வரை கனிஷ்ட பிரிவாகவும் 9 ஆம் தரத்துக்கு மேல் சிரேஷ்ட பிரிவாகவும் கொள்ளப்படும்.

போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு முதலாம் பரிசாக 5 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் பரிசாக 2 ஆயிரத்து 500 ரூபாவும், மூன்றாம் பரிசாக ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்படும்.

எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் இந்தப் போட்டிக்கான விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும் என நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. (ம-8)

## கூட்டுறவாளருக்கு உளவள பயிற்சி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப்.24

யாழ். மாவட்ட கூட்டுறவு பணியாளர்களுக்கான உளவள பயிற்சி நெறி தொடர்பான இருநாள் கருத்தரங்கு கடந்த 20, 21 ஆம் திகதிகளில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

கருத்தரங்கில் கூட்டுறவுப் பணியாளர்கள் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் முழுமையாக உணர்ந்து நிறைவேற்ற வேண்டும். அதேநேரம் ஆவலையும் உணர்வையும் அடையும் பொருட்டு ''மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்தல்'' என்னும் தலைப்பிலான செயலமர்வு நடைபெற்றது.

கருத்தரங்கில் தீவக வலய ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் ரி.தர்மராஜா வளவாளராக கலந்துகொண்டார். யாழ். மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் இ.ராஜாராம், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினார்கள். (3-13)

## மெய்வன்மைப் போட்டி

மாதனை மெ.மி.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் க.சுப்பிரமணியம் தலைமையில் கண்ணகை அம்மன் கோயில் மைதானத்தில் நடைபெறவுள்ளது. போட்டிக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பதில் கணக்காளர் சு.நவரத்தினராஜா கலந்து கொள்வார். (3-8)

## பழுதான உள்ளங்களை புதுப்பிப்போம்

இயேசுவுக்கு சாத்தான் கொடுத்த சோதனைகள் மனித வாழ்வு முழுவதையும் ஆட்கொண்டதாக இருக்கின்றது. பொதுவாக ஒரு மனித வாழ்வு உடல், பொருள், ஆவி (ஆன்மா) ஆகிய மூன்று நிலைகளில் அடக்கப்படுகின்றது. இவைகளை வெல்லும்போது நாம் உலகை வெல்லுகின்றோம். ''பசி வந்தால் பத்தும் பறக்கும்'' என்பார்கள். அதாவது பொறுமை, பணிவு, அமைதி இப்படியாக மனித நற்பண்புகள் அனைத்தையும் துறந்து எதுவும் செய்யத் துணிவான் மனிதன்.

இயேசு உண்ணா நோன்பினால் பசியாக இருக்கின்ற வேளையில் சாத்தான் அவரிடம் கல்லைக்காட்டி ''நீர் இறைமகன் என்றால் இந்தக் கல் அப்பமாகும்படி கட்டளையிடும்'' என்றது. இயேசுவுக்கு தாம் கடவுளின் மகன் என்பது தெரியும். உணவு அற்றோருக்கு உணவும், தண்ணீர் வேண்டுவோருக்கு இனிய பானமும் வழங்க வல்ல இயேசுவிடம் சாத்தான் சுயநலத்தைக் கொடுத்து இறை தந்தையின் திட்டத்தை அழித்துவிட கல்லை அப்பமாக்கி அதன் வழியாக உடலின் பசியைத் தீர்க்கும்படி கேட்கின்றது. பசியால் பலமிழந்த நிலையில் தம் இறைசக்தியை பயன்படுத்தி தம் பசியைத் தீர்த்துக் கொள்ளமுடியும். வன் சிலுவைச் சாவிலிருந்தே தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். எனினும் தமக்கென்று இவ்விறை வல்லமையை இயேசு பயன்படுத்த மாட்டார். உலகை மீட்க வந்த இயேசு சுயநல மாயைக்குள், உடல் ஆசைக்குள் தன் உன்னத இலட்சியத்தை அழித்துவிட இடம் தரவில்லை. இயேசு மறுமொழியாக ''மனிதன் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை. மாறாக கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்'' என மறை நூலில் எழுதியுள்ளதே என்றார்.




நமது மனித வாழ்விலே பல நல்ல பணிகளை ஆற்ற வேண்டிய நாம் நுகர்ந்த வாழ்விலே உடல் ஆசைகளுக்கு இடம் கொடுத்து வாழ்வின் நோக்கத்தையே இழந்து விடுகின்றோம். இதனால் தனக்கும், மற்றவர்களுக்கும் ஆற்ற வேண்டிய நற்பணிகளை மழுங்கடித்து விடுகின்றோம். இயேசு இந்த வெற்றியின் வழியாக உடலுக்கு மேலாக நமது இலட்சிய வாழ்வில் கருத்தாயிருக்கின்றார். இந்த தவக்காலம் உடல் ஆசைகளிலிருந்து நம்மை விடுவித்து பழுதான உள்ளங்களை நல் வாழ்வில் புதுப்பித்து நம்மை விடுவித்து பழுதான உள்ளங்களை நல் வாழ்வில் புதுப்பித்துக்கொள்ள நம்மை அழைக்கின்றது.

-அருட்பணி அ.ம.ஸ்ரீபன் செ.தா, ஆச்சிரமம்-

## தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

நாளை

மாசி- 13 திங்கட் கிழமை 25.02.2013
திதி: பூரணை பி.இ. 02.57 வரை
நட்சத்திரம்: மகம் பி.இ. 02.50 வரை
சுபநேரம்: 12.29- 01.59 வரை
இராகுகாலம்: 07.59- 09.29 வரை

**மேடம்:** உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். பிள்ளைகளால் சமூக அந்தஸ்து அதிகரிக்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களைத் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் உழைப்புக்கு பாராட்டுக் கிடைக்கும்.

**இடபம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பழைய பிரச்சினைகளை தீர்ப்பீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதை அதிகரிக்கும்.

**மிதுனம்:** மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். உங்களின் அணுகுமுறையை மாற்றுங்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது நல்லது.

**கடகம்:** குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். எதிலும் எச்சரிக்கை தேவை.

**சிங்கம்:** எதிலும் வெற்றி பெறுவீர்கள். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மரியாதை அதிகரிக்கும்.

**கன்னி:** சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளை பகிர்ந்து கொள்வார்கள். அரச விடயம் சாதகமாக முடியும். எதிர்பாராத சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிடைக்கும்.

**துலாம்:** திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** பழைய கசப்பான சம்பவங்களைப் பேசிக் கொண்டிருக்க வேண்டாம். வியாபாரத்தில் இலாபம் எதிர்பார்த்தளவுக்கு இருக்காது. உத்தியோகத்தில் பிறரின் குறைகளைச் சுட்டிக் காட்ட வேண்டாம்.

**தனுசு:** புதிய தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். எந்தச் செயல்களிலும் கவனம் தேவை.

**மகரம்:** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பயணங்கள் சிறப்பாக அமையும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் உங்களை நம்பி மூத்த அதிகாரி சில பொறுப்புகளை ஒப்படைப்பார்.

**கும்பம்:** நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள்.

**மீனம்:** புதிய கோணத்தில் சிந்தித்து பழைய சிக்கலைத் தீர்ப்பீர்கள். எதிர்பார்த்த தொகை வராவிட்டாலும் எதிர்பாராத வகையில் பணம் வரும். வியாபாரத்தில் சூட்சுமங்களை உணருவீர்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 5 | | | | |
| | 7 | 5 | 4 | | | 9 | | |
| | | | | 3 | 7 | 5 | 2 | |
| 8 | | | | | | | 9 | 4 |
| 7 | 3 | | 6 | | 4 | | 1 | 5 |
| 4 | 1 | | | | | 8 | | 7 |
| | 6 | 8 | 3 | 4 | | | | |
| | | 7 | | | 1 | 4 | 3 | |
| | | | | 2 | | | | 8 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 9 | 3 | 2 | 1 | 6 | 4 | 5 | 8 |
| 6 | 4 | 5 | 3 | 8 | 9 | 1 | 2 | 7 |
| 1 | 2 | 8 | 7 | 4 | 5 | 6 | 3 | 9 |
| 2 | 6 | 1 | 5 | 7 | 4 | 9 | 8 | 3 |
| 8 | 3 | 4 | 6 | 9 | 2 | 7 | 1 | 5 |
| 9 | 5 | 7 | 1 | 3 | 8 | 2 | 4 | 6 |
| 5 | 8 | 2 | 9 | 6 | 1 | 3 | 7 | 4 |
| 4 | 7 | 6 | 8 | 2 | 3 | 5 | 9 | 1 |
| 3 | 1 | 9 | 4 | 5 | 7 | 8 | 6 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டிப்பாகாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# சிங்கப்பூர் வரை சேவையை விஸ்தரித்துள்ள ஒரெஞ்ச்




"ஒரெஞ்ச் உற்பத்திகள் சர்வதேச கவனத்தை ஈர்த்தெடுக்க வேண்டும் என்பதை கருத்திற்கொண்டு சிங்கப்பூர் சந்தை தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மின் உதிரிப்பாக உற்பத்தியில் முன்னிலை நிறுவனமாக விளங்கும் ஒரெஞ்ச் இலக்ரிகல் நிறுவனம் தமது உற்பத்திகளை சர்வதேச சந்தைக்கு விஸ்தரிக்கும் நோக்கில் சிங்கப்பூர் நிறுவன மொன்றுடன் கைகோர்த்துள்ளது.

ஷிரகானா டெங்கி தனியார் நிறுவனத்தின் 49 வீதமான பங்குகளை கொள்வனவு செய்துள்ள ஒரெல் பாக்ஸ்ட் (தனியார்) நிறுவனம் ஊடாக தமது உற்பத்திகளை தென் கிழக்கு ஆசிய சந்தையில் விஸ்தரிக்க ஒரெஞ்ச் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் ஒரெஞ்ச் இலெக்ரிகல் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் குஷான் எஸ். கொடிதுவக்கு கருத்து தெரிவிக்கையில், "ஒரெஞ்ச் உற்பத்திகள் சர்வதேச கவனத்தை ஈர்த்தெடுக்க வேண்டும் என்பதை கருத்திற்கொண்டு சிங்கப்பூர் சந்தை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூர் சந்தை வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஏற்றது. இந்த கூட்டு வர்த்தகம் சிறந்தது. சந்தைக்கு தேவையான பொருள்களை சிங்கப்பூர் பங்குதாரர்கள் விநியோகிக்கும் அதேநேரம், உற்பத்திகளை இலங்கையிலுள்ள ஒரெஞ்ச் நிறுவனம் முன்னெடுக்கும். இதுவரையில் நாம் எமது வர்த்தக நடவடிக்கைகளை உள்ளூரில் மாத்திரமே மேற்கொண்டோம். எமது உற்பத்திகள் சர்வதேச சந்தைக்கு கொண்டு செல்வதற்கான பாதைகள் திறக்கப்பட்டுள்ளன. அத்துடன் எதிர்காலத்தில் புருனை, கம்போடியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கும் எமது சேவையை விஸ்தரிக்க எதிர்பார்த்துள்ளோம்" என குறிப்பிட்டார்.

உயர்தரத்தை இலக்கு வைத்து உற்பத்தி செய்யப்பட்டுள்ள ஒரெஞ்ச் உற்பத்திகளுக்கு தற்போது சர்வதேச சந்தையில் சிறந்த வரவேற்பு கிடைத்துள்ளது. இவை அனைத்தையும் உற்பத்தி செய்யும் ஒரெஞ்ச் நிறுவனத்தின் கைத்தொழிற்சாலை மீகொடையில் அமைந்துள்ளது.

அத்துடன் சிஎவ்எல் மின்குமிழ்களை மீள்சுழற்சி செய்யும் கைத்தொழிற்சாலையொன்றையும் நிறுவனம் கொண்டுள்ளமை விசேட அம்சமாகும். சுற்றாடலுக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் எவ்விதமான பாதிப்பும் ஏற்படுத்திவிடக்கூடாது என்பதில் நிறுவனம் தெளிவாக உள்ளது.

நான்கு கண்டங்களில் 10 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு தமது உற்பத்திகளை விநியோகிக்கும் ஒரெஞ்ச் நிறுவனத்தின் வருடாந்த புரள்வு ஆறு பில்லியன் ரூபா வரை பதிவாகியுள்ளதுடன் 1000 இற்கும் அதிகமான ஊழியர்களை தம்வசம் நிறுவனம் கொண்டுள்ளமையும் விசேட அம்சமாகும். (த)



மக்கள் வங்கியின் 'இசுறு உதான' சிறுவர் சேமிப்புக் கணக்கு வைத்துள்ள சாவகச்சேரி கிளை வாடிக்கையாளர்கள் சிறுவர்கள் மூவருக்கு சைக்கிள்கள் பரிசாகக் கிடைத்துள்ளன. சைக்கிள் வழங்கும் நிகழ்வு கடந்த 20ஆம் திகதி வங்கிக் கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது கிளை உதவி முகாமையாளர் வெற்றியாளருக்கு சைக்கிளை வழங்குவதையும் அருகில் வெற்றியாளரின் பெற்றோர் மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர். (த-9)




ஏ.எம்.டபிள்யு நிறுவனம் கடந்த ஜனவரி மாதம் 19ஆம், 20ஆம் திகதிகளில் கைதடி வீதி, மருதனார்மடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சேவிஸ் நிலையத்தில் வாகன மேற்பார்வை முகாம் ஒன்றை நடத்தியது. இந்த முகாமில் சுசுக்கி, மாருதி வாகனங்களின் உரிமையாளர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். அத்துடன் இலவச வாகன மேற்பார்வை, இலவச வாகன மதிப்பீடு போன்ற சேவைகள் வழங்கப்பட்டதுடன் குறைந்த விலையில் வாகன உதிரிப்பாகங்களும் வழங்கப்பட்டன.

# புதிய வகை Apache RTR ரக மோட்டார் சைக்கிள்கள் TVS லங்கா நிறுவனத்தினால் இலங்கையில் அறிமுகம்

புதிய வடிவமைப்பில் கண்கவர் முறையில் அமைந்த புதிய Apache RTR ரக மோட்டார் சைக்கிள்களை இலங்கையில் TVS லங்கா பிரைவேற் லிமிடெட் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. புதிய வடிவமைப்பு, அனைத்து கோடுகளும் பின்னிழுக்கப்பட்டு, மேலதிக பாணவை நீக்கப்பட்டுள்ளதுடன் அனைத்து வளைவுகளும் மிகச் செம்மையான முறையில் அமைந்த வகையில் உயர் வினைத்திறன் வாய்ந்த மோட்டார் சைக்கிளாக இந்தப் புதிய Apache RTR ரக சைக்கிள்கள் அமைந்துள்ளன. இந்த அனைத்து புதிய அம்சங்களும் புதிதாக வெளிவரும் அனைத்து TVS Apache RTR 150, TVS Apache RTR 180, களில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் புதிய சைக்கிள் வகை அறிமுகம் குறித்து TVS லங்கா பிரைவேற் லிமிடெட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சம்பத் அகலவத்த கருத்து தெரிவிக்கையில், "நவீன பொறியியல் நுட்பம் மற்றும் கண்கவர் வடிவமைப்பின் மூலம் நாம் தற்போது Apache RTR இனை அடுத்த நிலைக்குக் கொண்டு சென்றுள்ளோம். உண்மையான ஓட்டப்பந்தய கள நிலைவரங்களை பரீட்சார்த்தமாக கொண்டு அனைத்துவித Apache வர்த்தக நாமத்தில் அமைந்த மோட்டார் சைக்கிள்களும் தயாரிக்கப்படுகின்றமை விசேட அம்சமாகும். உயர் வினைத்திறனை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு கட்டமைப்பும், விவரமும் உதிரிப்பாகங்களும் சீர் செய்யப்படுகின்றன. ஒரு வர்த்தக நாமமாக Apache சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளது" என்றார். புதிய TVS Apache RTR மோட்டார் சைக்கிள் வகைகளில், முன்பக்க ஒளி விளக்குகளில் கண்கவர் வகையில் கண்களைப் போன்ற வடிவமைப்பு மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பகலிலும், இரவிலும் ஒளிரக்கூடிய வகையில் அமைந்த ஒரு மிருகத்தின் கண்களை ஒத்த இந்த ஒளி விளக்குகள், நவீன LED மின் குமிழ் தொழில்நுட்பத்தில் அமைந்துள்ளன.

வைஸ்லெட் மற்றும் நுணுக்கமான தாங்கி காப்புறை போன்றவற்றில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றமானது, காற்றியக்கவியல் உந்து சக்தியை வழங்கக்கூடிய வகையில் அமைந்துள்ளதுடன், என்ஜின் வெப்பமடைதலையும் குறைக்கும் வகையில் அமைந்துள்ளது. மோட்டார் சைக்கிள் ஓட்டப்பந்தய வீரர்கள் அதிகளவில் எதிர்பார்க்கும் அதிகளவு வினைத்திறன் சக்தி மற்றும் பயன்படுத்தக்கூடிய வலு மற்றும் குறுகிய காலப்பகுதியில் செயற்படுவது போன்ற அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாக இந்தப் புதிய Apache RTR மோட்டார் சைக்கிள் அமைந்துள்ளது.

டிஜிட்டல் கொன்சோல் கொண்ட ஸ்போர்ட்ஸ் தோற்றத்தை வழங்குவதுடன், நவீன வடிவமைப்பு மற்றும் ஓட்டப்பந்தயத்துக்கு விரும்பப்படும் கார்பன் ஃபைபர் கியுஸ் போன்றன கொண்டமைந்துள்ளது. நீல நிறத்திலான டிஸ்பிளே கட்டமைப்பு கண்களுக்கு குளிர்ச்சியான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

படிவான ஓட்டப்பந்தய வடிவமைப்பு, புதிய பக்கவாட்டான இருக்கைகள், என்ஜின் கவர்கள் போன்றன இந்த மோட்டார் சைக்கிள்களுக்கு காற்றியக்கவியலுக்கு அவசியமான வடிவமைப்பை கொடுத்துள்ளதுடன், ஒரு மோட்டார் சைக்கிள் ஓட்டப்பந்தைய வீரர் எதிர்பார்க்கும் அனைத்து அம்சங்களையும் கொண்டதாக அமைந்துள்ளது.



'விஷன் கெயார்' கண் சிகிச்சை வைத்தியசாலையின் கிளை நிறுவனம் பலாலி வீதியிலுள்ள 'நொதேர்ன் சென்ரல்' வைத்தியசாலையில் திறந்து வைக்கப்பட்டது. வவுனியா பொது வைத்தியசாலை கண் சத்திரசிகிச்சை நிபுணர் எம்.மலரவன் நாடா வெட்டி இதனைத் திறந்து வைத்தார். (த-13-பி)

# அழைப்பு

அமரர் கலாபூசணம்
சுழிபுரம்
நடேசன் சிவசண்முகமூர்த்தி
அவர்களின்

90ஆவது நாள் நினைவஞ்சலி நிகழ்வும்
கதாப்பிரசங்க கலையும் நானும் எனும் நூல்
மற்றும்
பண்பாட்டின் குரல்
எனும் இறுவட்டு வெளியீடும்





தலைமை
திரு.வ.ஸ்ரீகாந்தன்
அதிபர், யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி
இடம்
யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி
காலம்
24.02.2013 மாலை 3.30 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
சுழிபுரம். (33683) (10.6.7) குடும்பத்தினர்.

# கடை விற்பனைக்கு

வவுனியா, குருமன்காடு, காளிகோயில் வீதியில் உள்ள UNHCR இற்கு முன்பாக உள்ள 2 தொடர் கடைகள் விற்பனைக்கு உண்டு.
தொ.பே: 0771303815 (97886) (7.11)

# விற்பனை பிரதிநிதிகள் தேவை

Induction Cooker விற்பனையில் பிரபலம் வாய்ந்த இந்திய நிறுவனத்திற்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை. பெயர் முகவரியை கீழுள்ள இலக்கத்திற்கு SMS அனுப்பவும்.
தொ.பே:0774689136 (33796)(3.6.7)

# காணி விற்பனைக்கு

நாயன்மார் கட்டு சந்தி, கனகரத்தினம் வீதியில் கிணறு, மற்றும் பயன்தரு மரங்களுடன் கூடிய 1 பரப்பு 11.47 குழி விஸ்தீரணமுள்ள காணி விற்பனைக்குண்டு.
தொ.பே: 0779235807 (97864) (7.11)

# ஒத்துமாறல்

கொழும்பு மாவட்டத்தில் பிரதான அலுவலகம் ஒன்றில் பட்டதாரிச் சம்பள அளவுத்திட்டத்தில் நிரந்தரமாக வேலை செய்பவர் வட மாகாணத்திற்கு (கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு) இடமாற்றம் பெற விரும்புகின்றார்.
தொ.பே: 0778964472 (94960)(7.11)

# வெளிநாட்டில் உயர்கல்வியுடன் பகுதிநேர தொழில்வாய்ப்பு STUDY & WORK

| | |
|---|---|
| USA | - TOFEL + Cost Rs 2 lacks + work |
| CANADA | - No IELTS + Pay after visa + work |
| FRANCE | - No IELTS + Pay after visa + work |
| POLAND \| CYPRUS | - No IELTS + Pay after visa + work |
| SWITZERLAND | - IELTS 4.5 + Pay after visa + work |
| RUSSIA | - No IELTS + No Sponsor + Lower tuition fee + work |

ITALY- குறைந்த கட்டணம்|பகுதி நேர தொழில்வாய்ப்பு|PR|விசாவுக்கு பின் பணம் செலுத்துதல்
UK - குறைந்த கட்டணம்| 20மணித்தியால பகுதிநேர தொழில்வாய்ப்பு

அஸ்வின் - 0774848888 மகேஷ் - 077 2702628

**EUROPE ACADEMY**
இல: 207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# துயர் பகிர்கின்றோம்



**இராஜ்குமார் ரவிராஜ்**
(யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சாரணர் துருப்பு- துருப்புத் தலைவர் 2008/2009)
அவர்களின் மறைவால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
பழைய சாரண நண்பர்கள் (33687)(3.6.7) 4ஆவது யாழ்ப்பாணம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

# Farzan Agrotech

நெல் அறுவடை செய்யும் எல்லா விதமான இயந்திரங்களுக்கும் உரிய உதிரிப்பாகங்கள் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**Farzan Agrotech**
**(பர்சான் அக்றோரெக்)**
இல. 29, கனகபுரம் வீதி,
(டிப்போ றோட்)
கிளிநொச்சி. (24261)(5.6.7) தொ.பே: 077 706 4264

# Distributors தேவை

இலங்கையில் சந்தைப்படுத்தல் துறையில் முன்னணி நிறுவனம் ஒன்றுக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை ஆகிய பிரதேசங்களுக்கு Distributors தேவை.
★ வாகனத்திற்குரிய கொடுப்பனவு
★ கமிஷன் வழங்கப்படும்
உங்கள் பிரதேசத்தில் சந்தைப்படுத்தல் துறையில் அனுபவமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்

**TITTEN FOOD LANKA ENTERPRISES**
**NO.205 1/2, Negombo Road, Wattala.**
**Tel-0115920252 / Mob -0773527586**
**E.mail-tittenfoodlanka@gmail.com**
(97696)(6.7.11)

# 14ஆம் ஆண்டு நினைவு

தோற்றம்
16 - 04 - 1934

மறைவு
24 - 02 - 1999




அமரர்
**அன்னலட்சுமி கந்தையா**

கண்முன்னே வாழ்ந்த காலங்கள்
கனவாகி போனதுவோ
இனிவான உங்கள் பேச்சுக்கள்
இடைநடுவில் நின்றதுவோ
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்-எம்
அன்னைக்கு ஈடாகுமோ-
மண்ணை விட்டு விண் சென்று
பதின்நான்கு ஆண்டுகள் ஆனதுவோ
மண்ணில் நாம் உள்ளவரை மறந்திடாது
உங்கள் நினைவு

**"கமலவாசா",**
**கந்தரோடை மேற்கு,**
**சுன்னாகம்.**
**குடும்பத்தினர்.**
(33727) (10.6.7)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பும் நன்றி நவிலலும்

தர்மக்கேணி, பளையைப் பிறப்பிடமாகவும், இல.76, பாலிநகர், வவுனிக்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட
அமரர்
**பெரியதம்பி கணபதிப்பிள்ளை**
(நீர்ப்பாசனத்திணைக்கள ஓய்வுபெற்ற ஊழியர்-வவுனிக்குளம்)



தோற்றம்
1930 ★ 08 ★ 26

மறைவு
2013 ★ 01 ★ 26

கடந்த 26.01.2013 சனிக்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் 23.02.2013 சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு 2ஆம் வாய்க்கால் பாலியாற்றங்கரையில் நடைபெற்றது. நாளை திங்கட்கிழமை (25.02.2013) நண்பகல் 12.00 மணியளவில் இல.76, பாலிநகர், வவுனிக்குளத்தில், எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
குறிப்பு:- இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

எமது குடும்பத்தலைவரின் பிரிவுத் துயரில் பங்குகொண்டு ஆறுதல் அளித்தும், கண்ணீர் அஞ்சலிப்பிரசுரம், பதாகைகள் வெளியிட்டு அனுதாப செய்திகள் தொலைபேசி மூலம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து நெஞ்சங்களுக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**
**இல.76, பாலிநகர்,**
**வவுனிக்குளம்.**

**க.குணசிங்கம்**
சமூக சேவைகள் உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், மாந்தை கிழக்கு,
0770594144
(33686) (10.6.7)

# மரண அறிவித்தல்

## செல்வநாயகம் மரியபேபி



தேவமாதா கோயில் வீதி, மண்குழி 5ஆம் வட்டாரம், ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், மகாறம்பைக் குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வநாயகம் மரியபேபி நேற்று (23.02.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிறிஸ்தோத்திரம் மற்றும் தங்கம் தம்பதியரின் மூத்த புதல்வியும், பொன்னர் - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், செல்வநாயகத்தின் அன்பு மனைவியும், அன்ரன், காலஞ்சென்ற அலோசியஸ் மற்றும் அருஸ்தீன், காலஞ்சென்ற அலடீன் மற்றும் அலெக்சாந்தர், அமலன், விமலா, பாலா, சூரியா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அற்புதராஜா, இராசநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், நல்லம்மாவின் சகோதரியும், செல்வி, செல்வதி, சாளினி, சுதாகரன், றொனால்ட் றீகன் (பிரான்ஸ்), அளெக்சன், கவிச்செல்வன் (சவூதி அரேபியா), பிரதீப் (அரசினர் வைத்தியசாலை- வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயும், அசோக் (புதியகோமான்தையல் அகம் - கிளிநொச்சி), குமார், ராசா (முத்துமாரி நகை மாடம் - யாழ்ப்பாணம்), சுபத்திரா ஆகியோரின் அன்பு மாமியும், கோபி, கிசோ, லக்ஷி, சரிக்கா, யதுசா, சாரங்கா, யதுசன், சார்மி, றொபேட், நிஸாளிக்கா, குன்சிகா, தியோத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.02.2013) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஊர்காவற்றுறை மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**பொ. செல்வநாயகம்**

தொ.பே. 077 0387149 (கணவர்),

(33700) (45.6.7) 077 6184 354 (மருமகன்).

# கண்ணீர் அஞ்சலி

திருமதி **தயாநிதி வாணி** (லண்டன்)



தீபஜோதி சனசமூக நிலையத்தின் அங்கத்தவராகிய திருமதி **தயாநிதி வாணி** அவர்கள் லண்டனில் 13.02.2013 அன்று காலமானதையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கூவில்,
புலோலி.

நிர்வாகிகள், அங்கத்தவர்கள்,
தீபஜோதி சனசமூக நிலையம்,
தீபஜோதி விளையாட்டுக் கழகம்.

(27761) (10.6.7)

# கண்ணீர் மல்க 18 ஆம் ஆண்டில்....

மண்ணில்
18.04.1942
விண்ணில்
14.02.1995
திதி:- 24.02.2013



அமரர் **தியாகராசா அரசரத்தினம்**

(இளைப்பாறிய இ.போ.ச.சாரதி, காரைநகர் டிப்போ)

*அப்பா! உங்கள் திருமுகமே*
*எப்போதும் எம் நெஞ்சினில்*
*பதினெண் ஆண்டுகள்*
*பறந்தோடிப்போயினும்*
*மறக்கமுடியாமல்*
*இன்னும் ஈரவிழிகளோடு....*

*உங்கள் நினைவில்*
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.

(C/6648)(2.6.7)

# பணிப்பெண் தேவை

வயோதிபப் பெண் ஒருவரை பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.

தொடர்பு-0752844324

(33765)(3.6)


# விசா

வேலை (Work Visa) விசா

- Belarus (பெலாரஸ்) 4 வருட வேலை விசா (13 லட்சம்) உணவு, தங்குமிடம் இலவசம், அடிப்படை சம்பளம் 1லட்சத்திற்கு மேல்
- Belarus visit விசா (5 லட்சம்)
- ரஸ்யா (Russia) 1 மாத விசா (4 லட்சம்) 1 வருட விசா (6 லட்சம்)
- UK விசா (26 லட்சம்)
- ஒரு மாதத்திற்குள் இத்தாலிக்கான பயணம் - (24 லட்சம்)
- UK Student விசா (தகமை - O/L, A/L, IELTS 4.0)
- அமெரிக்கா, Czech Republic Student விசா (O/L, A/L, Spoken English)

வங்கி பணவைப்பு

அனைத்து நாடுகளிற்கும் Student, Visit, Business விசாக்களிற்கான வங்கிப் பணவைப்புக்கள் செய்து கொடுக்கப்படும்.

Galaxy International (Pvt) Ltd,
198/A/1/1, காலி வீதி, தெகிவளை.
Tel : 0112 721 072 Mobile : 0774 740 040

RG ads

# REALMATRIMONY யின் மணப்பந்தல்

- 1987, புனர்பூசம் 4 Teacher Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை,
- 1981, மகம் 4 Nurse,Srilanka, மணமகளுக்கு மணமகன் தேவை,
- 1983, அஸ்வினி 1, BSc,Srilanka, மணமகளுக்கு மணமகன் தேவை,
- 1989, Christian Rc,CIMA,Srilanka, மணமகளுக்கு மணமகன் தேவை,
- 1989, உத்தராடம் 2, Teacher,Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை.
- 1975, அஷ்வினி,Programmer officer,London PR,மணமகனுக்கு மணமகள் தேவை
- 1981, அஷ்வினி 2, IT Professional Singapore,மணமகனுக்கு மணமகள் தேவை
- 1986, அவிட்டம்4, CIMA,MAAT,UK மணமகனுக்கு மணமகள் தேவை
- 1984, புரட்டாதி 2, BSc,MSc Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை
- 1982, கார்த்திகை 2, BSc,Srilanka மணமகனுக்கு மணமகள் தேவை
- 1982, அவிட்டம் 2, IT Professional,Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை
- 1986, திருவோணம் 4, Doctor,Srilanka மணமகனுக்கு மணமகள் தேவை

MMW

Real Matrimony(Pvt)Ltd
இல.05, வைமன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.
Tel : 021 4923 739 / 864 / 738
WWW.realmatrimony.com ,E-Mail : support@realmatrimony.com


# விற்பனைக்கு

★ MITSUBISHI, DELICA, PETROL VAN JAPAN 20-4xxx, முதல்பதிவு 1991, Power steering, முழுமையாக Tinkering Painting செய்யப்பட்ட வானும்,

★ Honda CB 125 மோட்டார் சைக்கிள் V I-4xxx,Japan முதல் பதிவு 2010, முதலாவது உடைமையாளர் கொண்ட மோட்டார் சைக்கிளும் உடன் விற்பனைக்குண்டு.

150, ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 071 221 4114

(33762)(6.6.7)

# வீடு வாடகைக்கு

2 Rooms, 2 Hall , 1 Kitchen, 2 Bathrooms என்பனவற்றுடன் போதியளவு வாகன தரிப்பிட வசதியுடன் கூடிய பகுதியான வீடு வாடகைக்கு உண்டு. தனியார் நிறுவனங்களுக்கு உகந்தது.

தொடர்பு: 0774894018,
0773717202

(33758)(6.7.11)

# 4 ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில்
30.11.1987
ஆண்டவன் அடியில்
10.03.2009

## புவேந்திரன் நிஜந்தன்

*நிஜம்தானே நிஜந்தனே! ஊர்கூட்டி உணவளிக்க*
*உன் இல்லம் இங்கே நிறைந்து கிடக்கிறது....!*
*உனக்கொருவாய் ஊட்டிவிட முடியாது*
*எம் உள்ளமெல்லாம் உறைந்து கிடக்கிறது....!*
*தவமின்றிக் கிடைத்தவரமே...*
*அறம் நாடிச் செல்லும் அகவா உனக்கு....?*
*நிஜம் தானோ? நியாயம் தானோ?*
*நிஜந்தனே....! கொற்றவனே! நலம் பெற்றவனே!*
*எங்கே ஐயா சென்று விட்டாய்?*
*சாமி பெற்ற பிள்ளையா நீ?*
*பூமி விட்டு பிறதேசம் செல்வதற்கு .....!*
*பொறுக்க முடியவில்லை உன் உறவை அறுக்க முடியவில்லை*
*புன்னகை சுமந்த மன்னவனே!*
*எம் எண்ணமெல்லாம் நிறைந்த கானகனே!*
*பொழுதுகள் உனக்காகவே அ[illegible] முடிகிறது*

புத்துவெட்டுவான்,
மாங்குளம். (24263)(2.6.7)

*நினைவுகளால் நிறைவுறும்*
குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்.

# வேலையாள்கள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் வியாபார நிலையத்துக்கு வேலையாள்கள் இருவர் தேவை. அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும்

தொடர்பு: 077 3923 036

# வீடு விற்பனைக்குண்டு

அல்லாரை வடக்கு, கொடிகாமத்தில் புது வீட்டுடன் கூடிய 14 பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு-021 222 8790,
078 303 3850

(33690)(5.6.7)

# வயல்காணி விற்பனைக்கு

கிளிநொச்சி 5 ஆம் வாய்க்காலில் 4 ஏக்கர் வயல் உறுதிக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0776126089

(27760)(2.6.7)

# காணி விற்பனைக்கு

கிளிநொச்சி, கரடிப்போக்கு சந்தியில் இருந்து 1KM தூரத்தில் உருத்திரபுரம் வீதியில் அரிசி ஆலைகளுக்கு அருகில் ¾ ஏக்கர் நிலம் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0778640738

(C/6649)(7.11)

# வீடு விற்பனைக்கு

யாழ்.நகரின் மத்தியில் பல்கலை தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகில் 3 பரப்பு வீட்டுடன் கூடிய காணி உடன் விற்பனைக்கு.

தொடர்பு:- சிவா - 0771298201

(6646)(2.6.7)

# வீடு வாடகைக்கு

மானிப்பாய் வீதி, ஐந்து சந்தியில் 7 அறைகள் கொண்ட, சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள், களஞ்சிய அறைகளாகப் பாவிக்க உகந்தது. பாரவூர்திகள் மற்றும் வாகன தரிப்பிட வசதிகள் கொண்டது.

தொடர்பு: 0777 679188

(33691)(2.6.7)

# வீடு விற்பனைக்கு

வெங்கடேசா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புதிய வீடு (1½ பரப்பு) விற்பனைக்குண்டு.

தொடர்பு:075 710 0884

(33760)(5.6.7)


# மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த France இல் குடியுரிமைபெற்று, தொழில் புரியும் 1976.12.22 இல் பிறந்த, பூராடம் முதலாம் பாதம், கிரக பாவம் 36 உடைய மணமகனுக்குப் பொருத்தமான மணமகள் எதிர்பார்க்கப்படுகிறது. தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு:- 0778449263

(33698)(2.6.7)

சிவமயம்



# யாழ்.கொழும்புத்துறை ஆத்திப்புலம்
# அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோயில்
# இரதோற்சவ சிறப்புமலர் - 24.02.2013



...மெல்லாம் பரந்து வியாபித்து விளங்குவதும் இறைவனின் பரம்பொருள் சக்தியாகும். இச்சக்திக்கு உருவ நாமம் கொடுத்து வழிபடும் முறை இந்து மக்களிடையே ...தொட்டு நிலவி வந்துள்ளது. இயற்கைச் சக்திகளைத் தெய்வீகமாகப் போற்றி அவற்றிற்கு உருவம் கொடுத்து வழிபட்ட நிலையே இறைசக்தி வழிபாட்டின் தொடக்கம் ...வ் வகையில் இறைவன் இல்லாத இடம் எது? எங்கும் இருக்கின்றார். எல்லா உயிர்களிலும் எல்லாப் பொருள்களிலும் அவர் வியாபித்திருக்கின்றார். இக் கருத்தை ...ம் உருக்கமாகவும்

'நற்பதத்தார் நற்பதமே' என்கின்ற பாசுரத்தில்
''நிற்பதொத்து நிலையில்லா நெஞ்சத்தின்னுள்
புலாம் உடம்பே புகுந்த கற்பகமே
உன்னை நான் விடுவேனல்லன்''

என்கின்றார் மணிவாசகர். அந்த வகையிலே ஆன்மாக்கள் லயப்படும் இடம் ஆலய மாகும். இவ்வாறான ஆலயமானது ஆகம மரபிற்கு ஏற்ப அமைக்கப்பட்டு கட்புலனாகாத தெய்வங்களை கண்ணெதிரே வடிவமைத்து மந்திர, தந்திர, கிரியா மார்க்கங்களால் வழிபடும் உபாயங்களை வகுத்துத் தந்துள்ளது. இங்ஙனம் சிறப்பாக எழுந்தருளியிருக்கும் கொழும்புத் துறை ஆத்திப்புலம் சந்திரசேகர பிள்ளையாருக்கு இன்றைய தினம் இரதோற்சவம் நடைபெறுகின்றது. விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்'' விநாயகனைத் தொழுதால் விரும்பிய அத்தனையும் கிடைக்கும் என்பது வேதவாக்காகும். அதற்கு அமைய இன்று தேர் ஏறிவரும் விநாயகப் பெருமானை வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெற்று பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல சந்திரசேகரபிள்ளையாரின் பாதார கமலங்களை பணிவுடன் வேண்டுகின்றேன்.

''லோகா ஸமஸ்த்தா சுகிநோபவந்து''

ச.இராசசேகரக்குருக்கள், ஆலய மஹோற்சவக்குரு.

### ஆசியுரை

வாக்குவரும் மாமலரான் நோக்குவரும் நுந்தா மேனிவரும் நல்ல பண்பட்ட மனமும் வரும். எப்படி வரும் என்றால் விநாயகனை பூக்கொண்டு வழிபட்டால் என ஔவைப்பாட்டி வேதவாக்காக இயம்பியுள்ளார். அந்த வகையிலே நந்தன வருடம் மாசித் திங்கள் (24.02.2013) ஞாயிற்றுக்கிழமை தேர் ஏறிவரும் கொழும்புத்துறை சந்திரசேரகப்பிள்ளையார் அனைத்து ஜீவராசிகளிற்கும் திருவருள் புரிய வேண்டி பாதார கமலங்களை வணங்கி சிறப்புற வாழ ஆசீர்வதிக்கின்றேன்.

'' சர்வேஜனா சுகிநோ பவந்து''

தானு. மகோதவக் குருக்கள்
காயத்திரி குருகுல அதிபர்,இணுவில்.

### ஆலய தலைவரின் வாழ்த்துச் செய்தி

மனிதனை மனிதனாக்கும் தன்மை ஆன்மீகத்திலே உண்டு அந்த ஆன்மீகத்தை கற்பிக்கும் இடமாக ஆலயம் விளங்குகின்றது. ஆலயத்தின் அதிமுக்கிய நிகழ்வாக இடம்பெறும் இரதோற் சவம் என்பது இறைவனுக்கு சங்கவரம் என்ற அடிப்படையிலே தோன்றிய தேர் உற்சவம் ஆகும். தேர் என்பது நடமாடும் ஆலயம் என்று கூட கூறுவர். இந்த நடமாடும் ஆலயமான தேரினை ஊர்கூடி இழுக்கும் போது இந்து மக்களின் வாழ்வில் ஒரு பொன்னான நாளாகவே கருதப் படுகிறது. இப் பொன்னாளிலே கொழும்புத்துறை சிறீ ஆத்திப்புலம் சிறீ சந்திரசேகர விநாயகர் திருவீதி உலாவிலே குலபேத ஏற்றத்தாழ்வுகளை மறந்து அனைத்து மக்களும் ஒற்றுமையாய் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டி கொள்கிறேன்.

''விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்''

ஆலய தர்மகர்த்தா சபை


## ★★★★★★★திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்★★★★★★★★

**விநாயகர்**
ஹார் வெயார்ஸ்
இல.14, நெடுங்குளம் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
T.P: 021 568 1137

**தேவி**
கொரினிகேசன்
267,கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:0212223318, 0212224020

**முத்தையா**
பேக்கரி
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
T.P:0779049691

**நிருநலக்கி**
ஹார் வெயார்ஸ்
நாவலர் வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

**சீரடி புத்தக சாலை**

இல.362, பிரதான வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
T.P: 0214923802
''கல்விக்கு செலவிடும் மூலதனம் நம் பரம்பரைக்கு நாம் சேர்க்கும் அழியாச்சொத்து''

**Yoga Jolly Shop**
24/3,2nd Cross Street
Colombuthurai,
Jaffna.

**தேவி கருமாரி பல்பொருள் வாணிபம்**
இல.29, நெடுங்குளம் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
077 860 9767

**தம்பிப்பிள்ளையும் மைந்தரும்**
கால்நடை மருந்து மற்றும்
கோழிக்குஞ்சு விற்பனை
343, K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:0212223353

சந்ததம் உன் புகழ் பாடிடுவோம் எம் சந்திரசேகரரே
**மெகா டிஜிற்றல்**
சகல விதமாக பிறிண்டிங்
வேலைகளுக்கும்
101, கண்டி வீதி,கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.
021 753 8305

**விநோத்து களஞ்சியம்**
இல.60.நெடுங்குளம் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

**சாருஜன் மணப்பந்தல் சேவை**
இல.10, 3ஆம் குறுக்குத் தெரு,
கொழும்புத்துறை ,
யாழ்ப்பாணம்.
0776642049

**அரிலாஸ்**
ரவல்ஸ்
வெபனியா-
யாழ்ப்பாணம்.
0777534884

**பால கணபதி**
பல்பொருள் வாணிபம்
